THE SUDAROLI
REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி


30.00

பக்கங்கள் -28

வார சஞ்சிகை

ஒக்ரோபர் 31- நவம்பர் 06, 2012

October 31- November 06, 2012





## துயர்வெளியில் வாழ்க்கை!

## அணுஉலை அச்சுறுத்தல்; இலங்கையை இந்தியா நிராகரிப்பு!





# ஆயுதங்களின் மௌனமும் அர்த்தமற்ற சமாதானமும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இப்படியும் ஒரு வினோத நோயா இந்த பெண்ணிற்கு!...

இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேன் பார்லோ, ஸ்டாபோர்ட்ஷயரில் உள்ள மேரிஹில் உயர்நிலைப்பள்ளியில் உணவுத் தொழில்நுட்ப ஆசிரியையாக இருக்கிறார்.

36 வயதாகும் இவருக்கு ஒரு பிரச்சினை உள்ளது. இவருக்கு கோபம் வந்தாலோ அல்லது உணர்ச்சி வசப்பட்டாலோ, அதிர்ச்சி அடைந்தாலோ, பலமாக சிரித்தாலோ, அதீதமாக தர்மசங்கடத்திற்குள்ளானாலோ உடனே தூக்கம் வந்து விடுமாம்.

இது அவரது டீன் ஏஜ் வயதிலிருந்தே இருந்து வருகிறதாம். இந்த பிரச்சினைக்குப் பெயர் 'நர்கோலெப்சி'. இதுபோக அவருக்கு 'கெட்டபிளெக்ஸி' என்ற உடல்நலப் பிரச்சினையும் உள்ளது.





இந்தப் பிரச்சினைகளுக்கு மத்தியிலும் ஜேன் ஒரு சிறந்த ஆசிரியையாக செயல்பட்டு வருகிறாராம். வகுப்பில் பாடம் எடுக்கும் போது சற்றும் டென்ஷனாக மாட்டாராம். மாணவ, மாணவியர் சேட்டை செய்தாலும் அவர் அமைதியாக அதை சமாளிப்பாராம்.

# இறந்த நபர் உயிரோடு வந்ததால் பரபரப்பு



அலாகோன்ஹாஸ் நகரில் இருக்கும் கார் சுத்தம் செய்யும் கம்பெனியில் ஜோஸ் மார்கோஸ் (வயது 41) வேலை செய்து வந்தார். சில நாட்களுக்கு முன்பு பொலிஸ் துறையில் இருந்து அவருடைய மனைவிக்கு ஒரு தகவல் வந்தது. உங்கள் கணவர் கொலை செய்யப்பட்டு விட்டார் என்பதே அந்த தகவல்.

இதனையடுத்து ஜோஸின் சகோதரர் சென்று உடலைப் பார்த்த போது அது தம்பியின் உடல் போலவே இருந்ததால் தங்களது சொந்த ஊரில் இறுதிசடங்கிற்கு ஏற்பாடு செய்தனர்.

இந்நிலையில் ஜோஸ் மார்கோஸ் தான் வேலை செய்த கம்பெனிக்கு அருகில் சாலையில் நடந்து வருவதை பார்த்த நண்பர் அதிர்ச்சி அடைந்தார்.

ஜோஸ் மார்கோஸ் உயிருடன் திரும்பியதைக் கண்டதும் பெற்றோர், உறவினர்கள் மகிழ்ச்சி அடைந்தனர். அதன்பிறகே ஆள்மாறாட்டம் காரணமாக இந்த குளறுபடி நடந்திருப்பது பொலிக்கு தெரியவந்தது.


கொலை செய்யப்பட்டு இறந்தது சாந்தோஸ் காமா என்ற மற்றொரு நபர் ஆவார். அவரும் கார் சுத்தம் செய்யும் நிறுவனத்தில் வேலை செய்தவர் என்பது மட்டுமின்றி உருவ தோற்றத்திலும் 2 பேரும் ஒரே மாதிரியாக இருந்தார்கள்

# மாயன் இனத் தோன்றலுக்கு அஸ்திவாரமிட்ட மன்னரின் சிலைகள் கண்டுபிடிப்பு

தற்போது 2000 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்ததாகக் கருதப்படும் மன்னர் ஒருவரின் சிலைகள் உட்பட பல்வேறு தொல்பொருட்கள் ஆராய்ச்சியாளர்களால் கௌதமாலாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

இம்மன்னரானவர் 2012ம் ஆண்டு உலகம் அழிவினை எதிர்நோக்குவதை எடுத்துக்கூறும் காரணிகளுள் ஒன்றான மாயன் கலண்டரை உருவாக்கிய மாயன் இனத்தவர்களின் தோன்றலுக்கு வழிவகுத்தவர் என்று குறித்த ஆராய்ச்சியாளர்கள் நம்புகின்றனர்.

















Australian Government

அவுஸ்திரேலியாவுக்கு வீசா இல்லாமல் படகுமூலம் நீங்கள் பயணம் செய்தால்

- உங்களது விண்ணப்பம் அவுஸ்திரேலியாவில் பரிசீலிக்கப்படாது போகலாம்.
- எனவே, நீங்கள் நவுறு, பப்புவா நியூகினி போன்ற வேறொரு நாட்டிற்கு இடமாற்றம் செய்ய வேண்டிய நிலை ஏற்படலாம்.
- இலங்கையிலுள்ள உங்களது குடும்பத்திருக்கு அனுப்பவென நவுறுவிலோ அல்லது பப்புவா நியூகினியிலோ நீங்கள் பணத்தைச் சம்பாதிக்க முடியாது.
- விசேட மனிதாபிமான திட்டத்தின் அடிப்படையில் உங்களது குடும்பத்தை உங்களுடன் இணைத்துக்கொள்ளவென உங்களால் விண்ணப்பிக்க முடியாது.

மேலதிகத் தகவல்களை www.youtube.com/user/notopeoplesmuggling என்ற முகவரியில் 'ஆட்கடத்தலுக்கு மறுப்பு' என்ற யூ டியூப் அலைவரிசை மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயுதங்களின் மௌனமும் அர்த்தமற்ற சமாதானமும்

● சந்திரசேகர ஆசாத்



உலகில் வாழும் பெரும்பான்மையான மக்கள் போரை விரும்புவதில்லை. அவர்கள் சமாதானமான, சுதந்திரமான, சுபீட்சமான ஒரு வாழ்வையே வேண்டி நிற்கின்றனர். ஆனால் போர் அவர்கள் மீது திணிக்கப்படுகிறது. போரின் துன்ப துயரங்களையும், பேரிழப்புக்களையும் சுமக்க வேண்டிய அவலத்துக்குள் தள்ளப்படுகின்றனர். பரந்துபட்ட பொதுமக்களின் உழைப்பையும், உரிமைகளையும் வெவ்வேறு வடிவங்களிலும் வெவ்வேறு கோணங்களிலும் தாம் மேற்கொள்ளும் ஒடுக்குமுறைகளை நிலை நிறுத்தவும் விரிவாக்கவும் போரைக் கையில் எடுக்கின்றனர். தமது மேலாதிக்கத்திற்கு எதிராக எழுச்சி பெறுபவர்களை பயங்கரவாதிகள் எனவும் தீவிரவாதிகள் எனவும் வர்ணிக்கின்றனர்.

கடந்த 40 வருடங்களாகக் கொலம்பிய உழைக்கும் மக்களின் உரிமைகளுக்காகவும், தேசிய நலன்களுக்காகவும் 'பாக்ஸ்' என அழைக்கப்படும் கொலம்பிய விடுதலை முன்னணி போராடி வந்தது. இது தமக்கென விடுதலைப் பிரதேசங்களை அமைத்து, அவற்றைத் தளமாகக் கொண்டு போராடி வந்த போதும் அது ஒரு பயங்கரவாத அமைப்பு எனவே வர்ணிக்கப்பட்டது. எனினும் பாக்ஸ் அமைப்பு ஒருபுறம் அரச படைகளுடனும், மறுபுறம் போதைவஸ்துக் கும்பல்களுடனும் உறுதியான போராட்டத்தை நடத்தி வந்தது.

அண்மையில் கொலம்பிய அரசிற்கும் 'பாக்ஸ்' அமைப்புக்குமிடையே நோர்வேயின் அனுசரணையுடன் ஒஸ்லோவில் சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பமாகின. அது பல உலக நாடுகளின் வரவேற்பைப் பெற்றது. அதேவேளையில் இப்பேச்சுக்கள் ஆரம்பிக்கப்பட்ட தருணத்தில் பாக்ஸ் அமைப்பின் தலைவர் ஒரு முக்கியமான கருத்தை வெளியிட்டார். அதாவது ஆயுதங்கள் மௌனிப்பது என்பது மட்டும் உண்மையான சமாதானமாகி விடமுடியாது என்பதுதான் அது. அவரின் இக்கருத்தானது உலக வரலாற்றிலிருந்தும், தனது நீண்டகாலப் போராட்ட அனுபவங்களிலிருந்தும் கற்றுக் கொண்டதன் காரணமாக வெளிப்படுத்தப்பட்டதாகும்.

இலங்கையில் 2009 மே19 ம் நாளுடன் ஆயுதங்கள் மௌனித்து விட்டன. இலங்கை அரசு சமாதானத்தை நிலைநாட்டிவிட்டதாகக் தம்பட்டமடிக்கிறது. ஆனால் சமாதானமோ, சமாதானம் தோன்றக் கூடிய வாய்ப்புகளோ வெகு தொலைவிலேயே உள்ளன. ஆனால் ஒடுக்குமுறையாளர்கள் இலங்கை அரசுடன் கைகோர்த்து இங்கு சமாதானம் நிலவுவதாகக் காட்ட முயல்கின்றனர். 'பாக்ஸ்' அமைப்பின் தலைவரின் வார்த்தைகள் அவர்களுக்கு ஒரு நல்ல பதிலடி என்பதில் சந்தேமில்லை. வெறும் ஆயுதங்களின் மௌனத்தை மட்டுமே சமாதா னமாகக் காட்டுவதும், உண்மையான சமாதானம் உருவாகும் சூழலை குழப்புவதும் இந்த ஒடுக்கு முறையாளர்களின் விடாப்பிடியான கொள்கையாகும்.

> இலங்கையால் முன்வைக்கப்படும் சமாதான கோசத்தை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் தெளிவாகவே விளங்கிக்கொண்டுள்ளன. அதே வேளையில் இலங்கை ஒரு பிழையான முன்னுதாரணத்தை உலகின் முன் வைத்து அதை நியாயப்படுத்த முயல்கிறது என்பதையும் மூன்றாம் உலகின் சில ஒடுக்குமுறை ஆதிக்க சக்திகள் அதைப் பிரபலப்படுத்த முனைகின்றன என்பதையும் மறுத்துவிட முடியாது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் கடந்த 60 வருடங்களாக சுயாட்சி கோரிவரும் 'மோறா' தேசிய விடுதலை முன்னணிக்கும் பிலிப்பைன்ஸ் அரசுக்குமிடையே மோறா முஸ்லிம் மக்களுக்கு சுயாட்சி வழங்குவது என்ற அடிப்படையில் ஒரு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்தாகியுள்ளது. இது அடிப்படையில் பிலிப்பைன்ஸ் நாட்டில் ஒரு நிரந்தர சமாதானத்தை எட்ட வைக்கப்பட்ட முதல்படியாகும். மோறா மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டால் ஆயுதப்போராட்டத்திற்கான தேவை இயல்பாகவே இல்லாமல் போய்விடும்.

பிலிப்பைன்ஸ் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட முன்னாள் சர்வாதிகாரி மார்க்கோஸ் அவர்களின் வழி வந்த பிற்போக்கு சக்திகளுக்கும் ஆயுதக்காரர்களுக்கும் அதை ஜீரணிக்க முடியவில்லை. அந்நாட்டின் முக்கிய நாளேடான 'பிலிப்பைன்ஸ் ரைம்ஸ்' சமாதானத்தை நிலை நாட்டுவதில் பிலிப்பைன்ஸ் இலங்கையைப் பின்பற்ற வேண்டும் என அறிவுரை கூறியுள்ளது. அது மட்டுமின்றி இலங்கை சமாதானத்தை நிலை நாட்டுவதில் வெற்றி பெற்றது மட்டுமன்றி அதன் அனுபவத்தை ஏனைய நாடுகளுடன் பகிர்ந்து கொண்டதாகவும் அவையே மிகச் சிறந்த வழிமுறை எனவும் தெரிவித்துள்ளது. அதாவது சுயாட்சியை வழங்கி சமாதானத்தை ஏற்படுத்துவது எனவும், ஏற்கனவே போரில் கொல்லப்பட்ட ஒன்றேகால் இலட்சம் மோறா மக்களை விட மேலும் பல இலட்சம் பேரை அழித்து விடுதலைப் போராட்டத்தை ஒதுக்கி அதன் மூலம் ஒரு போலியான சமாதானத்தை உருவாக்கவேண்டும் எனவும் அக்கருத்து அர்த்தப் படுகிறது.

இன்னும் சொல்லப்போனால் ஆயதங்களை மௌனிக்க வைப்பதன் மூலம் ஒரு போலிச் சமாதானத்தைக் காட்சிப்படுத்தினாலே போதும் என்றே அப்பத்திரிகை கூறுகிறது. இலங்கை அரசின் போர்க் குற்றங்களுக்கும் மனிதகுல விரோத நடவடிக்கைகளுக்கும் அது ஆசி வழங்கியுள்ளது.

இலங்கையால் முன்வைக்கப்படும் சமாதான கோசத்தை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் தெளிவாகவே விளங்கிக்கொண்டுள்ளன. அதே வேளையில் இலங்கை ஒரு பிழையான முன்னுதாரணத்தை உலகின் முன் வைத்து அதை நியாயப்படுத்த முயல்கிறது என்பதையும் மூன்றாம் உலகின் சில ஒடுக்குமுறை ஆதிக்க சக்திகள் அதைப் பிரபலப்படுத்த முனைகின்றன என்பதையும் மறுத்துவிட முடியாது.

இலங்கையும் விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக்கொண்டு வந்ததுடன் சமாதானம் நிலை நாட்டப்பட்டுவிட்டதாகவும் பயங்கரவாதம் ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் சர்வதேச அளவில் பெரும் பரப்புரையை மேற்கொண்டு அதை உலகை நம்ப வைக்கப் பகீரதப் பிரயத்தனம் எடுத்து விடுகிறது. ஆனால் நடைமுறையில் உள்ளூரில் இடம்பெறும் ஒவ்வொரு நகர்வுகளும் ஒரு போர்காலத்தில் மேற்கொள்ளப்படுபவைக்கு எவ்விதத்திலும் குறைவின்றியே இடம்பெற்று வருகின்றன. அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச போர்வீரர்களின் பெற்றோர்களுக்கு மானியம் மற்றும் காப்புறுதி வழங்கும் நிகழ்வில் உரையாற்றும்போது கடந்து மூன்று வருடங்களுக்கு முன்பு படையினர் கிளிநொச்சியைக் கைப்பற்றியபோது நேசப்பற்றுள்ள ஒவ்வொருவரும் பெருமிதம் கொண்டதாகவும், படையினரைக் போர்க்குற்ற நீதி மன்றத்தின் முன் நிறுத்தி அவ்வெற்றியைச் சிலர் கொச்சைப் படுத்த முயல்வதாகவும் விடுதலைப்புலிகள் உள்நாட்டில் ஒழிக்கப்பட்டாலும் இன்னும் சர்வதேச ரீதியில் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பாதுகாப்புச் செலவினம் எவ்விதத்திலும் குறைக்கப் படவில்லை என்பதையும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

அதாவது போர் இன்னும் முடியவில்லை என்பதை அவர் தனது வார்த்தைகளாலேயே ஆணித்தரமாக வெளியிட்டுள்ளார். அது மட்டுமன்றி நடைமுறையில் கூட தமிழ்மக்களின் மீதான ஒடுக்குமுறைகள் மேலும் மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.

இலங்கையில் ஆயுதங்கள் மௌனித்து விட்டன என்பதை அவரும் மறுத்துவிட முடியாது. ஆனால் அரச தரப்பின் ஆயுதங்கள் மௌனமான நிலையிலும் நீட்டப்பட்டே உள்ளன. அந்த நீட்டப்பட்ட ஆயுதங்களின் நிழலின் போர் இன்னும் தொடர்ந்து கொண்டேயுள்ளது. சமாதானம் எட்டப்படமுடியாத தொலைவை நோக்கி விலகிப் போய்க் கொண்டிருக்கிறது.

அடிப்படையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பித்தமைக்கான காரணம் பூரணமாக இல்லாதொழிக்கப்படும்போதே போரை முடிவிற்கும் கொண்ட வர முடியும். ஆனால் மேலும் மேலும் தமிழ் மக்கள் மீது திணிக்கப்படும் புதிய புதிய ஒடுக்குமுறைகள் மூலம் போல் அடிப்படையாக இருந்த காரணங்கள் மேலும் வலுப்படுத்தப்படுகின்றன. அதாவது மூச்சுவிடக்கூட அஞ்சுமளவுக்கு ஒடுக்குமுறைகளைக் கொடூரப்படுத்துவதன் மூலம் ஒரு போலியான சமாதானத்திற்கான தோற்றப்பாட்டை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை அரசால் இதுவரை இனப்பிரச்சினைத் தீர்வுக்கான எந்த ஒரு உருப்படியான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அரசுடன் பேச்சு, சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் பேச்சு, நாடாளுமன்றத் தெரிவுக்குழு என பல்வேறு விதமான குழப்பங்களை ஏற்படுத்தி ஒரு புறம் காலம் இழுத்தடிக்கப்படுகிறது. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு 13 வது திருத்தச்சட்டமும் மேலதிகமும் என கூறப்பட்டுக்கொண்டே மறுபுறத்தில் மாகாணசபையின் அதிகாரங்கள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அதிகாரப் பரவலாக்கல் மட்டும்தானா ஒரேவழி என்பது இலங்கையின் சகல தரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொள்கையாகும். சர்வதேசமும் கூட அதை ஏற்றுக்கொண்டுள்ளது.

ஆனால் இலங்கை அரசோ மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட குறைந்த பட்ச அதிகாரங்களைக்கூற ஒவ்வொன்றாகப் பறித்து அதிகாரத்தை மையத்தில் குவிக்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருகிறது.

அதாவது இனப் பிரச்சினைக்கு தீர்வு என்பது எட்டாத தொலைவிற்குத் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஒரு நிரந்தர சமாதானம் ஏற்படக்கூடிய சூழலும் கருவழிந்து கொண்டு செல்கிறது.

அது மட்டுமின்றி ஆயுதங்களின் நிழலில் போலியாக காண்பிக்கப்படும் சமாதான இருளுக்குள் ஒரு பேரும் இன அழிப்பே இடம் பெறுகின்றது. அதாவது பாதுகாப்பு அபிவிருத்தி என்ற போர்வையில் தமிழ் மக்கள் பாரம்பரியமாக வாழ்ந்த குடியிருப்புகள், பயிர் நிலங்கள், மீன்பிடிமையங்கள் என்பன அபகரிக்கப் படுகின்றன. அப்படி அபகரிக் கப்பட்ட இடங்களில் பெரும் இராணுவ முகாம்கள் அமைக்கப்படுகின்றன. சுற்றுலாவிடுதிகளும், அதனுடன் சம்பந்தப்பட்ட பௌத்த குடியேற்றங்களும் நிறுவப்படுகின்றன. ஒரு பௌத்தன் கூட வாழாத பிரதேசங்களிலெல்லாம் புத்தர் சிலைகளும் கோவில்களும் அமைக்கப்படுகின்றன. பாடல் பெற்ற சைவத் திருத்தலங்கள் கூட முன்னயைப் பௌத்த விகாரைகள் என சொல்லப்பட்டு அவற்றை பௌத்த விகாரைகள் என சொல்லப்பட்டு அவற்றை பௌத்த மயப்படுத்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன. இராணுவக் குடியிருப்புகள் என்ற பேரில் பெரும் சிங்களக் குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. இவற்றை தமக்கேற்றபடி கையாள அரச நிர்வாக சேவையின் உயர் பதவிகளுக்குச் சிங்களவர்களே நியமிக்கப்படுகின்றனர். சிவில் நிர்வாக நடவடிக்கைகளை இராணுவம் கட்டுப்படுத்தும் நிலையே நிலவுகிறது.

ஒட்டுமொத்தத்தில் நில அபகரிப்பு, கலாசாரத் திணிப்பு என்பன இராணுவ ஒடுக்குமுறை மூலம் தமிழ் இனத்தின் தேசிய தனித்துவத்தைச் சிதைத்து அழிக்கும் ஒரு இனஅழிப்பு முயற்சிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

இந்தகைய ஒரு சமாதானத்தையே பிலிப்பைன்ஸ் அரசு மேற்கொள்ள வேண்டும் என 'பிலிப்பைன்ஸ் ரைம்ஸ்' கேட்டுள்ளது ஆனால் பிலிப்பைன்ஸ் அரசு சுயாட்சி வழங்குவதன் மூலம் உண்மையான சமாதானத்தை எட்ட ஒப்புக்கொண்டுள்ளது. ஆயுதங்கள் மௌனிப்பது என்பதே உண்மையான சமாதானம் அல்ல என்பது இலங்கை மக்களின் அனுபவமுமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்மை நாமே

## தொலையா நினைவுகள்...

நெடுந்தீவு மகேஷ்

கற்பனையும் கருத்தும் பொதிந்த அந்தக் கதையை, அன்று நான் வாசித்த டால்ஸ்டாயின் நீதிக்கதையை, இன்று ஞாபகத்திலிருத்தி மீட்டுப் பார்க்கிறேன். இன்றைய நாட்டு நடப்புகளுக்கும் இந்தக் கதைக்கும் ஏதோ தொடர்புகள் இருப்பதாகவே எனக்கு எண்ணத் தோன்றுகிறது.

ஒரு வல்லூறு தனது எசமானின் அரவணைப்பில் அன்போடு வளர்ந்து வந்தது. குஞ்சாக இருந்தபோது அதற்குப் பல்வேறு செய்கைகளைப் பயிற்றி உணவூட்டிய எசமான் தனது விருப்பத்திற்கு இசைவானவாறு அதனிடத்தில் காணும் பழக்கங்களை வரவேற்பதோடு பாராட்டியும் வந்தான். வல்லூறு பலவேளைகளில் நெருக்கமாக எசமானுடன் அவனது மணிக்கட்டிலேயே அமர்ந்திருக்கும். அதே வேளை அந்த எசமானின் வீட்டிலே ஒரு சேவலும் வளர்ந்து வந்தது. அது எசமானுக்கு அருகிலே வருவதற்குப் பயந்தது. எசமானைக் கண்டால் தூரமாக ஓடிச் சென்றுவிடும். எசமான் அதன் அருகிலே செல்லும் போதெல்லாம் சேவல் பெரிதாகக் கூச்சலிட்டவாறு பறந்து போய் விடும். சேவலின் இந்தச் செய்கைகளை அவதானித்து வந்த வல்லூறு, ஒருநாள் சேவலைப்பார்த்து "சேவலே நீ ஏன் எங்கள் எசமானைக் கண்டதும் பயந்து ஓடுகிறாய்? அவரின் அருகிலே வரவும் பயப்படுகிறாய்!. அவர்தானே உனக்கும் உணவு தருகிறார். அவரிடத்திலேதானே நீ வளர்கிறாய். நீ ஏன் நன்றி இல்லாதவனாக இருக்கிறாய்? என்னைப்பார் நான் அவரின் அரவணைப்பிலேயே வளர்கிறேன். அவரின் அருகில் செல்வதற்கும் இருப்பதற்கும் நான் பயப்படுவதில்லையே! காட்டுப் பறவையான எனக்கு இத்தனை வசதிகளையும் அவரே செய்து தருகிறார் என்றால் வீட்டுப் பறவையான உனக்கு எத்தனையோ வாய்ப்புகளையும் வசதிகளையும் அவர் செய்து தருவார்தானே!" என்றது. அதனைக் கேட்ட சேவல் "நீங்கள் எசமானைக் கண்டு ஓடாமல் இருக்கலாம் ஏனென்றால் அவரின் சாப்பாட்டு மேசையின் கீழே ஒருபோதும் வல்லூறுகளின் எலும்புகள் சிந்திக் கிடப்பதில்லை. அங்கே கிடப்பதெல்லாம் எமது இனத்தவரின் எலும்புகளே! உங்களை அவர்கள் ஒருபோதுமே கொன்று தின்பதில்லையே. நீங்களோ அவரிடத்தில் உணவையும் உதவிகளையும் பெற்று வாழ்வதும் வளர்வதும் உங்களுக்கு நன்மை தருவதாக இருக்கலாம். அது பலவேளைகளில் உங்களுக்குப் பெருமையாகவும் இருக்கலாம். ஆனால் எங்களால் அதனைச் செய்ய இயலாதே! எங்கள் இனத்திற்கு அவரால் ஏற்படும் அழிவுகளை



எண்ணும்போது அவருடன் சேர்ந்திருக்கும் உங்களைப் போன்றவர்களுக்கும் அவரின் புத்திதான் இருக்கும் என்பதை நான் சொல்லியா இந்த உலகம் தெரிந்து கொள்ளப்போகிறது" என்றது.

அப்படியா! என்று ஆச்சரியத்தோடு கேட்ட வல்லூறை ஏளனமாகப் பார்த்த சேவல் "நீங்கள் மனிதர்களைக் கண்டு ஓடாமலிருக்கலாம், வேகவைத்த கோழிகளையும் குஞ்சுகளையும் தின்று கொழுத்திருக்கும் எசமானர்களைக் கண்டால் நாங்கள் அருகிலே செல்ல மாட்டோம்" என்றது சேவல். இது டால்ஸ்டாயின் கதை.

இந்தக் கதையில் வந்த பிரதான கதாபாத்திரத்தைப் போல அச்சத்தை ஏற்படுத்துவதும் அருகிலே செல்வதற்கு அருகதையற்றதுமான செயல்களையும் தேர்ந்த எசமானர்களைப் போன்ற அரசியலார் பலரையும் இன்று நாம் காண்கிறோம். அவர்களோடு சேர்ந்திருக்கும் வல்லூறுகளின் வார்த்தைகளும் அத்தகையவையாகவே இருப்பதுவும் எம்மை ஆச்சரியப் படுத்தவில்லை. ஏனெனில் அவற்றின் பழக்கங்களும் குணமும் அத்தகையவைகளே! எமது அச்சத்திற்கும் அழிவுக்கும் இவர்களே காரணராகின்றனர். எனவே சேவல்களைப் போன்று பொது மக்களாகிய நாம் அவர்களைவிட்டு விலகி எமது பாதுகாப்பை நாமே தேடித் தெரிந்து கொள்வதுதான் மிகவும் பொருத்தமானது என்பதைக் கற்றுக்கொள்வோம்.

---

டெட்சுகோ குரோயாநாகி என்ற பெண்மணி தன் வாழ்க்கையை திரும்பிப் பாரத்திருக்கும் கதை தான் டோட்டோ - சான். டெட்சுகோ குரோயாநாகி பின்னாளில் ஜப்பான் முழுக்கத் தெரிந்த முகமானார். தொலைக்காட்சியில் தொகுப்பாளினியாக பணியில் இருந்தார். (இப்போது ஓய்வில் இருக்கிறார் என்று நினைக்கிறேன்) தொடர்ந்து மிகச்சிறந்த பல

# டோட்டோ - சான்
# ஜன்னலில் ஒரு சிறுமி

விருந்துகளைப் பெற்றிருக்கிறார்.

நாலில், தான் இப்படி நல்ல நிலைமையில் இருப்பதற்கு டோமாயி என்ற பள்ளியில் தன் தொடக்கக்கல்வி கற்றது தான் என்று கூறுகிறார். நாம் பார்த்து வளர்ந்த பள்ளி போல, டோமாயி சாதாரணப்பள்ளி அல்ல. இனி பயன்படாது என ஒதுக்கப்பட்ட, ரயில் பெட்டிகளை வாங்கி, அதை வகுப்பறைகளாக மாற்றி, பாடங்களை கற்றல்வழி போதித்த பள்ளி தான் டோமாயி.

பல பள்ளிகளில் இருந்தும் டோட்டோ சான் வெளியேற்றப்படுகிறாள். எந்தப் பள்ளியிலும் அவளை அதிக நாட்கள் இருத்திக்கொள்ள பள்ளி நிர்வாகம் சம்மதிப்பதில்லை. இதனாலயே டோட்டோசானின் அம்மாவுக்கு மிகுந்த வருத்தமாகிறது.

அப்போது தான் டோமாயி பற்றி அறிந்து அங்கே அழைத்துவருகிறார். புதுப்பள்ளியின் நேர்முகத்தேர்வுக்கு ஏகப்பட்ட முன் தயாரிப்புகளுடன் டோட்டோசானை தாரப்படுத்தி, அங்கே அழைத்துவருகிறார் அம்மா. பள்ளியில் தலைமை ஆசிரியர் டோட்டோசானுடன்



பேசவேண்டும் நீங்கள் வெளியே இருங்கள் என்று அம்மாவை வெளியேற்றிவிட்டு அவளுடன் பேசுகிறார்.

முடிவில் அந்த பள்ளியின் தலைமை ஆசிரியருக்கு டோட்டோசானை பிடித்துவிடுகிறது. டோடோசானுக்கும் பள்ளிப் பிடித்துவிட அங்கே சேரக்கப்படுகிறாள்.

பொதுவாகவே எல்லாப் பள்ளிகளிலும் உடல் ஊனமுற்ற குழந்தைகளை நடத்தும் விதம் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. ஆனால் டோமாயில் எல்லா குழந்தைகளும் ஒன்று தான். அப்படி அங்கே டோட்டோசானுக்கு மாற்றுத்திறனுடைய சில நண்பர்கள் வாய்க்கிறார்கள். அவர்களோடு இவள் விளையாடும், பேசும் காட்சிகள் நம்மையும் [illegible] நல்ல மொழிபெயர்ப்பு. மொழிபெயர்ப்பாளர்கள் வள்ளிநாயகம், பிரபாகரன் ஆகியோரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

கற்றல் முறையில் இருக்கும் வேறுபாடு குறித்து டோட்டோ சானின் அம்மா படும் வேதனைகளையும் அழகாய் பதிவு செய்திருக்கிறார். மதிய உணவின் போது, எல்லாக் குழந்தைகளையும் ஒன்றாக அமர்த்தி, கடலில் இருந்து கொஞ்சம், மலையில் இருந்து கொஞ்சம் என்று ஆசிரியர் சொல்லி உணவு உண்பதைக்கூட நுட்பமாக கற்றுக்கொடுப்பதைப் படிக்கும் போது நிச்சயம் எனக்கு என்னவோ ஓர் ஏக்கம் தோன்றியது.

டோமாயி பள்ளி இப்போது இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதன் தாக்கத்தினை என்னால் நன்கு உணர்ந்துகொள்ள முடிகிறது. பல இடங்களில் மிகுந்த ஏக்கத்தினை அடைந்தேன். நூலை வாசித்த பின் குறைந்தது, அதைப் பற்றி நூறுபேரிடமாவது பேசி இருப்பேன். அந்த பள்ளியின் நினைவு இன்னும் எனக்குள் இருந்துகொண்டே இருக்கிறது.


புத்தக வாசிப்பு இருப்பவர்களும், இல்லாதவர்களும் கூட ஒரு முறை இப்புத்தகத்தினை வாசித்துப் பார்ப்பது அவசியம் என்று கருதுகிறேன்.

இக்கதையை தழுவி, தமிழில் திரைக்கதை அமைத்தால், சிறந்த படமாக கொண்டுவரலாம் என்று நம்புகிறேன்.

-எஸ்.பாலபாரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணுஉலை அச்சுறுத்தல்; இலங்கையை இந்தியா நிராகரிப்பு!



*சிறந்த நிபுணர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் ஆகியோரை உள்ளடங்கியதான ஓர் கடின பணிக்கான படைப் பிரிவை, நெருக்கடியான நிலைகளின்போது மக்கள் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் முன்னெச்சரிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காகவும் உருவாக்கியுள்ளனர். ஆயினும் அரசாங்கத்திற்கு இவ்வணுஉலை அமைப்பின் ஆபத்துக்கள் குறித்து ஆலோசனை வழங்கத் தவறிவிட்டதாக சிறிலங்கா அதிகாரிகளை உள்ளூர் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் குறைகூறுகின்றனர்.*

விரைவில் தமிழ் நாட்டிலுள்ள கூடங்குளத்தில் இயங்கவுள்ள அணு உலையின் பாதுகாப்புக் குழுவில் சிறிலங்காவின் பிரதிநிதிகள் சிலரையும் ஓர் அங்கமாகச் சேர்த்துக் கொள்ளும்படி கடந்த ஒரு வருட காலமாகச் சிறிலங்கா விடுத்திருந்த வேண்டுகோளினை ஏற்றுக்கொள்வதற்கு இந்தியா மறுத்துவிட்டது. இது நாடுகளுக்கிடையிலான நட்புணர்வினைப் பாதிக்கும் ஒரு தெளிவான செயலாகும் எனச் சிறிலங்காவின் அணுசக்தி அதிகாரசபையின் (IAEA) தலைவரான ரஞ்சித் விஜயவர்தனா தெரிவித்துள்ளார்.

கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பதாக டில்லியில் இரு நாட்டு அரசாங்கங்களின் அதிகாரிகளும் சந்தித்து அணுஉலை குறித்த மனச் சஞ்சலங்கள் பற்றி இரண்டு நாட்களாகக் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளனர். ஆயினும் இந்தியத் தரப்பினர் வெளிப்படையாக ஓர் தீர்மானத்தையும் எடுக்காது, தொடர்ந்தும் ஒரே நிலைப்பாட்டினைக் கொண்டிருக்கும் நிலைமையே காணப்படுகின்றது.

கூடங்குளம் அணு உலையின் பாதுகாப்புக் கண்காணிப்புக் குழுவில் தாமும் ஓர் அங்கமாக இருப்பதற்கே சிறிலங்காவின் அணுசக்தி அதிகாரசபை இந்திய தரப்பின் அனுமதியை நாடிப்பெற முயல்கின்றது. கருத்து மாறுபாடுகளுக்குள்ளாகியிருக்கும் கூடங்குளம் அணு உலையானது சிறிலங்காவின் வடமேற்குக் கடற்கரையோரத்திலிருந்து ஒருசிலவான 160 கி.மீற்றர்கள் தொலைவிலேயே அமைந்துள்ளது.

"அந்த அணு உலையின் செயற்பாடுகள் குறித்து நாங்கள் மிக நெருக்கமாக அவதானிப்பதில் நாட்டம் கொண்டுள்ளோம். எனவேதான் நாங்களும் அதன் பாதுகாப்பு கண்காணிப்புக் குழுவில் ஓர் அங்கம் வகிப்பதற்கு இந்தியாவிடமிருந்து அனுமதியைப் பெற முயல்கின்றோம்" எனத் தலைவர் டாக்டர், விஜயவர்த்தனா கூறியுள்ளார்.

அணு உலையால் சுற்றுச் சூழலுக்கான பாதுகாப்புப் பிரச்சினைகள் இருந்தும் அது தொடர்பில் கொழும்பில் கருத்துக்களை தொடர்புடைய அதிகாரிகளுக்குத் தெரிவிக்க விரும்பாதபோதிலும் ஒருவடத்திற்கு முன்னரே டில்லியில் வைத்து இந்தியாவிற்கு எமது இசைவினைத் தெரிவித்து விட்டோம். ஆயினும், இம்மாதத் தொடக்கம் வரையில் இந்தியத் தரப்பு பதிலளிக்கத் தவறிவிட்டது எனவும் அவர் கூறினார்.

இம்மாதத்தில் புதுடில்லியின் அழைப்பின் பேரில் அணுசக்தி அதிகார சபை, மின்சக்தி வலு அமைச்சர் மற்றும் வெளிவிவகார அமைச்சு ஆகியவற்றின் அதிகாரிகளை உள்ளடக்கிய ஓர் குழுவினர் இந்தியா சென்று அங்கு இந்திய அதிகாரிகளுடன் இது விடயம் தொடர்பில் ஓர் நீண்ட கலந்துரையாடலை நடத்தினார்கள். எனினும் அணு உலையின் கண்காணிப்பு விடயத்தில் சிறிலங்கா ஓர் அங்கமாகச் செயற்படுவது குறித்து உறுதியான உத்தரவாதத்தைச் சிறிலங்கா பெறுவதற்குத் தவறியதுடன், மேலும் இது குறித்துப் பேசுவதற்கான சந்திப்பு அடுத்த வருட நடுப்பகுதிக்குப் பின் தள்ளிப் போடப்பட்டுவிட்டது. எனினும் திட்டமிட்டபடி அணுஉலை இவ்வருட இறுதியில் இயங்கவுள்ளது. இதுவொன்றே இது விடயத்தில் தகவலைப் பகிர்ந்து கொள்ள இந்தியா விரும்பவில்லை என்பதற்குப் போதுமான அடையாளமாகும்.

"சம்பந்தப்பட்ட ஒவ்வொருவரின் ஆர்வத்தினையும் இந்தியா நிச்சயமாகக் கவனத்திலெடுத்து ஒத்துழைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே நாங்கள் இரு நாடுகளையும் சேர்ந்த இரண்டு குழுக்களை உள்ளடக்கிய ஓர் அணுகுமுறையினை அறிமுகம் செய்திருந்தோம். ஆனால் அது குறித்து இந்தியா சற்றும் கவனத்தில் எடுக்கவேயில்லை" என விஜயவர்த்தனா விசனம் தெரிவித்துள்ளார்.

மேலும் அணு உலையில் அசம்பாவிதங்கள் ஏதும் நேருமாயின் அதற்கான முன்னெச்சரிக்கைக்கான நடைமுறைகளை வழங்க இந்தியா விரும்புவதாகக் கூறப்பட்டது. ஆயினும் நாங்கள் ஏற்கனவே மக்கள் வாழும் கடலோரப் பகுதிகளில் முன்னெச்சரிக்கைக் கருவிகளைப் பொருத்தியது உள்ளடங்கலாக பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவிட்டோம்.

சர்வதேச அணுசக்தி அதிகார சபையினால் (IAEA) வழங்கப்பட்ட முன்னெச்சரிக்கை கருவிகள் ஏற்கனவே கடற்படையினரின் கண்காணிப்புப் பாசறைகள் அமைந்துள்ள இடங்களான காங்கேசன்துறை, மன்னார், நெடுந்தீவு, கல்பிட்டி மற்றும் கொழும்பில் உரிய முறையில் பொருத்தப்பட்டுவிட்டன. மேலும் இத்தகைய கருவிகளை காலி, திருகோணமலை மற்றும் சமனலவெவ ஆகிய இடங்களில் பொருத்தவுள்ளதாகவும் விஜயவர்த்தனா கூறியுள்ளார்.

அத்துடன் பாதுகாப்புப் படை அதிகாரிகள், சிறந்த நிபுணர்கள், தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ நிலைய அதிகாரிகள் ஆகியோரை உள்ளடங்கியதான ஓர் கடின பணிக்கான படைப்பிரிவை நெருக்கடியான நிலைகளின்போது மக்கள் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முன்னெச்சரிக்கைகள் குறித்து ஆலோசனை வழங்குவதற்காகவும் உருவாக்கியுள்ளனர். ஆயினும் அரசாங்கத்திற்கு இவ்வணுஉலை அமைப்பின் ஆபத்துக்கள் குறித்து ஆலோசனை வழங்கத் தவறிவிட்டதாக சிறிலங்கா அதிகாரிகளை உள்ளூர் சுற்றுச் சூழல் ஆர்வலர்கள் குறைகூறுகின்றனர்.

'சுற்றுச் சூழல் நீதி மற்றும் பூமியின் நண்பர்கள்' மையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளரான கெமந்த வித்தனாகே கூடங்குளம் அணுஉலையின் பின்விளைவுகள் குறித்தும் அத்துடன் இது பிரச்சினை தொடர்பிலுள்ள மோசமான ஆபத்துக்கள் குறித்தும் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்க அணுசக்தி அதிகாரசபை தவறிவிட்டதாகச் சாடியுள்ளார்.

அணுஉலைக்கு எதிராக இந்தியாவிலும் பல ஆர்ப்பாட்டங்கள் மக்கள் தரப்பினராலும், அரசியல் கட்சியினராலும் நடத்தப்பட்டன. நடந்து கொண்டும் இருக்கின்றன. ஆனால் மிக அருகிலிருக்கும் நாடான சிறிலங்கா கைகட்டி டில்லி அதிகாரத்தரப்பினர் முறையில் கூறுவதைக் கேட்டுக்கொண்டிருப்பது வேடிக்கையாகவே உள்ளது.

அதுமட்டுமன்றி கூடங்குள அணு உலையில் விபரீதமெதுவும் நிகழுமேயாயின், மோசமான பின்விளைவுகளையும் அல்லது இடையூறுகளையும் ஏற்படுத்தக்கூடிய, வேகமாகப் பரவும் கதிர்வீச்சுத் துணிக்கைகளினால் ஏற்படக்கூடிய தாக்கங்களில் இருந்து தப்புவதற்குச் சிறிலங்காவின் முன்னெச்சரிக்கைக் கருவிகளும் மற்றும் ஏனைய வழிமுறைகளும் ஒரு சொற்ப அளவில் மட்டுமே உதவிபுரிய முடியும்.

மேலும் சிறிலங்காவின் கடலோரப் பகுதிகள் மிகவும் எதிர்ப்பாற்றல் குன்றிய நிலையிலேயே உள்ளன. உதாரணத்திற்கு கூடங்குளத்திலிருந்து புத்தளம் 160 கிலோ மீற்றர்கள் தொலைவில் மட்டுமே உள்ளது. அதேவேளையில் தமிழ் மாநிலத்தின் சென்னை நகரம் கூடங்குளத்திலிருந்து 450 கி.மீற்றர்கள் தொலைவிலுள்ளது. இதன் காரணமாகவே இந்தியா இதுகுறித்து உண்மையில் அதிகம் கவலை கொள்ளாதிருக்கின்றது.

அது மட்டுமல்லாது அணு உலைக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள்களின் கழிவுகள் மற்றும் உலையிலிருந்து வெளியேறும் கொதிநீர் என்பவை குழாய்கள் மூலம் இந்து சமுத்திரத்தில் செலுத்தப்படுவதால் இக்கடற்பிராந்தியத்தில் உள்ள கடல் வாழ் உயிரினங்களுக்கு நேரக்கூடிய பேரனர்த்தம் குறித்தும் சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் அச்சமுறுகின்றனர்.

ரஷ்யாவினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த அணுசக்தி ஆலையானது ஆறு தொடக்கம் ஒன்பது வரையிலான அணுஉலைகளைக் கொண்டதும், ஆசியாவிலேயே மிகப் பெரியதுமாகும். அத்துடன் 6000 மெகா வொட்ஸ்றகும் அதிகமான உற்பத்திக் கொள்ளளவுத் திறனையும் கொண்டுள்ளது.

**சன்டேரைம்ஸ் பத்திரிகையில் யோன் பெறெஸ்கர் எழுதியது.**

**தமிழில் ஐஸ்ரின்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுடர் ஒளி

31, ஒக்ரோபர் - 06 நவம்பர், 2012

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.
டெலிபோன்:0115738005, பக்ஸ்: 011517944-5.
E-mail: editorial@sudaroli.com

# சீரற்ற நிலை தொடருமா?

இலங்கையில் பல்வேறு தரப்பினர் அரசாங்கத்திற்கெதிரான மனநிலையில் உள்ளார்கள் என்பதை இன்று நாட்டில் இடம்பெறும் சம்பவங்கள் வெளிப்படுத்தி வருகின்றன. தமிழ் பிரதேசங்களில் நடைபெறும் போராட்டங்கள் ஒருபுறம் தொடரும் நிலையில், நாடு முழுவதிலுமே போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன.

பல்கலைக்கழக ஆசிரியர்களின் போராட்டத்திற்கு இன்னமும் சரியான தீர்வு காணப்படாத நிலையில் பாடசாலை ஆசிரியர்களும் வீதியிலிறங்கிப் போராடப் போவதாக அறிவிப்பு ஒன்று வெளிவந்துள்ளது. அரசமருத்துவர்களும் பணிநிறுத்தப் போராட்டத்தைக் கையிலெடுத்துள்ளனர்.

தமிழ் மக்கள் சிறைகளிலிருந்து தங்கள் பிள்ளைகளை விடுதலை செய்யுமாறும், காணாமல் போனவர்களை மீட்டுத்தருமாறும் கோரி ஜனநாயக வழிமுறைகளில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். அத்துடன் தற்போது இடம்பெறும் அத்துமீறல்கள், அபகரிப்புகளுக்கெதிராகவும் போராட்டங்களை நடத்தும் நிலைக்கு தமிழ்மக்கள் தள்ளப்பட்டுள்ளனர். தமிழ் மக்களால் மேற்கொள்ளப்படும் இப்போராட்டங்களால் சாதாரண பொதுமக்களுக்கு எவ்விதப் பாதிப்பும் இல்லை. எனினும் சர்வதேசத்தின் அவதானத்திற்கு இப்போராட்டங்கள் செல்வதால் அரசு அவற்றைத் தடுக்க பல்வேறு வகையிலும் முயன்று வருகின்றது.

ஆனால், ஆசிரியர்கள், மருத்துவர்கள் போன்றோர் மேற்கொள்கின்ற போராட்டங்களால் பாதிக்கப்படுகின்றவர்கள் பொதுமக்கள்தாம். எனவே, இவ்விடயங்களுக்கு முகம் கொடுப்பதிலோ சரியான விதத்தில் அவற்றைக் கையாள்வதிலோ அரசாங்கம் முனைப்புக் காட்டுவதாகத் தெரியவில்லை.


இவை ஒருபுறமிருக்க, இந்தப் போராட்டங்கள் யாவும் இந்த அரசாங்கத்தின் மீதுள்ள அதிருப்தியினையே வெளிக்காட்டி நிற்பதால் ஒரு ஆட்சிமாற்றத்தின் தேவை தீவிரமாக உணரப்படுகிறது. ஆனால், அண்மைக்காலத்தில் நடைபெற்ற தேர்தல்களில் கூட ஆளும் தரப்பிற்கே சாதாரண சிங்கள மக்கள் ஆதரவை வழங்கியிருக்கின்றனர் என்பதுதான் வியப்பான விடயம்.

இதற்கு முக்கியமான காரணமொன்றைக் கண்டறிவதெனின், இந்த நாட்டில் பலமானதோர் எதிர்கட்சி இல்லாததையே குறிப்பிட முடியும். பிரதான எதிர்க்கட்சியாகவுள்ள ஐக்கிய தேசியக் கட்சி நாளுக்கு நாள் பலமிழந்து வருகின்றமை ஆளும்கட்சிக்கு பலம் சேர்த்து வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாட்டின் எதிர்க்கட்சி ஒரு மாற்றுஅரசு (Alternative Government) என்றே கருதப்படுகின்றது. ஆளும் அரசாங்கத்தின் தவறுகளை விமர்சித்து, தட்டிக்கேட்டு அரசை சரியான வழியில் நெறிப்படுத்துகின்ற பணியை செய்வதாலேயே அவ்வாறு கருதப்படுகின்றது. ஆனால், இலங்கையின் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கியத் தேசியக்கட்சி அதன் உள்முரண்பாடுகளையே சரிப்படுத்திக்கொள்ள முடியாத நிலையிலுள்ளது.

இன்று மக்கள் மத்தியில் அரசாங்கத்திடமுள்ள அதிருப்தி நிலையை வாய்ப்பாகப் பயன்படுத்தி மக்களை அணிசேர்க்கக் கூடிய வலிமை எதிர்க்கட்சிகளிடம் இல்லை. தனித்தோ கூட்டாகவோ அரசாங்கத்தை எதிர்த்து நிற்கும் ஒரு அமைப்பு இந்த நாட்டில் உடனடியாகத் தோன்றுவதற்கான சாத்தியம் மிகக்குறைவாகவே உள்ளது. இந்நிலை தொடரும் வரை ஆள்பவர்கள் இன்று நாடு முழுவதும் தோன்றியுள்ள அதிருப்திநிலையை பெரிதுபடுத்தமாட்டார்கள் என்பதும், நிலைமைகள் சில காலத்திற்கு இவ்வாறே தொடரும் என்பதும்தான் கவலைக் குரிய விடயம்!

# துயர்வெளியில் வாழ்க்கை!



அவலங்கள், துயரங்கள் தமிழ் மக்களுக்கு எழுதப்படாத விதியாக மாறியுள்ளது. தமிழரை கடவுள்தான் காப்பாற்ற வேண்டுமென அன்று தந்தை செல்வா சொன்னதே இன்று யதார்த்தமாகி வருகின்றது. இடப்பெயர்வு, அகதிவாழ்க்கை, அடக்குமுறை, வறுமை, வெறுமை, ஆபத்து நிறைந்த அகதி அந்தஸ்து கோரும் வெளிநாட்டுப் பயணங்கள் என அன்றிலிருந்து இன்றுவரை தொடர் கதையாக நீள்கின்றன. அவர்களின் எந்தப் பிரச்சினைகளும் தீர்வுகாணப்படாத பிரச்சினைகளாகவே இலங்கைத் தீவில் தொடர்கின்றது. இடப்பெயர்வுக்கு பின்னரான மீள்குடியேற்றம் மிகவும் சிறப்பாக இடம்பெறுகின்றது என அதிகார பீடம் அடிக்கடி கூறிவருகின்றபோதும் அத்தகைய மீள்குடியேற்றங்கள் அவர்களை வலிந்து துன்பத்திற்குள் தள்ளுவதாகவே இருக்கின்றது.

இலங்கை ஆட்சியாளர்களின் மீள்குடியேற்றம் பற்றிய சிந்தனைப்படி போரில் இடம்பெயர்ந்தவர்களை பஸ்களில் ஏற்றி அவர்களின் சொந்த இடங்களில் இறக்கிவிட்டால் சரி என்ற நிலையில் இருப்பதாகவே எண்ணத் தோன்றுகின்றது. இந்த எண்ணப்பாட்டை பிரதிபலிக்கும் முகமாக சில மீள்குடியேற்ற நடவடிக்கைகளும் நடாத்தப்பட்டு வருகின்றன. குறிப்பாக கடந்த உள்ளூராட்சி தேர்தல் காலத்திலும் பாராளுமன்ற தேர்தல் காலத்திலும் இத்தகைய நடவடிக்கைகள் தமிழ் பிரதேசங்களில் சாதாரண சம்பவங்களாக நிகழ்ந்தன.

அகதிமுகாம்கள், தற்காலிக வசிப்பிடங்களில் உள்ள மக்களை வலுக்கட்டாயமாக பஸ்களில் மந்தைகள்போல் ஏற்றி அவர்களை கொண்டுசென்று காட்டுப் பிரதேசங்களில் இறக்கிவிட்டு மீள்குடியேற்றம் வடக்கில் துரிதமாக இடம்பெறுகின்றது என மக்களுக்கு படம் காட்டுவதன் ஊடாக தேர்தல் காலங்களில் நல்ல பெயர் சம்பாதிக்க முனைந்தனர். உள்ளூராட்சி தேர்தல் காலத்திலும், வலிகாமம், வடமராட்சி கிழக்கு என யாழ் அரச அதிபர் பிரிவிற்குட்பட்ட பகுதிகளிலும், கிழக்கிலங்கையில் திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளிலும் இவ்வாறு பஸ்களில் ஏற்றிச்சென்று இறக்கும் படலம் தொடர்ந்தது. அரசின் இந்த நடவடிக்கைகள் தமது வாக்கு வங்கியை நிரப்பிக்கொள்ளும் செயற்பாடு என தமிழ்க்கட்சிகள் விமர்சித்தபோதும் அரசின் மீள்குடியேற்ற செயற்பாடுகளை குற்றஞ்சாட்டி அவற்றை சீர்குலைப்பதற்கு தமிழ்க் கட்சிகள் முயன்றுவருவதாக மீள்குடியேற்ற அமைச்சரும் ஏனைய அமைச்சர்களும் மேடைகளில் அரசின் செயற்பாட்டை நியாயப்படுத்தி வந்தனர். ஆனால் கட்டாயத்தின் பேரில் எடுப்பார் கைப்பிள்ளைபோல பஸ்களில் கொண்டு செல்லப்பட்டு இறக்கப்பட்ட மக்களின் வாழ்வு அவலத்துக்குள்ளேயே உழன்று வருகின்றது.

அந்த வகையில் தற்போதைய மெனிக்பாம் மீள்குடியமர்வும் அரசால் நடத்தப்பட்டுள்ளது. உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற பதத்தை இல்லாமல் செய்வதனூடாக சர்வதேச அழுத்தங்களை தவிர்க்கலாம் என்பதற்காகவே இந்நடவடிக்கை அரசால் மேற்கொள்ளப்பட்டதாக தமிழ்க்கட்சிகள் விமர்சித்து வருகின்றன. நடைபெறவிருக்கும் ஐ.நாவின் கூட்டத் தொடர்களிலும் சர்வதேச மாநாடுகளிலும் தமக்கு எதிரான விமர்சனங்கள் தலைதூக்குவதை தடுக்க உள்ளூரில் இடம்பெயர்ந்தவர்கள் என்ற பதத்திற்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டால் சமாளித்துவிடலாம் என்ற நிலையில் அரசு சிந்தித்து அதற்கான வேலைத்திட்டங்களில் மும்முரமாக இறங்கியுள்ளதாக தெரிகின்றது.

இதன் ஒரு கட்டமாக மெனிக்பாம் முகாமில் சாதாரண வசதிகளுடன் தங்கியிருந்த மக்களை பஸ்ஸில் வலுக்கட்டாயமாக ஏற்றி சூரியபுரம் காட்டுப் பகுதியில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் அவர்கள் இறக்கிவிடப்பட்டமை மூலம் அரசு இதனை அப்பட்டமாக வெளிக்காட்டியிருக்கிறது. இது தொடர்பாக ஐ.நா. ஆரம்பத்தில் இந்த மீள்குடியேற்றத்தை பாராட்டி அறிக்கையிட்டிருந்தது. பின்னர் மீள்குடியமர்வு செய்யப்பட்ட மக்களின் அவலக் குரல்கள் ஐ.நாவின் காதோரம் கேட்டமையால் தான் பாராட்டி வெளியிட்ட அறிக்கையை வாபஸ் பெற்றிருக்கிறது.

இங்கு மீள்குடியேற்றப்பட்ட மக்கள் தினம் அவலப்பட்டு வருவதை காணக்கூடியதாக உள்ளது. அவர்களுக்கு நிவாரணம் தவிர்ந்த வேறெந்த உதவிகளும் இதுவரை அரசால் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர்களின் தற்காலிக கொட்டில்கள் கூடாரங்கள் பழுதடைந்து, கொட்டும் மாரி மழைக்குள் அவர்கள் அல்லோலகல்லோடப் படுவதை காணக்கூடியதாக உள்ளது. எமக்கு ஒரு தறப்பாள் கொட்டகையாவது தாருங்கள் என இவர்கள் கேட்கின்றனர். குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் தொடரும் அடைமழை இவர்களை வலிந்து துயரத்திற்குள் தள்ளி வருகின்றது. இவர்களில் குடியிருப்புகள் வெள்ளக்காடாய் காட்சியளிப்பதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன. அடைமழையை தாங்கமுடியாத கொட்டிகளும் தறப்பாள் கொட்டகையுமே அரச சார்பற்ற கொண்டு நிறுவனங்களினால் வழங்கப்பட்டுள்ளதால் இவர்கள் மழைக்குள் நனைந்து தொற்றுநோய்களுக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இவர்களின் சொத்துக்கள் ஏற்கனவே கொடூரப் போரில் பறித்தெடுக்கப்பட்டுள்ள நிலையில் இவர்கள் தமது வாழ்விடங்களை கூட சீர்செய்ய முடியாத அவலம் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக மழைக்கு தாக்குப்பிடிக்க முடியாத கூடாரங்கள் காரணமாக உணவு சமைப்பதற்கு அடுப்புக் கூட எரிக்கமுடியாத அவலம் இருப்பதாக கூறப்படுகின்றது. குறிப்பாக சிறார்கள், குழந்தைகள் சுகாதார சீர்கேட்டால் வாந்திபேதி, டெங்கு போன்ற நோய்களுக்கு இலக்காகக்கூடிய அல்லது நோய் பரவக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. குறித்த காட்டுப்பகுதியான சூரியபுரத்தில் தங்குவதற்கு பாதுகாப்பற்ற சூழ்நிலையே நிலவுவதாக தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக காடு அரைவாசி அழிக்கப்பட்ட பகுதியாக இவர்களுக்கு வழங்கப்பட்டதால் பாம்பு மற்றும் தேள் போன்ற விச ஐந்துக்களினால் தீண்டப்படும் அபாயம் இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. குறிப்பாக மாரி மழை இப்போது வன்னிப் பகுதியில் இடைவிடாது கொட்டுவதால் இவர்கள் நிம்மதியாக தூக்கம் கூடக் கொள்ளமுடியாத நிலையிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களின் வசிப்பிடங்களை அண்டி இராணுவத்தினர் நிலைகொண்டிருப்பதால் இவர்களை சந்திக்கவும், இவர்களின் அவலங்களை கேட்டறியவும் மக்கள் பிரதிநிதிகளுக்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது, குறிப்பாக இவர்களை சந்திக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர். இவர்களின் பார்வையில் செல்லும் ஊடகவியலாளர்கள் உள்நுழைய அனுமதி வழங்கப்படாது திருப்பி அனுப்பப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இவ்வாறு தனது சுயலாப அரசியலுக்காக இலங்கை அரசு அப்பாவி மக்களை பகடைக்காய்களாக்கி அதில் குளிர்காயும் நடவடிக்கைகளில் இறங்கியிருப்பது வேதனை தருவதாகும்.

| ஹரன் |

இந்நிலை தொடர்பாக அறிக்கையிட்டிருக்கும் ஐ.நா மனித உரிமை அதிகாரி சாக்லோகா பியானி வடக்கில் இடம்பெறும் மீள்குடியமர்வில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளபோதிலும் அரசின் மீள்குடியேற்றத்தில் திருப்தியில்லை என தெரிவித்துள்ளார். மேலும், போர் முடிந்த பின்னர் இடம்பெறும் மீள்குடியேற்றத்திற்கு நிரந்தர தீர்வு காணலில் உறுதியற்ற தன்மை இருப்பதாக அவர் அரசை குற்றஞ்சாட்டியுள்ளார். அத்துடன் இடம்பெயர்ந்தோர் முகாம்கள் மூடப்படவேண்டும். மீள்குடியேற்றம் துரிதப்படுத்தப்படவேண்டும் என அரசை வலியுறுத்தியுள்ள அவர் முகாம்களை மூடிவிட்டால் மீள்குடியேற்றம் பூர்த்தியாகிவிடாது மீள்குடியேற்றம் மேற்கொள்ளப்பட முன்னர் அதற்கான தகுந்த ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே மீள்குடியேற்றம் சாத்தியமாகும் எனவும் அவர் மேலும்தெரிவித்துள்ளார்.

இதேவேளை இது தொடர்பாக ஏற்கனவே அறிக்கையிட்ட ஐ.நா. சர்வதேச நியமங்களுக்கு அமைய மீள்குடியமர்வு செய்யப்பட வேண்டும் என அரசை வலியுறுத்தியுள்ளது. எனவே ஐ.நா அறிக்கையுடன் மாத்திரம் நின்றுவிடாது அரசின் இத்தகைய முறையற்ற மீள்குடியேற்ற நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தி அப்பாவி மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சூரியபுரம் காட்டுப் பகுதிபோன்ற வன்னியின் பல பகுதிகளில் அரசின் முறையற்ற மீள்குடியேற்றத்தினால் பாதிக்கப்பட்டு அல்லலுறும் மக்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். இதுவே தமிழ் மக்கள் ஐக்கிய நாடுகள் சபையின் முன் விடுக்கும் கோரிக்கையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பாதுகாப்பு' நியாயத்தின் பக்கம் இல்லை!

**யாழ்.** குடாநாட்டில் இடம்பெறும் அசம்பாவிதங்கள் சம்பந்தமாக பொது மக்களிடையே பல்வேறு சந்தேகங்களும் கேள்விகளும் எழுந்துள்ள நிலையில், அதனை உறுதிப் படுத்துமாப்போல் பொலிசாரினதும் பாதுகாப்புப் படையினரினதும் நடவடிக்கைகள் காணப்படுகின்றன.

வெலிக்கடையில் தமிழ் கைதிகள் தாக்கப்பட்டமை, படுகொலை செய்யப்பட்டமை மற்றும், படையினர் மக்கள் குடியிருப்பு மத்தியில் படைமுகாம்கள் அமைப்பதற்கும் அரச காணிகளை சுவீகரிப்பதற்கும் எதிராக நெல்லியடி பஸ்நிலையத்தில் நடத்திய ஆர்பாட்டத்தின்போது



**நெல்லியடியில் புலிக் கொடி கொண்டு மோட்டார் சைக்கிளில் பொலிசாரின் முன்னிலையில் நடமாடிய வர்களை கைதுசெய்ய முடியவில்லை.**

**மறுபுறத்தே நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்தகுமாரைத் தாக்கியவர் களைப் பிடிக்கமுடியவில்லை.**

**வலிதெற்கு உடுவில் பிரதேச சபை அலுவலகத்தின் மீது கழிவு ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடியவில்லை. தெல்லிப் பளையில் இடம்பெற்ற ஆர்பாட டத்தில் கலந்துகொண்டுவிட டுச் சென்ற பொதுமக்களின் வாகனத்தைத் தாக்கி, ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடிய வில்லை.**

**இதேபோன்று வைத்திய கலாநிதி ஜெயக்குமார் மற்றும் அயலவர் வீட்டின் மீது ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடிய வில்லை. நல்லூர் ஆலயப் பகுதியில் வைத்து சேபால ஆட்டிக்கல மீது ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடியவில்லை.**

புலிக்கொடி தாங்கியவர்களின் நடமாட்டத்தை அந்த இடத்தில் நின்ற பொலிசாரும் படையினரும் வேடிக்கை பார்த்து நின்றார்கள்.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களும் ஊடகவிய லாளர்களும் முறையிட்ட போதிலும் இதுவரைக்கும் எந்த வகையான ஆக்கபூர்வமான நடவடிக்கையும் பொலிசாரினாலும் படையினராலும் மேற்கொள்ளப்படவில்லை.

மறுபுறத்தே தமிழ்தேசியக் கூட்டமைப்பு அல்லது தமிழ் மக்கள் சார்ந்த கட்சியொன்று தமிழ் மக்களுக்கு அரசினாலும் அரச படைகளாலும் மேற்கொள்ளப்படும் நீதியற்ற செயல்களை கண்டிக்க முனைந்தால், ஆர்பாட்டம் செய்ய முன்வந்தால் நீதிமன்றங்கள் மூலம் தடை உத்தரவு வாங்கி தடை செய்தல், அச்சுறுத்தல் போன்ற செயல்பாடுகள் மேற்க்கொள்வது தொடர்கதையாகவே உள்ளது.

ஏற்கனவே யாழ் குடா நாட்டில் இடம்பெற்ற, தமிழ் கட்சிகளும் தென்னிலங்கையைச் சேர்ந்த தமிழர் நியாயமான கோரிக்கையை ஆதரிக்கும் கட்சிகளும் மேற் கொள்ளும் ஆர்ப்பாட்டங்கள் ஊர்வலங்களாக இருந்தாலும் சரி, பொது மக்களின் அன்றாட வாழ்க்கைக்கு பாதிப்பு ஏற்படும் எனக்கூறி அவற்றைத் தடைசெய்வதும் முட்டை, தக்காளிப் பழம், கற்கள் போன்றவற்றை எறிந்து குழப்புவதும் வழமையாகும்.

அண்மையில் கூட பொலிஸ் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரத்தில் இருந்து சமுர்த்தி அலுவலர்களும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி ஆதரவாளர்களும் இணைந்து 'திவிநெகும' திட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து ஊர்வலம் நடத்தினார்கள்.

யாழ். செயலகத்தின் முன்னர் மேடை அமைத்து ஆளும்கட்சி அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிபர் இணைந்து கூட்டம் போட்டார்கள்.

யாழ். செயலகம் முன்னாள் உள்ள கண்டி வீதி ஊடாக பொது மக்களும் வாகனங்களும் செல்லமுடியாது அரைமணித் தியாலத்திற்கு மேல் தடைப்பட்டுக் காணப்பட்டது.

இதற்கு பொலிசார் எதுவும் செய்யவில்லை.

சில பிரச்சினைகளுக்குள் பொலிசார் அகப்படாது தமது கடமைகளை மனச்சாட்சியை விற்று பணி செய்யவும், பூசி மெழுகவும் தயாராக எப்போதும் இருக்கிறார்கள்.

இந்த வகையில் தான் நல்லூர் பிரதேச சபையின் தலைவர் வசந்தகுமார் பட்டப்பகல் வேளையில் ஆட்கள் நடமாட்டம் மிக்க கொக்குவில் வீதியில் வைத்து தாக்கப்பட்டுள்ளார்.

புலிகளின் கட்டுப்பாட்டில் வடக்கு கிழக்கு இருந்த வேளையில் கொழும்பு சென்ற தமிழர்களை புலியெனக்கூறி பிடித்து சிறைகளில் அடைத்து துன்புறுத்திப் சித்திரவதைக்கும் உள்ளாக்கும் ஆற்றல் கொண்ட பொலிசாருக்கு! நெல்லியடியில் புலிக்கொடி கொண்டு மோட்டார் சைக்கிளில் அவர்களின் முன்னிலையில் நடமாடியவர்களை கைதுசெய்ய முடியவில்லை.

மறுபுறத்தே நல்லூர் பிரதேச சபைத் தலைவர் வசந்த குமாரைத் தாக்கியவர்களை பிடிக்கமுடியவில்லை.

வலிதெற்கு உடுவில் பிரதேச சபை அலுவலகத்தின் மீது கழிவு ஒயில் ஊற்றியவர்களை பிடிக்கமுடியவில்லை. தெல்லிப்பளையில் இடம்பெற்ற ஆர்பாட்டத்தில் கலந்துகொண்டுவிட்டுச் சென்ற பொதுமக்களின் வாகனத்தைத் தாக்கி ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடியவில்லை.

இதேபோன்று வைத்திய கலாநிதி ஜெயக்குமார் மற்றும் அயலவர் வீட்டின் மீது ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடியவில்லை. நல்லூர் ஆலயப் பகுதியில் வைத்து சேபால ஆட்டிக்கல மீது ஒயில் ஊற்றியவர்களை பிடிக்க முடியவில்லை.

உதயன் ஆசிரியர் குகநாதனை தாக்கியவர்களை, தாக்கக் காரணமாக இருந்ததாகக் கூறப்படும் சட்டத்தரணி உட்பட ஏனையவர்களைத் தெரிந்தும் கைதுசெய்ய சட்டமாஅதிபரின் பதிலுக்கு காத்திருக்கின்றோம் என்று கூறப்படுகின்றது.

இந் நடவடிக்கைகள் அனைத்தும் எதனைக்காட்டி நிற்கின்றது என்றால் இந்நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்கள் அரச ஆதரவாளர்கள், அரச படையினரின் ஆசி பெற்றவர்களே எனப் பொதுமக்கள் கூறுகின்றார்கள்.

அதனை உறுதிப்படுத்தும் வகையில் பொலிசாரும் கூட கண்டும் காணாத நிலையில் சாக்குப் போக்குச் சொல்லி காலத்தைக் கடத்துகின்றார்களே அன்றி ஆக்கபூர்வமான எதனையும் செய்ய முன்வரவில்லை. நீதிமன்றத்தில் குறிப்பிட்ட குற்றவியல் விடயங்கள் சம்பந்தமாக மாதாந்தம் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டு நீதி மன்றங்களின் காலமும் கூட வீணடிக்கப்பட்டு, நீதித்துறையின் மீதும் தமிழ் மக்கள் நம்பிக்கை இழக்கும் நிலமையும் பொலிசாரினதும் படையினரினதும் செயற்பாடுகளினால் ஏற்படுகின்றது.

மக்களுக்கு பாதுகாப்பாக பொலிசாரும் படையினரும் வடக்கு கிழக்கில் கடமையாற்றுகின்றார்கள்.

சிவில் நிர்வாகம் கொண்டுவரப்பட்டுவிட்டது. சட்டம் ஒழுங்கு சீர்செய்யப்பட்டு விட்டது என்று அறிக்கைகளில் படம் காட்டுவதன்மூலம் எதுவும் ஆகப் போவதில்லை.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைக் கேட்டால் தாக்கப்படுவதும் காணாமல் போவதும் தொடர்கதையாகவே உள்ளது.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் இனம்தெரியாதவர்கள் எனக் கூறிக் கொள்ளும் நபர்களினால் தாக்கப்படக் காரணம் மக்கள் தொண்டனாக மக்கள் கொடுத்த ஆணையை நிறைவேற்ற முனைந்தது படையினருக்கு பிரதேச சபைக் காணியை கையளிக்க மறுத்தமையே ஆகும்.

அவரிடம் இருந்த 49 ஆயிரம் ரூபா பணம், குறித்த காணியின் உறுதி என்பவையும்கூட அபகரித்துச் செல்லப்பட்டுள்ளன.

இது எதனைக் காட்டுகின்றது என்றால் மீண்டும் அரச பயங்கரவாதம் தமிழ்மக்கள் மீது தலைவிரித்தாடுகின்றது. இனியும் தலைவிரித்தாடும் என்பதையே.

அரசும் அரச கட்சிகளும் ஜனநாயக சமத்துவம், சமாதானம் என்று கூறிக்கொண்டாலும் தமிழர் மீது இன்னும் குரோதமும் விரோதமும் தொடர்கதையாகவே இருக்கின்றது.

தமிழன் இம் மண்ணில் இருந்து நிம்மதியாக வாழக்கூடாது. தனது இனத்தை நல்வழியில் கொண்டு செல்லக்கூடாதென்பதில் அரசும் அரசுடன் இணைந்த தமிழ் கட்சிகளும் மிகவும் விழிப்புடனும் உற்சாகத்துடனும் செயல்படுகின்றன.

அதற்கு எண்ணெய் வார்ப்பது போன்று தமிழர்கள், தமிழ் தலைமைகள் மேற்கொள்ளும் போராட்டங்களின்போது பொலிசாரும் சட்டம் ஒழுங்கை மறந்து தமது கடமைகள் பொறுப்புக்களைத் துறந்து செயல்படுகின்றார்கள்.

இத்தகைய பாடுபாதகமான செயல்பாடுகள் அனைத்தும், கண்ணால் பார்த்த விடயங்கள் உண்மையானால்கூட பொலிசார் எதனையும் செய்யப்போவதில்லை என்கிற நம்பிக்கையீனத்தையே வளர்த்துவிட்டுள்ளது. இதனை பொலிசாரும் உறுதிப்படுத்துகின்றார்கள் என்பதே உண்மையாகும்.

**வில்லவன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# வேஷங்கள்

சந்திரவதனா
ஜேர்மனி

காலைப் பொழுதுக்கே உரிய அவசரத்துடன் ஜேர்மனியின் கிராமங்களில் ஒன்றான அச்சிறு கிராமத்து வீதி இயங்கிக் கொண்டிருந்தது. கோடை என்றாலும் குளிர்ச்சியான காலை. பச்சையாய், பசுமையாய் மரங்களும், பூக்களுமாய் ஜேர்மனி அழகாகத்தான் இருந்தது. சிக்னலுக்காக காரில் காத்துக் கொண்டிருந்த உமாவின் மனது மட்டும் அந்தக் காலைக்குச் சிறிதும் பொருந்தாது புழுங்கிக் கொண்டிருந்தது. கோபத்தில் தகித்தது என்று கூடச் சொல்லலாம்.

எப்படி அவனால் முடிந்தது...! எப்படித் துணிந்து சொன்னான்...! காலையில் சந்துரு சொன்ன செய்தியில் கொதிப்படைந்த அவள் கோபத்தை அக்சிலேட்டரில் காட்டினாள்.

சந்துரு வேறு யாருமல்ல. அவள் கணவன் தான். 15வருடத் திருமண வாழ்க்கை. அன்புக்குச் சின்னமாக நிலாவினி அவர்களின் செல்ல மகள்.

நேற்று இரவுவரை அன்பாகத்தானே இருந்தான்...! நடித்தானா...? காலையில் இப்படி ஒரு குண்டைத் தூக்கிப் போடுவான் என அவள் கனவில் கூட நினைக்கவில்லை.

"உமா உம்மோடை நான் கொஞ்சம் கதைக்கோணும்" காலையில் தேநீருடன் சென்ற உமா, படுக்கையிலிருந்த அவனை எழுப்பிய போது குழைந்தான்.

அவனது வார்த்தையின் பரிவில் நெகிழ்ந்து, அப்படியே அவனருகில் கட்டில் நுனியில் அமர்ந்து, அவன் மார்பின் சுருண்ட கேசங்களைக் கோதிய படி

"சொல்லுங்கோ" என்றாள் மிக அன்பாக.

"நீ அழக்கூடாது"

"சும்மா சொல்லுங்கோ"

சில கணங்கள் நிதானித்து,

"உமா நான் இண்டையிலையிருந்து முன்சனில் தங்கப் போறன்"

"ஏன்....?" என்றாள்.

மிகவும் திடுக்கிட்டவளாய்

"ஒவ்வொருநாளும் பயணஞ் செய்யிறது சரியான கஸ்டமாயிருக்கு"

"இவ்வளவு நாளும் செய்தநீங்கள்தானே! இப்ப மட்டும் என்ன வந்தது..?"

"பார்த்தீரே..! இப்பவே ரென்சன் ஆகிறீர். நான் இன்னும் விசயத்துக்கே வரேல்லை"

சந்துருவின் புதிருக்கு மௌனமாக தனக்குள் விடை தேடினாள்.

"உமா உமக்குத் தெரியுந்தானே என்னோடை அந்தச் சக்கி என்ற செக்கொஸ்லாவியப் பொம்பிளை வேலை செய்யிறது..?"

"ஓமோம் புருசன்காரன் விட்டிட்டுப் போயிட்டான் எண்டு சொன்னநீங்கள். அவள்தானே......! பாவம்...... அவளின்ரை மகன் எப்பிடி இருக்கிறான்?"

"அது வந்து...... உமா..! அவளின்ரை மகன் சரியான சுகமில்லாமல் இருக்கிறான். அவளுக்கு என்ரை உதவி தேவைப்படுது. அதுதான் என்னை வந்து...."

"வந்து......"

"தன்னோடை இருக்கச் சொல்லிக் கேட்கிறாள்"

"அதுக்கு.....!"

"அதுதான் அவளோடை போய் கொஞ்ச நாளைக்கு இருப்பமெண்டு தீர்மானிச்சிருக்கிறன்"

விக்கித்துப் போன உமா விருட்டென்று கட்டிலில் இருந்து எழுந்து விட்டாள். ஒரு கணம் துடிக்க மறந்த அவளது இதயம் மீண்டும் அவசரமாகத் துடிக்கத் தொடங்கியது. வார்த்தைகள் வெளி வர மறுத்தன.

"யோசிக்காதையும். நான் உம்மட்டையும் வந்து வந்து போவன். உமக்கென்ன குறை இஞ்சை இருக்கு. ஊரிலை போலை அடுப்பை ஊதி... உடுப்பைக் கல்லிலை அடிச்சுத் தோய்ச்சு... இப்பிடி ஒரு கஸ்டமும் இல்லைத்தானே... எல்லா வசதிகளும் இருக்குத்தானே"

"இதெல்லாம் நீங்களாகுமோ..? நீங்கள் அவளை விரும்பிறீங்களோ...?"

"இல்லை... இல்லை... அவள்தான் என்னை உயிருக்குயிராய் விரும்புறாள். நான் இல்லையெண்டால் அவளுக்கு ஒரு துணையும் இல்லை"

"நானும் அம்மா அப்பா சகோதரங்களையெல்லாம் விட்டிட்டு வந்திருக்கிறன். இந்தப் பெரிய ஜேர்மனியிலை உங்களையும் நிலாவினியையும் விட்டால் எனக்கும் வேறை ஆர் இருக்கினம்?"

இப்போது அவளிடம் அழுகை பொங்கியது.

"ஏன் இப்ப அழுறீர்? நான் உம்மட்டையும் வருவன்தானே. நீர் படிச்ச பொம்பிளை இதை அனுசரிச்சுப் போகோணும். ஊருலகத்திலை நடக்காத விசயமே இது...!"

"நோ... என்னாலை ஒரு நாளும் இதுக்கு ஒப்புக் கொள்ளேலாது"

உமா கோபமாக முன்னேறி மூர்க்கத்தனமாக அவனது மார்பில் குத்தினாள். நுள்ளினாள். முகமெல்லாம் பிறாண்டினாள். அவன் அவளைத் தள்ளி விட்டு "பொம்பிளை மாதிரி நடந்து கொள்ளும்" என்று கத்தினான். அவனது இடது கன்னத்தில் இவளது நகம் பட்டு இரத்தம் துளிர்த்து நின்றது. வலியோடு அதைத் தடவியவன் கையில் பட்ட இரத்தத்தை அவளிடம் காட்டி,

"இங்கை பாரும் எனக்கு இரத்தக் காயம் வர்ற அளவுக்கு பிறாண்டியிருக்கிறீர். இதுக்கு மேலை என்னைத் தொட்டீரோ..! நடக்கிறது வேறை. நானும் சும்மா இருக்க மாட்டன். என்ரை முடிவு முடிவாகீட்டுது. ஒத்துப் போனீர் எண்டால் உமக்கும் நல்லது. எனக்கும் நல்லது. நிலாவினிக்கும் நல்லது. இல்லாட்டி நீர்தான் கஸ்டப்படுவீர். நிலாவினிக்கு இதொண்டும் தெரியத் தேவையில்லை"

உமாவுக்கு மலைப்பாக இருந்தது. தனது மூர்க்கத் தனமான செய்கையில் எரிச்சலாகவும், வெட்கமாகவும் இருந்தது. என்னவெல்லாம் இவன் சொல்கிறான் என்று கலக்கமாகவும் இருந்தது. சக்கியைப் பற்றி சந்துரு ஏற்கெனவே சொல்லியிருக்கிறான். அவளுக்காக உமாவும் பரிதாபப் பட்டிருக்கிறாள். அதுக்காக சந்துருவே போய் சக்கிக்கு வாழ்க்கை கொடுப்பதென்பது எந்த வகையில் நியாயமானது? இவன் சொல்வதெல்லாம் உண்மைதானா அல்லது தன்னைச் சீண்டி விட்டு வேடிக்கை



பார்க்கிறானா என்று குழம்பினாள்.

நிலாவினியும் வீட்டில் இல்லை. பாடசாலை ரூர் என்று போய் விட்டாள். திரும்பி வர இன்னும் எட்டு நாட்களாகும்.

"நீங்கள் சும்மா பகிடிக்குத்தானே சொல்லுறீங்கள்...?" ஒரு நப்பாசையோடு கேட்டாள்.

"இல்லை உமா. சீரியஸாத்தான் சொல்லுறன். எனக்கு உம்மையும் விருப்பம்தான். ஆனால் இப்ப சக்கிக்கு என்ரை உதவி தேவை"

இயலாமை என்ற ஒன்று இப்போ உமாவை ஆக்கிரமித்தது. ஓ..... வென்று குழறினாள்.

"ஏனப்பா இப்படிக் குழறுகிறீர்? பக்கத்து வீட்டுச் சனத்துக்கெல்லாம் கேட்கப் போகுது. என்ன நினைக்குங்குள். ஊரெண்டு நினைச்சீரே. ஏதோ மூண்டாந்தர குடும்பங்கள் மாதிரிக் கத்திறீர்!"

"ஆர் என்ன நினைச்சாலும் எனக்குப் பரவாயில்லை. நீங்கள் செய்யத் துணிஞ்சது மட்டும் முதலாந்தரமா இருக்கோ..?"

வார்த்தைகள் மிகச் சூடாக அநாகரிகமாக நீண்டு... ஒன்றோடொன்று மோதி.. உமாவுக்கு, சந்துரு முரட்டுத்தனமாக அடிக்க, உமா தன்னைக் காத்துக் கொள்ள எண்ணி, இழுத்துப் பறித்து கதவில் இருந்த திறப்பையும் இழுத்து எடுத்துக் கொண்டு வெளியில் ஓடினாள். கொஞ்ச நேரம் என்ன செய்வதென்று தெரியாமல் நின்றவள்... காரையும் எடுத்துக் கொண்டு இலக்குத் தெரியாமல் ஓடி.. சிவப்பு லைற்றில் தரித்து நின்றாள்.

சிக்னல் பச்சையாக, பின்னிருந்த காரோட்டி கோன் அடித்து தூங்குகிறாயா...? என்று சைகை காட்டிச் சினக்க.. சிந்தனையிலிருந்து தற்காலிகமாக விடுபட்டு..... மீண்டும் பலம் கொண்ட மட்டும் அக்சிலேட்டரை அழுத்தி, சீறிக் கொண்டு பறந்தாள்.

ஒரு பாடசாலையின் முன் ஒரு குழந்தை வீதியைக் கடப்பதை கடைசி செக்கனில் கண்டு அவசரமாக பிறேக்கை அழுத்தினாள். கடவுளே...! நான் என்ன செய்கிறேன். அந்தப் பிள்ளை அடிபட்டிருந்தால்...? என்று முனகினாள். அப்படியே போனவள் வழியில் உள்ள மைக்கல் தேவாலயத்தின் அருகில், காரை நிறுத்தி விட்டு தேவாலயத்துக்கான படிகளில் ஏறி [illegible] அமர்ந்தாள். அடக்க முடியாமல் அழுதாள். திடீரென்று நிர்க்கதியாகப் போய் விட்டது போல உணர்ந்தாள். பைத்தியம் பிடித்தவள் போல அரற்றினாள். யோசிக்க முடியாமல் மூளைப்பகுதி நொந்தது. கண்களின் முன்னே மெல்லிய புகைமண்டலம் போல எதுவோ மறைத்தது. எதையும் சரியாகச் சிந்திக்க முடியாமல் திண்டாடினாள்.

சந்துருவுக்கும் அவளுக்கும் இடையில் அடிக்கடி சின்னச் சின்னச் சண்டைகள் சச்சரவுகள் என்று வரத் தவறுவதில்லைத்தான். சண்டைகள் கருத்து வேறுபாடுகள் இல்லாத குடும்பங்களா..? சில சமயங்களில் சந்துருவின் மேல் சந்தேகங்களும் வந்து பொங்கியிருக்கிறாள்தான். அவையும் சந்துரு கூறும் பொய்ச் சமாதானங்களில் பொங்கிய வேகத்தில் அடங்கியும் போயிருக்கின்றன. ஆனால் இந்தளவுக்கு தன்னை அப்படியே விட்டு விட்டுப் போய் இன்னொருத்தியுடன் வாழத் துணிந்த அவன் துணிவும், அதை மிகச் சாதாரண விடயம் போல அவள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற அவன் வேண்டுகோளும், இவளை நிலைகுலைத்து விட்டன. தன்னவன் இன்னொருத்திக்குச் சொந்தம் என்று தெரிந்தால் எந்தப் பெண்ணால்தான் நிலைகுலையாமல் இருக்க முடியும்.

தேவாலயம் உயர்ந்து கம்பீரமாக நின்றது. உல்லாசப் பிரயாணிகள் உள்ளே சென்று அதன் உச்சிக்கு ஏறிக் கொண்டிருந்தார்கள். சிலர் உச்சியில் நின்று நகரின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார்கள். இவளுக்கும் ஒரு விபரீத ஆசை வந்தது. தானும் போய் ஏறினாள். அதிக எண்ணிக்கையான வளைந்து வளைந்து செல்லும் படிகளில், ஒவ்வொன்றாக ஏறும் போது மனச்சோர்வுடன் உடற் சோர்வும் சேர்ந்து கால்கள் தடுமாறின. தலை சுற்றியது. ஆனாலும் ஏறி விட்டாள். மூச்சு வாங்கியது. மேலே நின்று பார்த்தாள். எதுவும் தெளிவில்லாமல் ஏதோ ஒரு மெல்லிய புகைமண்டலம் முன்னே தெரிந்தது. பச்சை மரங்கள் கூட புகை போர்த்தி வெண்மை போர்ந்த பச்சைகளாகத் தெரிந்தன. யாரும் எதிர் பார்க்காத ஒரு கணத்தில் எம்பிக் குதித்தாள்.

அங்கு நின்ற எல்லோருமே அதிர்ச்சியில் அவலக்குரல் எழுப்ப அவள் இரத்தமும் சதையுமாய் தேவாலயத்தின் படிகளில் சிதறினாள். ஒரு கணம் ஸ்தம்பித்து நின்ற அந்த இடத்தை பொலிஸ் வாகனங்களும் அம்புலன்ஸ் வண்டியும் அல்லோல கல்லோலப் படுத்தின. சிவப்பும் வெள்ளையும் கலந்த தடுப்பு நாடாக்கள் கட்டப்பட்டு அந்த வீதியிலான போக்குவரத்துக்களும் மக்கள் நடமாட்டமும் தடைப்படுத்தப் பட்டது.

இது மூன்றாவது சாவு. முதலில் 14வயது நிரம்பிய ஒரு யேர்மனிய மாணவி. அடுத்து ஒரு இந்தியத் தமிழ்ப்பெண். இப்போ இலங்கைத் தமிழ்ப்பெண். தேவாலய உச்சிக்கு இனி யாருமே ஏற முடியாது என்ற அறிவித்தலோடு தேவாலயத்தினுள்ளே இருந்த உச்சிக்கு ஏறும் படிகளை மறித்து கேற் போட்டு பெரிய மாங்காய்ப்பூட்டு போடப் பட்டது.

விசாரணைகளைத் தொடர்ந்து... சாக்கில் அள்ளிக் கட்டப் பட்ட உமாவின் உடல் என்று சொல்லப்பட்ட சதைத் துண்டுகள் அடக்கம் செய்யப்பட்டு இரண்டு கிழமைகள் ஓடி விட்டன. சந்துருவைத் துக்கம் விசாரிக்க உறவினர்கள் என்ற பெயரில் சிலரும், நண்பர்களும் வந்து வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.

சந்துரு சோகமாய் தாடியை மழிக்காமல் தேவதாஸ் வேடம் போட்டிருந்தான். யார் வீட்டுக்கு வந்தாலும் ஒரு சோகப் பாட்டுள்ள இசைத்தட்டை சுழல விட்டு, தன் சோகத்தை இன்னும் பலமாக மற்றவர்களுக்குக் காட்டினான். அழுவாரைப் போல இருந்து அவ "பாருங்கோ சரியான நல்லவ. ஆனால் யேர்மனியிலை இருக்கிற எல்லாப் பொம்பிளையளுக்கும் உள்ள அதே பிரச்சினைதான் அவவுக்கும். தனிமைதான் எல்லாத்துக்கும் காரணம். தாய் தகப்பன் ஊரிலை. சொந்தம் எண்டு சொல்லிக் கொள்ள ஒருவரும் பக்கத்திலை இல்லை. நானும் வேலையோடை. மகள் நிலாவினி பள்ளிக்கூடம் ரூர் எண்டு திரிவாள். இவ நாள் முழுக்க வீட்டிலை தனியத்தானே. அதுதான் அவவுக்கு சரியான மனஅழுத்தம். எப்பவும் சும்மா இருந்து அழுறதும்....." அலுக்காமல் சலிக்காமல் சொல்லிக் கொண்டே இருந்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் பூங்கா



## நினைவுத்தனல்

நான் காண நினைக்கு கனவே..
எழுதத்துடிக்கு கவியே..
தவறிவிட்ட கண்ணாடிப் பூவே..

தவணைமுறையில் மறக்கச் சொன்னாய்!
மழையாக நீ வந்து சேராத வரை
உன் நினைவுத்தணல்
எனைத்தின்று கொண்டுதான் இருக்கும்!

நியாஸ்
அட்டாளைச்சேனை.

## வரம்கொடு இறைவா



இறைவா ஒரே ஒரு முறை
எனக்கு சிறகு கொடு
பறவைகளின் சுதந்திரத்தை
அனுபவித்துவிட்டு வந்துவிடுகிறேன்.

இறைவா ஒரே ஒரு முறை
எனக்கு பள்ளி வாழ்க்கையை
திருப்பிக் கொடு இன்னல்களை மறந்து
இன்பமாக படித்துவிட்டு வந்துவிடுகிறேன்.

இறைவா ஒரே ஒரு முறை
சின்ன வயதைத் திருப்பிக் கொடு
என் அம்மாவின் மடியில் தவழ்ந்து
என் சகோதரங்களுடன்
விளையாடிவிட்டு வந்துவிடுகிறேன்.

இறைவா ஒரே ஒரு முறை
பூவாக பிறக்க வரம்கொடு
ஒரு நாளேனும் மென்மையாக
வாழ்ந்துவிட்டு வந்துவிடுகிறேன்.

கலைச்சிந்து
கலவெட்டித்திடல்.

## தீக்குச்சி

தீபத்தை ஏற்றித்தான்
சிறு தீக்குச்சி அணைகிறது
இங்கு பல தீபங்கள் அணைந்தனவே
எத்தனை தீக்குச்சிகள் அதில்
பற்றிக் கொண்டது
பற்றிக் கொண்டவைகூட
மூடிவைத்த குடத்தினுள் அல்லவா
எரிகிறது ஊமையாக

அ.அஜந்தன்
கந்தர்மடம்.

## கன்னத்தில் கண்ணீர்

இமை மூடினேன்
சுற்றிவர பனிமலை
சூழ்ந்திருக்க
உச்சியில் கருமேகம்
வட்டமாய் இருக்க
மின்னலும் மின்னவில்லை
இடியும் இடிக்கவில்லை
எங்கிருந்தோ ஊற்றெடுத்து
வந்த நீர்
இடமில்லாமல் நிரம்பி வழிய
கண்திறந்தேன் கரைபுரண்டு
ஓடியது
கன்னத்தில் கண்ணீர்!

சி.ஹரிணி
யாழ்ப்பாணம்.

## என் புன்னகைப் பூவே



என் கற்பனையின் தேடல்களில்
ஆயிரம் கவிதைகள் முளைப்பதுண்டு
ஆனாலும் சகியே உன்னைப் போல்
ஓர் அழகிய கவிதை
இதுவரை என் நெஞ்சைத் தொட்டதில்லை
என் வானிலே மாற்றங்களுள்
வானவில்லாய் வந்து
மறுகணமே மறைந்து விடுவாய்.
என நினைத்தேன் நீயோ
என் நெஞ்சத்தைக் கிழித்து
இதயத்தை எடுத்து குருதியால்
நிரந்தரமாய் காதல் என
எழுதிச் செல்கிறாய்
அப்போதுதானடி வலிகளையும்
ரசிக்க கற்றுக்கொண்டேன்
என் புன்னகைப் பூவே
வழிகளால் பேசாதே உன்
மௌனங்கள் கூட என்
பாஷையில் கவிதைகள் தானடி...

ப்ரியா

## மீண்டும் வருமா?



பிரிந்துபோன உயிர்களைத்தேடி
ஆர்பரிக்கிறது மனசு - மழைவிட்டும் விடாத
தூறலாய் நினைவுகள் மட்டும் மனதில்.
வசந்தங்கள் எல்லாம் தொலைந்துபோனது
இருந்தும் எமக்கொரு வாழ்க்கை
முடிந்துபோன வசந்தங்களின் ஞாபக அலைகள்
அடித்துச் சிதலமடைந்தது...
மனக்கறை காலத்தின் செல்களால்
அரிபட்டுக்கொண்டிருக்கின்றன...
வழமைபோல்ச் சொல்லிச் சிரிக்கவென்றே
மனதில் சேர்த்துவைத்த எத்தனையோ
ஜோக்குகள் ஒத்திகை பார்த்தபடி
தோளிலே சாய்ந்து சொல்லியழும் துன்பங்கள்
வேதனைகள் மனதில் உறைந்தபடி
மொத்தத்தில் சுவாசிக்கும் பிணமாய் நகருவது வாழ்க்கை
ஆனாலும் நமக்கொரு வாழ்க்கை....?

சி.மதனா

## வரட்டுக் கௌரவம்



பிஞ்சுக் கவி வரையும் – என்
அஞ்சு விரல்கள் பெற்றோர்
நெஞ்சமதில் நெருங்கி ஒரு
பஞ்சுக் கவி பாடுகிறது இன்று

கொஞ்சு மழலைகள் சிரிப்பை
தஞ்சமென்று சரணடைந்தவரே
நெஞ்சு தினம் உங்களை
இஞ்சி விதைா நினைக்கிறது

நெஞ்சத்தில் நித்தம் சுமந்து
விஞ்சும் விஞ்சையருள்
வெற்றியாளராக்கி
எஞ்சுறா பிள்ளை பேணும் பணியில்
வஞ்சமின்றி வளர்ந்திருப்போரே

அஞ்சதியாய் காலம் பறந்து போக
அஞ்சு பத்து வயது கடந்து போக
கெஞ்சுகிறது உடலும் மனமும்
பஞ்சு மெத்தையில் ஓய்வெடுக்க

அஞ்சி உங்களிடம் இருக்க
அஞ்ஞன் போல் பிழைவாகும் கொஞ்சு – சில
கொஞ்சு மழலைகள் செய்யும் தொல்லை
நஞ்சு போல் ஏன் வெறுக்கிறீர்

மிஞ்சும் உழைப்பில் ஒரு காலம்
விஞ்சி நின்றவர் தாம் மறுப்பேதுமில்லை
எஞ்சிய காலத்தில் உமை
அஞ்சி போல் காக்கும் பொறுப்பு எமதல்லவா?

கஞ்சம் இன்றி சொந்தக் காலில் நிற்க
இஞ்சை கொண்டு மனம்
துஞ்சாது அலைவது
மிஞ்சு சுகம் தான் – ஆனாலும்

கஞ்சம் போன்ற பெற்றோரை
நெஞ்சமதில் நிறுத்தி – பிஞ்சுகள்
கவசம் எனப் பணி செய்ய
நெஞ்சமதில் நினைத்தல் தவறோ
விஞ்சு பெற்றோரே விளக்குவீரோ

குஞ்சுகள் பேணி வளர்த்த உங்கள்
விஞ்சு கடமைகள் முடிந்தால்
துஞ்சாதை பெற்றோரைப் பேணும்
பிஞ்சுமனம் பின்னை கொள்ளல் தவறோ?

நெஞ்சது கண்ணீர் வடிக்கிறது
அஞ்சது பெற்றோர் சிலர் நிலை எண்ணி
எஞ்ஞான்றும் உங்களை பேணுவது
கொஞ்சு மழலைகள் கடமை தானே!

பிஞ்சு மழலைகள் மொழி
நெஞ்சமதில் கொள்வீரோ
சிச்சீ என விலகாது
சஞ்சாயம் பெற்று
சஞ்சாரம் செய்வீரோ?

என்.அகதிகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசி பலன்

**31.10.2012 - 06.10.2012**



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

படிப்பறிவுடன் பட்டறிவையும் பயன்படுத்தி பக்குமாகப் பேசுபவர்களே! பிள்ளைகளால் சின்னச் சின்ன சிக்கல்கள் வரும். அரசு சம்பந்தப்பட்ட காரியங்களில் எச்சரிக்கையாக இருங்கள். முதுகு, மூட்டு வலி, வீண் சந்தேகம், கருத்து மோதல்கள் வரக்கூடும். எதிர்நீச்சல் போட வேண்டிய வாரமிது.



**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

மன உறுதியும், விடாமுயற்சியும் கொண்டவர்களே! திடீர் பணவரவு உண்டு. வேற்றுமொழி பேசுபவர்கள் ஆதரவாக இருப்பார்கள். கை, கால் வலி, சோர்வு, களைப்பு வரும். சிலருக்கு இரத்தத்தில் ஹீமோகுளோபின் குறைதல், கல்சியக் குறைவு வரக்கூடும். பெற்றோருக்கு மருத்துவச் செலவுகள் ஏற்படும். பழைய நண்பர்களுடன் பகைமை வரக்கூடும். புதிய அணுகுமுறையால் முன்னேறும் வாரமிது.



**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்**

வாழ்க்கை வாழ்வதற்கே என்பதை அறிந்தவர்களே! நினைத்த காரியம் நிறைவேறும். தூரத்து சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள். பழைய இனிய சம்பவங்களையெல்லாம் பகிர்ந்துக் கொள்வீர்கள். முன்கோபம், வாக்குவாதங்கள் வரக்கூடும். பிள்ளைகளால் அலைச்சல், டென்ஷன் இருக்கும். வி. ஐ. பிகளால் இனம் கண்டறியப்படும் வாரமிது.



**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

தன் பத்து விரல்களையே சொத்தாக நினைப்பவர்களே! அடிப்படை வசதிகளை மேம்படுத்துவீர்கள். குழந்தை பாக்கியம் கிடைக்கும். பிள்ளைகளின் அடிமனதிலிருக்கும் பயத்தைப் போக்குவீர்கள். யாரையும் நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைக்காமல் முக்கிய விஷயங்களுக்கெல்லாம் நீங்களே நேரடியாக சென்று வருவது நல்லது. புது பொறுப்புகள் தேடி வரும். வசதி, வாய்ப்புகள் பெருகும் வாரமிது.



**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

இலவசத்தைப் பெற விரும்பாதவர்களே! எவ்வளவு பெரிய பிரச்சினைகள், சூழ்ச்சிகள் இருந்தாலும் அவற்றையெல்லாம் முறியடித்து வெற்றி பெறுவீர்கள். கார, அசைவ உணவுகளை தவிர்ப்பது நல்லது. வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக அமையும். குடும்ப ரகசியங்களை காக்க வேண்டிய வாரமிது.



**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம் 1,2 ம் பாதங்கள்**

பிரதிபலன் பாராமல் உதவுபவர்களே! மனதிலே ஒரு தெளிவு, முகமலர்ச்சி, அழகு, உற்சாகம் அதிகரிக்கும். தொண்டை வலி அவ்வப்போது வரக்கூடும். சகோதர வகையில் செலவினங்கள் வந்துப் போகும். சமயோஜித புத்தியால் சாதிக்கும் வாரமிது.



**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

கடின உழைப்புக்குச் சொந்தக்காரர்களே! எதிர்பார்த்த வகையில் பணம் வரும். மறதி, மந்தம், தூக்கமின்மை, விரக்தி வந்துச் செல்லும். வேலைச்சுமை, கனவுத் தொல்லை இருக்கும். நீண்ட நாட்களாக பழகிய நண்பர்களுடன் கூட கருத்து மோதல்கள் வரக்கூடும். சிக்கனமும், சகிப்புத் தன்மையும் தேவைப்படும் வாரமிது.



**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

மறப்போம், மன்னிப்போம் என்றிருப்பவர்களே! தைரியமாக சில பெரிய முடிவுகள் எடுக்கலாம். சிலர் கொஞ்சம் கடன்பட்டு வீடு, மனை வாங்குவீர்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் காணாமல் போகக்கூடும். ஓரளவு பொருளாதார வசதிகள் பெருகும். சுபச் செலவுகளும், திடீர் பயணங்களும் அதிகரிக்கும் வாரமிது.



**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

எதையும் ஆழமாக யோசிப்பவர்களே! அரசு காரியங்கள் விரைந்து முடியும். தந்தைக்கு மருத்துவச் செலவுகள் வரும். தந்தைவழி சொத்தைப் பெறுவதில் சிக்கல்கள், தடைகள் வந்துப் போகும். அவசர முடிவுகளை தவிர்க்கப்பாருங்கள்.ஓரளவு பணப்புழக்கம் இருக்கும் பழைய பிரச்னைகள் தீரும் வாரமிது.



**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

எப்பொழுதும் யதார்த்தத்தை விரும்புபவர்களே! வழக்குகள் சாதகமாகும். நண்பர்கள் வியந்து பாராட்டும்படி பல காரியங்கள் செய்வீர்கள். வெளியூரிலிருந்து மகிழ்ச்சிகரமான செய்தி வரும். மூத்த சகோதரங்கள் உறுதுணையாக இருப்பார்கள். திடீர் பயணங்கள் உண்டு. ராஜ தந்திரயுக்திகளால் வெற்றி பெறும் வாரமிது.



**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம் 1,2,3 ஆம் பாதங்கள்**

நினைத்ததை முடித்துக் காட்டுவதில் வல்லவர்களே! மனஇறுக்கம் விலகும். சகோதரிக்கு திருமணம் கூடி வரும்.விலகிச் சென்ற உறவினர்கள் வலிய வந்துப் பேசுவார்கள். தாயாருடன் மனத்தாங்கல் வரும். வீடு மாற வேண்டுமென்று முயற்சி செய்வீர்கள். தாணுண்டு தன் வேலையுண்டு என்றிருக்க வேண்டிய வாரமிது.



**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

தன்னலத்தை ஒருபோதும் விரும்பாதவர்களே! ஆரோக்கியம் கூடும். வீண் செலவுகள் குறையும். தன்னம்பிக்கை ஊற்றெடுக்கும். வீடு, மனை வாங்குவது, விற்பது லாபகரமாக முடியும். காரியத் தடை, வீண் விரயங்கள், திடீர் பயணங்களால் சோர்வு, களைப்பு வந்துச் செல்லும். முற்பகுதி முள்ளாக இருந்தாலும் பிற்பகுதி இனிக்கும் வாரமிது.

## ஞானம் பிறந்தாச்சு!



"தந்தையே! எனக்கு ஞானம் பிறந்து விட்டது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா?" கிளிமூக்கை அசைத்தபடியே சுகப்பிரம்மர் வியாசரிடம் கேட்டார்.

"சுகா! ஞானம் பிறக்க வேண்டுமானால் ஒரு குருவின் அருள்தேவை. நீ ஞானவான் ஆகிவிட்டதாக உன் குரு அறிவிக்க வேண்டும்!".

"எனக்குத் தெரிந்த குரு யாருமில்லையே! நீங்களே சொல்லுங்கள். நான் யாரை குருவாக ஏற்பது?".

"மிதிலை மன்னர் ஜனகரைப் பார். அவர் ஒப்புக்கொண்டால், உனக்கு ஞானம் பிறந்து விட்டதாக அர்த்தம். அவர் இல்லறத்திலும், அரசாங்கத்திலும் இருந்தாலும் பற்றற்றவர். கர்மயோகி".

"சரி.. உடனே அவரைச் சந்திக்கிறேன்,".

சுகர் மிதிலையை அடைந்து ஜனகரை வணங்கினார். "தாங்கள் யார்? என்ன விஷயமாக வருகிறீர்கள்?"

"பெயர் சுகர், தந்தை வேதம் வகுத்த வியாசர், நான் ஞானவானாகி விட்டேனா என்று அறிந்து கொள்ள வந்தேன். தங்களையே குருவாக ஏற்று அதைத் தெரிந்து வரும்படி தந்தையின் கட்டளை!".


"அப்படியா? அரண்மனைக்குள் வரும் போது என்ன பார்த்தீர்கள்?"

"தூண்கள், படிக்கட்டுகள், தரைத்தளங்கள் ஆகிய சர்க்கரைத் துண்டுகளைப் பார்த்தேன். ஆங்காங்கே சர்க்கரைத் துண்டுகளாய் நிற்கும் காவலர்களைக் கண்டேன். இப்போது, ஒரு சர்க்கரைத் துண்டுடன் இன்னொரு சர்க்கரைத் துண்டாய் நின்று பேசிக்கொண்டிருக்கிறேன்,".

"சுகப்பிரம்மரே! தாங்கள் ஏற்கனவே ஞானியாகத்தான் இருக்கிறீர்கள்! நீங்கள் செல்லலாம்,".. விடை கொடுத்தார் ஜனகர்.

இந்த உலகில் நாம் வாழும் வீடும், கட்டிய கட்டடங்களும் ஒருநாள் சர்க்கரை போல் கரைந்து போகும். மனிதராகிய நாமும் மண்ணோடு மண்ணாய் கரைந்து போவோம். இதை யார் உணர்ந்து நடந்து கொள்கிறானோ, அவர்கள் எல்லாருமேஞானிகள் தான்!

## அன்புக்கு மதிப்பு அதிகம்



- கடவுள் நமது ஒவ்வொரு அசைவையும் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்; அவரை எப்போதும் மறக்கமாட்டேன்; யார் எதிர்த்தாலும் உண்மையை கைவிடமாட்டேன்; எதற்காகவும் பயப்படமாட்டேன் என்ற லட்சியங்களை மனதில் விதைத்துக் கொண்டு வாழுங்கள்.
- உண்மை எதற்கும் பயப்படுவதில்லை; பொய் நிழலைக் கண்டுகூட பயப்படுகிறது.
- கடவுள் அனைத்தையும் நிகழ்த்துபவராக இருக்கிறார். மனிதர்கள் அவரால் ஆட்டுவிக்கப்படும் கருவிகளே.
- எளிமையாகவும், கடமைஉணர்ச்சியுடனும் வாழுங்கள். உங்களை நீங்களே சுயபரிசோதனை செய்து கொள்ளுங்கள்.
- அன்புடன் செய்யப்படும் எந்த வேலைக்கும் மதிப்பு அதிகம். அன்பில்லாத இடத்தில் பக்தி இருப்பது இல்லை.
- மனிதர்களிடம் சமயம் குறித்த கோட்பாடுகள் விதைக்கப்பட வேண்டும்
- தியாகம் செய்வதால் மட்டுமே, நிலையான வெற்றியைப் பெற முடியும்.

**- சாய்பாபா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

49 வயதான ஜிம்கொப்பர் கட்டுறுதியான உடல் வாகினைக் கொண்டிருப்பதுடன் 6 அடி 2 அங்குல உயரமுமுடையவர். அவரது 45 வயதான மனைவி யூடியுடனும் நான்கு பிள்ளைகள் மற்றும் ஒன்பது பேரப்பிள்ளைகளுடனும் டுபோயிஸ் நகரத்தில் உள்ள அவர்களது சொந்த வீட்டில் வாழ்ந்து வந்தனர்.

டுபோயிஸ் நகரத்திலிருந்து 30 மைல் கிழக்காகக் கடல் மட்டத்திலிருந்து 7000 அடி உயரத்திலிருந்த ஓர் பின்தங்கிய கிராமப்புறத்தில் அமைந்துள்ள 1500 ஏக்கர் விஸ்தீரணமான ஓர் கால்நடை வளர்ப்புப் பண்ணைக்கும் நெல்வயல் வெளிக்கும் ஜிம்கொப்பர் உரிமையாளராவார்.

மாட்டிறைச்சி மற்றும் பால் ஆகியவற்றை வியாபாரிகளுக்கு விநியோகிப்பது அத்துடன் நல்லினக் குதிரைகளைப் பேணி வளர்த்து அவற்றினைச் சந்தைப்படுத்துவதிலும் சுமார் 20 வருடங்களுக்கு மேலாக ஈடுபட்டு வருபவர் ஜிம்.

ஆயினும் எதிர்பாராத விதத்தில் கால்நடைகள் நோயின் தாக்கத்தினால் மடித்ததினாலும் இறைச்சி விற்பனையில் ஏற்பட்ட வீழ்ச்சியினாலும் அவரது தொழிலில் பாரிய நஸ்டம் ஏற்பட்டது. வங்கிகளில் ஏற்கனவே பட்ட கடன்களை அடைக்கவேண்டிய நெருக்கடி நிறைந்த சூழ்நிலையில் இருந்தார் ஜிம்கொம்பர்.

# செல்ல நாய் லெரோய்!

உண்மைச் சம்பவம்

அத்துடன் என்றுமில்லாதவாறு கடும் வரட்சியும் நிலவியது. அண்மையில்தான் அவரது நெல்வயல்களின் அறுவடை முடிவுற்றிருந்தது. பண்ணையில் கால்நடைகளுக்கான முக்கிய தீனியாக வைக்கோல் விளங்குவதால் அறுவடையின்போது கிடைக்கப்பெற்ற வைக்கோலினைச் சேதமுறாது பாதுகாப்பாக ஓரிடத்தில் சேகரித்து வைக்க வேண்டியது அவசியமாகும். எனவே அவரது வயல்களில் ஆங்காங்கே கிடக்கும் வைக்கோலினை ஓரிடத்தில் குவிக்க வேண்டிய பாரிய வேலை அவருக்காகக் காத்திருந்தது.

அன்று அதிகாலை 4 மணிக்கே அவருக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தின் பின்னால் வைக்கோலை ஏற்றிப் பறிப்பதற்காகச் சரக்குப் பெட்டியினையும் கொளுவிக்கொண்டு வீட்டைவிட்டுப் புறப்பட்டார் ஜிம்.

பண்ணைக்குச் செல்லும் வேலைத்திட்டம் பற்றி மனைவி யூடிக்கு முதல் நாளே ஜிம் தெரிவித்திருந்தமையால் அவளைத் தூக்கத்திலிருந்தும் எழுப்பாது அதிகாலையில் புறப்பட்டுவிட்டார். ஆனால் அவரையறியாமலே அவரது செல்லப்பிராணியான வீட்டு வளர்ப்புநாய் லெறோய் சரக்குப் பெட்டியினுள் சப்தமெதுவுமின்றி ஏறி அமர்ந்து கொண்டது. அதிகாலையின் மங்கலான வெளிச்சத்தில் புறப்படும் அவசரத்திலும் லெறோய் இரகசியமாக ஏறி உட்கார்ந்து கொண்டதை ஜிம் கவனிக்கவில்லை.

லெறோய், எஜமானர் ஜிம்முடன் அப்பண்ணைக்குச் செல்வது ஒன்றும் புதிதுமல்ல, புதுமையுமல்ல. அடிக்கடி ஜிம் அதனை அங்கு அழைத்துச் செல்வது வழக்கம். பண்ணையில் வயல்களுக்கு நீர்ப்பாய்ச்சுவதற்காக நீர் வடிகால்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதில் எந்நேரமும் நீர் பாய்ந்தோடியபடி இருக்கும். அங்கு செல்லும் சமயங்களில் எல்லாம் ஜிம் "லெறோய் போய்க் குளித்துவிட்டு வா" என்று சொன்னதும்தான் தாமதம் லெறோய் பாய்ச்சலில் சென்று வாய்க்காலில் குதித்து நீரில் நீந்தி விளையாடும். அதில் அதற்கு அத்தனை அலாதிப் பிரியம். சில சமயங்களில் நீரினைவிட்டு வெளியே வராது அதனுள்ளேயே கிடக்கும். அதனை ஒருவாறு வெளியேற்றி வீட்டிற்கு அழைத்து வருவதென்பது ஜிம்முக்குப் போதும் போதும் என்றாகிவிடும். அதன் காரணமாகவே லெறோயை அடிக்கடி பண்ணைக்குக் கூட்டிச் செல்வதை ஜிம் அதிகம் விரும்புவதில்லை.

எனினும் அன்றும் லெறோய் அவரையறியாமலே பண்ணைக்கான பயணத்தில் தொற்றிக்கொண்டுவிட்டது. லெறோய் ஒன்றும் சாதாரண இனத்தைச் சேர்ந்ததல்ல. உயர்தர நல்லினத்தைச் சேர்ந்தது. 110 இறாத்தல் நிறைகொண்டது. அத்துடன் மிருதுவான மயிர்க்கற்றைகளை உடலெங்கும் கொண்டிருந்தது. முதன்முதலில் அதனைக் காண்பவர்கள் அதன் தோற்றத்தைக் கண்டு பயங்கொள்வர். ஆனால் மிகுந்த எஜமான் விசுவாசமுடைய லெறோய் நன்கு பழக்கமானவர்களுக்குத் தீங்கெதுவும் இழைக்காது. அதற்கு 4 வயது பூர்த்தியடைந்து விட்டது.

பண்ணையைச் சென்றடைந்த ஜிம்மை உழவு இயந்திரத்தைவிட்டு கீழறங்கியதுமே ஓர் அதிசயம் காத்திருந்தது. அவரது செல்லம் லெறோய் வாலையாட்டியபடி அவரது காலடியில் வளைந்து குழைந்தபடி நின்றிருந்தது. அத்தருணத்தில் அன்றையதினம் லெறோய் வந்தது தனது வேலைக்கு இடைஞ்சலாக இருக்குமெனக் கருதிச் சற்றுக் கோபமடைந்தாலும் தன்னந்தனியனாக வேலைசெய்யப்போகும் தனக்கு ஓர் துணையாக இருக்கட்டுமெனக் கருதி மனதைச் சாந்தப்படுத்திக்கொண்டு பண்ணையில் இருந்த வயற்பரப்பில் ஆங்காங்கே கிடக்கும் வைக்கோலைப் பெட்டியில் ஏற்றி ஓரிடத்தில் குவிக்கும் பணியில் ஈடுபடத் தொடங்கினார்.

மதியம் 1 மணியளவில் அரைவாசிக்கும் மேலான பகுதியில் இருந்த வைக்கோல் ஒருவறாக ஓரிடத்தில் குவிக்கப்பட்டாயிற்று. சற்று இளைப்பாறிவிட்டு மீண்டும் வேலையில் இறங்கினார் ஜிம். எதுவிதத்திலும் மாலை இருட்டுவதற்குள் வேலையை முடித்துக்கொண்டு பண்ணையைவிட்டு வெளியேறிவிடவேண்டுமென்ற நோக்குடன் உடல் அசதியையும் கருதாது முழுமூச்சுடன் வைக்கோலை ஏற்றிப் பறிக்கும் வேலையில் ஈடுபட்டிருந்தார்.

தமிழில் - ஜெகன்

அதேவேளையில் அவரது பண்ணைக்குச் சற்று அப்பால் அடுத்துள்ள பண்ணையிலும் உழவு இயந்திரம் வேலைசெய்யும் ஓசை கேட்டவாறிருந்தது. அப்பண்ணையின் உரிமையாளரான ரொம் ஸ்ரீசரும் அவரது மகனான டேவிட்டும் அங்கும் இதே வேலையில்தான் ஈடுபட்டுள்ளனர் போலும் என மனதில் எண்ணிக் கொண்டார் ஜிம்.

வைக்கோலை ஏற்றிப் பறிக்கும் பொழுதுகளில் உழவு இயந்திரத்தினைப் பெட்டியுடன் இணைத்துக் கொளுவியிருந்த இரும்புச் சங்கிலி அடிக்கடி வழுக்கிச் சறுக்கி நழுவியது. அதனால் ஜிம் அவ்வாறான சமயங்களில் எல்லாம் உழவு இயந்திரத்தை விட்டிறங்கிப் பின்னால் சென்று உழவு இயந்திரத்தின் பின் புறத்திற்குக் கீழே குனிந்து சென்று பெட்டியைக் கொளுவும் சங்கிலியைச் சீர்செய்து பிணைக்கவேண்டி நேரிட்டது.

அவ்விதம் ஒரு தடவை ஜிம், உழவு இயந்திரத்தின் பின்புறமாகக் குனிந்து நின்று சங்கிலியைக் கொளுவ முயற்சிக்கையில் எதிர்பாராதவிதத்தில் உழவு இயந்திரம் பின்னோக்கி உருளத் தொடங்கியது. கைகளில் இரும்புச் சங்கிலியைத் தாங்கியவாறு வைக்கோல் பாரத்துடன் நின்றிருந்த பெட்டியின் பக்கம் பார்வையைச் செலுத்தியவண்ணம் நின்ற ஜிம் உழவு இயந்திரம் தன்னை நோக்கி வருவதைச் சற்றும் கவனிக்கவில்லை. வந்தவேகத்தில் அவரை மோதியதும் அவர் தலைக்குப்புறக் கீழே விழுந்தநிலையில் அவரின் இரண்டு கால்களின் மேலாகவும் குறுக்காக ஏறிச் சென்று பெட்டியுடன் இடிபட்டு ஓய்வு நிலைக்கு வந்தது.

9600 இறாத்தல் எடைகொண்ட உழவு இயந்திரம்



அவரது கால்களின் மேலால் ஏறிய வேளையில் ஜிம் வேதனையால் எழுப்பிய அவலக்குரல் அப்பரந்த வெளியில் வீசிய காற்றின் இரைச்சலுடன் சங்கமமாகிவிட்டது.

நசியுண்ட கால்களை அசைக்க முடியவில்லை. குப்புறக்கிடந்த நிலையில் துடியாய்த் துடித்தார். உதவிக்கு ஒருவருமில்லை. அவரால் அதற்கு மேல் குரலெழுப்பிக் கத்தவும் முடியவில்லை. வலியாலும் வேதனையாலும் குரல் தொண்டையில் அடைத்துக்கொண்டது. புழுப்போலத் தரையில் கிடந்து துடித்தார். அவரால் ஒரு பக்கமும் கால்களை அசைத்துத் திருப்பவோ அல்லது புரளவோ இயலாது போயிற்று. அவர் படும் வேதனையை உணர்ந்த லெறோய் மட்டும் அவரருகில் வந்து பக்கத்தில் இருந்தவாறு அவர் கன்னங்களை ஆறுதலாக நக்கியது. அத்துடன் முனகியபடி அழுது கொண்டிருந்தது.

காலம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. மாலையாகியது. இருள் கவிவத் தொடங்கியது. ஜிம்மின் நினைவில் மனைவி பிள்ளைகள் பேரப்பிள்ளைகள் தோன்றினர். அத்துடன் அவர்களுக்கிருக்கும் கடன் பளுவையும் எண்ணி அந்நிலையிலும் கூட கண்கலங்கினார். தட்டந்தனியனாகத் தனது மரணம் சம்பவிக்கப் போகின்றதே என எண்ணியவர், அவரது செல்லம்! லெறோய் அருகிலிருந்தது அவருக்குச் சற்று மனோதிடத்தைக் கொடுத்தது.

வலி, வேதனைகளுடனும் நித்திரையின்றியும் இரவுப் பொழுது கழிந்தது. காலையாகியது. எவரை உதவிக்கு அழைப்பது? எப்படி அழைப்பது? ஜிம்மால் எழும்பவோ, அசையவோ அல்லது கத்தவோ இயலாது! வெயில் ஏற ஏற சூரிய வெப்பத்தினால் வியர்வை உடலெங்கும் வழிந்தோடியது. உடைத்தெறியப்பட்ட கொல்லைப் பொம்மைபோலத் தரையில் கிடந்தார் ஜிம். மதியமாகியதும் வெய்யிலின் தன்மை உக்கிரமடைந்தது. ஜிம்மின் உடலில் வியர்ப்பது நின்று விட்டது. அனுபவம் வாய்ந்தவரான ஜிம்முக்கு ஒன்று மட்டும் தெட்டத் தெளிவாக விளங்கி விட்டது. அவருடலில் இருந்த நீர் முழுவதும் வியர்வை மூலம் வெளியேறிவிட்டது. உடலில் நீர்ப்பிடிப்பு இன்மையால்தான் வியர்க்கவில்லை என்பதே அதுவாகும். அத்துடன் அவர் ஒரு சிறிதளவு நீரைத் தன்னும் உடலினுள் செலுத்தாதுவிடின் மிக விரைவில் மரணம் சம்பவிக்கும் என்பதையும் நன்கறிந்துகொண்டார்.

அந்நிலையிலும் அவர் மனம் தளராது விவேகத்துடன் அருகிலிருந்த லெறோயிடம் முன்பெல்லாம் கூறியதைப் போல் "லெறோய் போய்க் குளித்துவிட்டு வா" என முனகியபடி மெதுவாகக் கூறினார். பழக்க தோஷத்தினால் உந்தப்பட்ட லெறோய் நீர்ப்பாயும் வாய்க்காலுக்குச் சென்று குளித்துவிட்டு உடலில் இருந்து நீர் சொட்டச் சொட்ட அவர் முகத்தின் அருகில் வந்து நின்றது.

ஜிம் ஒருவாறு தலையைச் சரித்து உயர்த்தி லெறோயின் மயிர்க்கற்றைகளில் இருந்து வழிந்துவிழும் நீரினைச் சொட்டுச் சொட்டாக வாயினுள் ஏந்திக் கஸ்ரப்பட்டு வறண்டிருந்த அவரது வாயினுள் ஏந்திக் கஸ்ரப்பட்டு தொண்டைக் குழாயினூடாக உள்ளிறக்கினார். நீர் சிறிது சிறிதாக உட்செல்லத் தொடங்கியதும் ஜிம்மின் உடலில் சற்றுத் தெம்பு பிறந்தது. மீண்டும் மீண்டும் லெறோயினைக் குளிக்க அனுப்பி அவ்விதமாக ஓரளவு நீரினை உடலுக்குள் வாங்கிக் கொண்டார்.

நேரமும் மதியத்தைத் தாண்டி 2 மணிக்கு மேலாகிவிட்டது. உதவி ஏதும் கிடைப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை. இருள முன்னர் எவராவது வந்து உதவி செய்தால் தான் உயிர்தப்ப முடியும். அல்லாதுவிடின் அன்றிரவே அவர் மடிய நேரிடும் என்பதைத் தெளிவாகப் புரிந்து கொண்டுவிட்டார். ஆயினும் அவரால் என்னதான் செய்யமுடியும்

நொருங்கிய கால்களிரண்டினதும் வேதனை தாங்கமுடியாததாகவிருந்தது. பசியும் தாகமும் வேறு அவரை வாட்டிவதைத்தது. லெறோயின் ஒரேயொரு ஆறுதலைத் தவிர வேறெதுவும் இல்லை. அந்நேரத்தில் ஜிம்மின் பண்ணைக் கரையோரமாகச் செல்லும் குண்டும் குழியுமான பாதையில், சற்றுத் தொலைவில் ஓர் வாகனம் வந்துகொண்டிருக்கும் இரைச்சல் கேட்டது.

இனியும் தாமதிப்பது, மடமை என எண்ணிய ஜிம் அவரது தசைகளில் முறுக்கேற்றிக் கொண்டு வேதனையைக் கருதாது சற்றுத் தலையை உயர்த்தி நிமிர்ந்து நிலத்தில் ஒரு கையை ஊன்றியபடி மறுகையினால் அசைத்து அசைத்து அவரால் இயன்றமட்டில் உதவிகோரிக் குரலெழுப்பினார்.

வந்துகொண்டிருந்த வாகனத்தில் பயணித்தவர்கள் வேறுயாருமல்ல. ஜிம்மின் பண்ணைக்கு அடுத்து ஒருசில மைல்கள் தொலைவிலுள்ள மற்றுமொரு பண்ணையின் உரிமையாளரான ஜெரியும் அவரது மனைவியான கரோல் கூப்பருமேயாகும்.

அவர்களது பண்ணையில் வேலைசெய்து கொண்டிருக்கும் அவர்களது மகனைப் பார்ப்பதற்காகவே அவர்கள் வந்துகொண்டிருந்தனர்.

அதிஸ்டவசமாகக் காரிலமர்ந்தவாறே வெளியில் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்த கரோல் கூப்பரின் பார்வையில் ஜிம் தரையில் கிடந்தபடி கையை அசைப்பதும், அருகில் ஓர் உழவு இயந்திரம் சரிந்து சாய்வான நிலையில் நிற்பதும் பட்டது. ஏதோ விபரீதம் நடந்துவிட்டது போலும் என எண்ணியவள் கணவர் ஜெரியிடம் அதனைச் சுட்டிக்காட்டித் தெரிவித்தாள்.

கார் நிறுத்தப்பட்டு, அவ்விடத்திற்கு விரைந்த தம்பதியினர் ஜிம்மின் அவலநிலையைக் கண்டு திகைத்தனர். உடனடியாக அவசர அவசரமான உதவிப் பிரிவுக்குத் தகவலை அனுப்பினார்கள். தகவல் கிடைத்ததும் தாமதமின்றி உடனடியாக வானூர்தி ஒன்று ஒரு மணித்தியாலத்திற்குள் அவ்விடத்தில் வந்து தரையிறக்கப்பட்டது.

ஜிம்மை மிக அவதானத்துடன் வானூர்தியிலேற்றி மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட வேளையில் ஜிம் சுயநினைவை இழந்துவிட்டார். அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சையளிக்கப்பட்டது. விலா எலும்புகள் சிலவும் முழங்கால் சிரட்டைகள் இரண்டிலும் வெடிப்புகள் ஏற்பட்டிருந்தன. சிறந்த மருத்துவ நிபுணர்களினால் தகுந்த சிகிச்சைகள் வழங்கப்பட்டன. 45 நாட்களின் பின்னர் அவர் உடல் நலம் தேறிய நிலையில் வீடு திரும்பினார்.

அவருக்குச் சிகிச்சையளித்த மருத்துவர்கள் நடந்தவை யாவற்றையும் கேள்விப்பட்டு லெறோய் மட்டும் அதன் உடலை நனைத்து நனைத்து வந்து அந்நேரத்தில் அந்நீரினை அவர் நக்கியோ அல்லது உறிஞ்சியோ குடிக்க வைத்திராவிட்டால் அவரது உயிர் மருத்துவமனைக்குக் கொண்டு வருவதற்குப் பல மணித்தியாலங்களுக்கு முன்பே பிரிந்திருக்கும் என்ற யதார்த்த பூர்வமான உண்மையைக் கூறி லெறோயின் விசுவாசத்தைப் பாராட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரவசப்படாதீர்கள்..
# எதையும் பெரிதாகப் பார்க்காதீர்கள்!



அமெரிக்கக் கவிஞர் லாங்ஃபெல்லோ வாழ்க்கை பற்றிப் பாமாலையில் கூறுகிறார்: **'வாழ்க்கை நிஜமானது. வாழ்க்கை உயர்ந்தது.** இதற்குத் தோள்களை உயர்த்தியே இருக்க வேண்டுமென்பதில்லை.'

கிப்ளிங் சொன்ன சமநிலை வாக்கியம் 'வெற்றி தோல்வியை ஒன்றாகப் பார்; இவை இரண்டுமே மாய்மாலம் காட்டுபவை.'

நடக்கும் நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் மிகையாக உணர்ச்சி வசப்பட்டு, மிகுதியான மதிப்புக் கொடுத்தால், வாழ்க்கையில் இருந்து கூடுதலாகக் கிடைக்கப் பெறுவீர்கள். உற்சாசம் மிகுதியாவது போல மனமுறிவும் மிகுதியாகும். உடல் அளவில், மனத்தளவில், உணர்ச்சி அளவில் இது சரியில்லை.

**உங்களுக்கு ஒரு மாற்று வழி இருக்கிறது. அதுதான் குறைவாய் உணர்ச்சி வசப்படுவது.**

உங்கள் வாழ்க்கையில் நடக்கும் நிகழ்ச்சிகளை நீங்கள் மிகைப்படக் கருதி, மிகுதியாக உணர்ச்சிவசப்பட்டு, அதிகப்படியான நாடகம் போல நடத்திச் செல்ல மாட்டீர்கள் என்பது இதன் பொருள்.

நடக்கும் நிகழ்ச்சிகளால் மெய் மறந்து போகாமல், சோகங்களில் மூழ்கிப் போகாமல், **நீங்கள் சுருதி குறைத்துக் கொள்வீர்கள்.**

ஒவ்வொரு வெற்றியையும் அடைய வொண்ணாத சிகரமாக நீங்கள் பார்க்க மாட்டீர்கள். வெற்றியை நடப்பு நிகழ்ச்சியாக ஏற்பீர்கள். உங்களுக்குத் திருப்திதான். ஆனால் குறைவாய் உணர்ச்சிவசப் படுவீர்கள். அதைப் பெரிய விஷயமாக்க மாட்டீர்கள். இன்னும் நன்றாகச் செய்ய உங்களைத் தயார்படுத்திக் கொள்வீர்கள்.

அது போன்றே தோல்வியையும் மீள முடியாத ஆழமான விபத்தாகக் கருத மாட்டீர்கள். உங்கள் லட்சியப் பாதையில் தோல்வி ஒரு தடைக்கல் - அவ்வளவே. வேறு ஒன்றும் இல்லை. எதையும் பெரிது படுத்த மாட்டீர்கள். குறைவாய் உணர்ச்சி காட்டுவீர்கள். அடுத்த முறை சரியாய்ச் செய்ய சிந்திப்பீர்கள்.

இயற்கையின் நிகழ்ச்சிகளைப் போல உங்கள் வாழ்க்கை நிகழ்ச்சிகளையும் காணப் பழகுங்கள். மழை பெய்கிறது. தொடர்ந்து பெய்கிறது. அவ்வளவே. மழை பெய்யும். பிறகு மழை நிற்கும். பெய்யும் வரை பெய்தது தான். பெரிய விஷயமில்லை. இதுவே குறை வாய் உணர்வது.

வெயில் அடிக்கிறது மகிழ்ச்சியடைந்து கைத்தட்டத் தேவை இல்லை. பெரிய விஷய மில்லை. ஆதவன் பகலில் காய்வான். **நீங்கள் குறைவாய் உணர்கிறீர்கள்.** ஏனென்றால் இன்னொரு நாள் மழை பெய்யும். மீண்டும் ஆதவன் ஒளி வீசுவான்.

ஆனால், துயரச் சம்பவம் ஒன்று நிகழ்ந்து விடுகிறது. இது நிஜமான துயரம். இது வலிக் கிறது. ஆம்.. மிகவும் வலிக்கிறது. இதை நீங்கள் ஏற்றுக் கொண்டால் வலி குறையும்.

வில்லியம் ஜேம்ஸ் அறிவுரையைச் செவிமடுங்கள். அது நடந்ததை ஏற்றுக் கொள் ளுங்கள். நிகழ்ந்ததை ஏற்றுக் கொள்வது எந்தத் துயரத்தின் விளைவுகளையும் எதிர்கொள்ள உதவும் முதற்படியாகும்.

"ஏற்பதின் மூலம், சோகத்திலிருந்து அமை தியை நோக்கி உங்கள் ஆன்மிக மாற்றம் நிகழ்கிறது' மிதமிஞ்சிய உணர்ச்சியை விட இது சிறந்தது. வாழ்க்கை என்னும் புத்தகத் தில் இன்னொரு படிப்பினை. **'விதி ஒரு கதவைச் சாத்தும் போது, நம்பிக்கை மற்றொரு கதவைத் திறக்கிறது. திறந்த கதவை நாடுங்கள்.'**

வாழ்க்கையின் எல்லா நிகழ்வுகளும் பெருத்த சோகங்கள் அல்ல.
பெருத்த விபத்துகள் அல்ல.

பெருத்த வெற்றி களுமல்ல.

அவை நடப்புகள்; அவ் வளவே!

உங்கள் சிந்தனை களிலும் நெகிழ்ச்சிகளிலும் **நடப்புகள்** வெற் றிகளாக விபத்துகளாகத் தோன்றுவதை நீங்கள் தடுக்க வேண்டும்.

நடப்புகள் பெரிய விஷயங்களாக உங்களை மிகையான உணர்ச்சிவசப்படலுக்கு ஆளாக் கினால், வெற்றிகளாகவோ விபத்துகளாகவோ நீங்கள் அவற்றைப் பாவித்தால், உங்கள் வாழ்க்கையே உணர்ச்சிகளின் மேடு பள்ளமாகி, பாதாளக் கிணற்றுப் பயணமாகிவிடும்.

நீங்கள் சமநிலை இழக்க நேரிடும்.

பகலவனின் ஒளியையும் மழையையும் வெறும் நடப்புகளாக ஏற்றுக் கொள்கிற சகஜ பாவத் துடனேயே, நீங்கள் உங்கள் வாழ்க்கையின் நடப்புகளையும் ஏற்கப் பழக வேண்டும்.

**அமைதியான வகையில் குறைவாக உணர்ச்சிவசப்படுங்கள்.**

**உங்கள் வாழ்க்கையில் எதிர் உணர் வுகளை உதறித் தள்ளுங்கள்!**

பிறரை மட்டம் தட்டுவதும் அவதூறு பேசு வதும் தாழ்வான செயல்கள்.

மட்டம் தட்டுவது ஆபத்தான ஆயுதம். அது கைப்பிடி இல்லாத கத்தி. யார் மட்டும் தட்டு கிறாரோ அவரையும், யார் மட்டம் தட்டப்படு கிறாரோ, அவரையும் புண்படுத்தும்.

நல்லதை நாசமாக்கும் போதுதான், மட்டம் தட்டும் போக்கு பிறரால் விமர்சிக்கப்படுகிறது.

கெட்டதை மட்டம் தட்டுவதை நீங்கள் மனோதத்துவ முறையாக ஏற்றுச் செயல்படுங்கள்.

உங்கள் வாழ்க்கையில் எதிர்மறை அம்சங் களை நீங்கள் மட்டம் தட்டுங்கள்.

இப்படி செய்வது மனோதத்துவ ஆசிரியர்கள் சொல்வது போல **நல்லதை வலியுறுத்தும் பணி.** நேர்மறை நம்பிக்கைகளை திட்டவட் டமாக சிந்தித்துச் செயல்படுத்தும், எழுத்து வடிவில் காட்டும் வழிமுறை.

இந்த வழியை உதாரணங்கள் மூலம் விரிவாக்கலாம். நீங்களே இதைப் பயன்படுத் தலாம். நல்லதை வலியுறுத் தும் இந்த முயற்சியில் எதிர்மறைகளை மட்டம் தட்டலாம்.

சில பொதுவான உதாரணங்கள்



***இதோ:***

1. எதிர்காலத்தில் நடக்கப் போவதை நினைத்து கவலைப்படுவது **அபத்தம்** - ஏனென்றால் எதுவும் நடக்கலாம்.

2. கடந்த காலத்தை நினைத்து ஒரு விநாடி நேரம் கூட வருந்துவதும் **அபத்தம்** - கடந்த காலம் சென்று ஒழிந்தது. அதை மாற்ற முடியாது.

3. யாரையும் விமர்சிப்பது **அபத்தம்** - ஏனென்றால் விமர்சனம் எரிச்சலையே உருவாக் குகிறது. சரியான விஷயங்களைக் கற்றுத்தர வேறு சிறப்பான மனோதத்துவ வழிகள் இருக்கின்றன.

4. என்னுடைய கெட்ட பழக்கங்களில் (வெற் றிலை போடுவது, புகைப்பிடிப்பது) நான் தொடர்ந்து ஈடுபடுவது **அபத்தம்.** ஒரு கெட்ட பழக்கம் நிறுத்தப்படாத போது, அடுத்த கெட்ட பழக்கங் களும் என்னை தம் வலையில் சிக்க வைக்க முயலும்.

5. ஒரு மனிதனின் தோலின் நிறம், அவர் அறிவையோ திறமையையோ தனிப்பட்ட முறையில் வெற்றி வாய்ப்பையோ கட்டுப்படுத்தும் என்பது **அபத்தம்.** (அமெரிக்காவில் நீக்ரோக களைக் கறுப்பர்கள் என்று ஒதுக்குவது - மட்டம் தட்டுவது)

6. குழந்தைப் பருவத்தை மகிழ்ச்சி அற்ற விதத்தில் கழித்த அனுபவமானது, என் முழு வாழ்க்கையையும் பாதிக்கும் படி விடுவது **அபத்தம்.**

7. நாளை செய்ய வேண்டிய பணிகளின் பொறுப்பையும் இன்றைய பொறுப்புகளுடன் சேர்த்துக் கொள்வது **அபத்தம்.** நாளைய கடமைகள் நாளை செய்யப்படட்டும். இன்றைய சுமையை இன்று நாம் சுமப்போம்.

8. எனக்குப் பிடிக்காத ஒரு நபர் பற்றி ஒரு நிமிடம் சிந்திப்பது கூட **அபத்தம்.** எந்த மனிதரின் செயல்களை நான் பொறுமையாக ஆராய்ந்து அவரை மன்னிக்கத் தயாரில் லையோ, அவரைப் பற்றி மறந்து விடுவதே புத்தியுள்ள செயல்.

9. நான் கோருகிறேன், நாங்கள் கோருகிறோம் என்பதே **அபத்தம்.** கோரிக்கை எதிரா ளியிடம் உடனடியாகத் தர இயலாத மனோ பாவத்தை உருவாக்குகிறது. பேச்சுவார்த்தை, சமரச உடன்பாடு இவை நட்புறவுடன் மரியாதையுடன் பரிசீலிக் கப்பட்டு, எல்லோரும் விட்டுக் கொடுத்து, பரஸ்பரம் கைகுலுக்கிப் பிரிவது நாகரிகமான கோரிக்கையை நிறை வேற்றும் முறை.

இந்த உதாரணங்களில் அபத்தம் எனக் குறிப்பிடப்பட்டவை மட்டம் தட்டும் போக்கே. எதிர்மறையான, விரும்பத்தகாத பண்புகளை நீக்க, அவற்றை 'அபத்தம்' என உணர்ந்து செயல்படுவது நல்லது.

மனோதத்துவ ரீதியாக உங்களை அபத்தம் ஆக்கும் சமாசாரங்கள் அருவருப்பு ஏற்படுத் துகின்றன. நீங்கள் செயல்பட்ட முறை அபத்தம் என்பதும் இதில் அடக்கம்.

உங்களிடம் உள்ள எதிர்மறையான விரும் பத்தகாத பழக்கங்களை, பண்புகளை, அபத்தம் என உணர்ந்து அவற்றை உங்கள் வாழ்க் கையிலிருந்து வெளியேற்ற உதவி செய்யும்.

நீங்கள் அபத்தம் என்று உணர்வதை மனோதத்துவ ரீதியாக நீங்கள் செய்ய மாட்டீர்கள். எனவே நீங்கள் செய்ய வேண்டாம் என்று நினைப்பவற்றை **'அபத்தம்'** என்று முத்திரையிடுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லப்பிராணிக்காக தேனிலவை ரத்து செய்த தம்பதி!

புதிதாக திருமணமான தம்பதியினர், 1,518,550 இலங்கை ரூபா பெறுமதியில் ஏற்பாடு செய்திருந்த தேனிலவை செல்லப்பிராணியின் உயிரைக் காப்பாற்றுவதற்காக ரத்துச் செய்த சம்பவமொன்று இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

இங்கிலாந்தின் மொரிஸ்டன் பகுதியைச் சேர்ந்த கிலெய்ரி (வயது 26) மற்றும் கெரி மோர்கன் (வயது 36) ஆகியோரே இவ்வாறு செல்லப்பிராணிக்காக தமது தேனிலவை இரத்துச் செய்தனர்.

மேற்படி தம்பதியினர் அமெரிக்க ரகத்தைச் சேர்ந்த டீடோ என்ற நாயை வளர்த்து வந்துள்ளனர். இந்நாயின் தோல்பட்டையில் ஏற்பட்ட புற்றுநோய் காரணமாக அதனது வலது கால் துண்டிக்கபட்டது.

இந்நிலையில், மேற்படி செல்லப்பிராணியை குணப்படுத்துவதற்காக இத்தம்பதியினர் இலங்கை ரூபா 1,518,550 செலவில் தேனிலவை இரத்துச் செய்துள்ளனர்.

'நாங்கள் தேனிலவு கனவைக் எதிர்பார்த்திருந்தோம். ஆனால் அதற்கு முன் எமது செல்லப்பிராணியான டீடோவின் நிலையே எமது ஞாபகத்தில் வந்தது.

அது மிகவும் விசேடமான நாய். நாங்கள் அதனது சத்திரசிகிச்சைக்கான கட்டணங்களை செலவிடுவதற்கு எந்த தயக்கமும் காட்டவில்லை' என மொரிஸ்டன் தெரிவித்துள்ளார்.

"டீடோவின் மருத்துவ செலவுகளுக்கு பணம் செலவிடுவது ஒரு பெரிய விடயமில்லையென நாங்கள் மிருக வைத்தியரிடம் தெரிவித்தோம். எப்படியாயினும் எமது நாயை குணப்படுத்திக்கொள்ள வேண்டும்' என மோர்கன் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் டீடோவை குணப்படுத்திக்கொண்டால் வேறு ஒரு தினத்தை தேனிலவுக்காக செலவிடமுடியும். டீடோ நீண்ட காலம் வாழவேண்டும் என்பதே எமது எண்ணம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.







# மனதை நெகிழவைக்கும் தாய் பாசம்

சீனாவில் தாயின் கனவை நிறைவேற்ற 3500 கி.மீ. தூரம் வீல்சேரில் அழைத்துச் சென்றுள்ளார் மகன்.



சீனத் தலைநகர் பீஜிங்கை சேர்ந்தவர் பான் மெங்க்(வயது 26). இவரது தாய் கோவ் மின்ஜுன் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாமல் போனார்.

இதனால் பல ஆண்டுகளாக வீல் சேரில்தான் காலத்தை கழித்து வருகிறார். இவர் யுனான் மாகாணத்தில் உள்ள ஜிஸ்ஹுவாங்பனா பகுதியை சுற்றிப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டதால் அந்தக் கனவு நிறைவேறாது என்று நினைத்தார். ஆனால், 26 வயது மகன் பான் மெங்க், தாயின் கனவை நிறைவேற்ற முடிவெடுத்தார்.


வீல் சேரில் இருக்கும் தாயை பஸ், ரயில், விமானத்தில் அழைத்துச் செல்வது பெரும் சிக்கலாக இருந்தது. கடைசியில் துணிந்து வீல் சேரிலேயே தாயை அழைத்துக் கொண்டு கிளம்பினார்.

ஒருநாள், இரண்டு நாட்கள் அல்ல.. 100 நாள் பயணத்துக்குப் பிறகு அம்மாவும் மகனும் அந்த அற்புத இடத்துக்கு வந்தடைந்தனர்.

ஜிஸ்ஹுவாங்பனா பகுதியின் இயற்கை எழிலை பார்த்ததும், அம்மா கோவ் மின்ஜுனின் கண்ணில் ஆனந்தக் கண்ணீர். மகன் தன் மீது வைத்திருக்கும் பாசத்தை நினைத்து நெகிழ்ந்தார்.

கடந்த ஜுலை 11ஆம் திகதி பயணத்தை தொடங்கிய இவர்களுக்கு, செல்லும் வழியெங்கும் மக்கள் பெரும் வரவேற்பு அளித்தனர். நெகிழ்ச்சியுடன் பல உதவிகளைச் செய்தனர். பான் மெங்குக்கு பாராட்டுகள் குவிந்த வண்ணம் உள்ளன.

# ஆணாக மாறிக் கொண்டிருக்கும் பெண்




சீனாவில் 16 வயதுடைய இளம் பெண் ஒருவர் ஆணை போன்று மாறிவருகின்றார். ஆண்களைப் போன்று இவரது முகத்திலும், கால்களிலும் ரோமங்கள் வளர்ந்து வருகின்றன. அவ்வாறே முகத் தோற்றங்களும் ஆணைப் போலவே மாறி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# இவ்வளவு ஆடம்பரமான விமானமா...!


புருணை நாட்டு மன்னருக்குச் சொந்தமான விமானமான போயிங் ரக விமானம் உலகின் அதிநவீன சொகுசு விமானமாகும்.


நூறு மில்லியன் டொலர் செலவில் வாங்கப்பட்ட இந்த விமானத்தில், இன்டீரியர் டெக்ரேஷன் செய்வதற்காக மட்டும் 120 மில்லியன் டொலர் செலவழிக்கப்பட்டுள்ளது.

அப்படி என்னதான் இந்த விமானத்தில் உள்ளது எனக் கேட்கிறீர்களா? கழிப்பறை முதற்கொண்டு அனைத்தும் தங்கத்தால் இழைக்கப்பட்டுள்ளது.

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அசத்தப்போவது யார்?

தெலுங்கில் 'போக்கிரி' திரைப்படத்தை இயக்கிய பூரி ஜெகநாத்தின் இயக்கத்தில் புதிய திரைப்படமொன்றில் ஒப்பந்தமாகியுள்ளார் அமலா போல். இதில் இவருக்கு பிரதான கதாபாத்திரமாம். இதேவேளை, நடிகை ரிச்சாவையும் இத்திரைப்படத்தின் மற்றொரு கதாநாயகியாக தெரிவு செய்துள்ளாராம் இயக்குநர். இந்நிலையில் இத்திரை படத்தின் நடிப்பில் யார் அசத்தப் போவது என்ற மோதலில் அமலாவும் ரிச்சாவும் கலமிறங்கியுள் ளார்களாம்.





## பிரபாகரன் இயக்கத்… உதயநிதி நடிக்க தீர்ம…

ஒரு கல் ஒரு கண்ணாடி படத்… பின்னர், உதயநிதியின் அடுத்த… படம் என்னவென்று எதிர்பார்ப்பு… இருந்தது. இந்நிலையில் சுந்தர… பாண்டியன் படத்தை இயக்கிய… பிரபாகரனை ரெட் ஜெயண்ட் மு… குழுவினர் அணுகினர். இதன்படி உதயநிதி நடிக்க கதையை எழுத சொல்லியிருக்கிறார்கள். இதற்கு பிரபாகரன் சம்மதம் தெரிவித்து விட்டதால் தற்போது கதை பற்றிய விவாதமே…



## எனக்கு தமிழில் நடிக்கும் எண்ணமே இல்லை

தன்… இ… ந… த… பாலி… அதிகமான ரசிக… தன்பக்கம் ஈர்த்து வைத்தி… நடிகை வித்யா பாலன். இ… டர்ட்டி பிக்சர்ஸ், கஹானி… படங்கள் சூப்பர் ஹிட்… இந்நிலையில் கொலிவுட்… பாலன் நடிக்க இருப்பதாக… தகவலுக்கு அவரே ம… தெரிவித்திருக்கிறா…

## அதிரடி வேட்டையில் விஜயலட்சுமி!

சின்னச்சின்ன படங்களில் நடித்த நடிகை என்பதால், இவரை வைத்துப் படம் பண்ணினால் படத்தின் வியாபாரம் பாதிக்கும் என்று இயக்குநர்கள் பாராமுகமாகவே இருக்கின்றனர். என்றாலும் விடுவதாக இல்லை விஜயலட்சுமி. என்னை ஏற்கனவே சினிமாவில் நடித்த நடிகை போன்று நினைக்காமல், ஒரு புதுமுக நடிகை போல் நினைத்து வாய்ப்புத் தாருங்கள் என்றும் இறங்கிச்சென்று வாய்ப்புக்கேட்டு வருகிறார். அதோடு, அவர்கள் எந்த நேரத்தில் அழைத்தாலும் ஓட்டமாக ஓடிச்சென்று ஆஜராகி வருகிறார். விஜயலட்சுமியின் இந்த படவேட்டைக்கு பலன் கிடைக்குமா? பொறுத்திருந்து பார்ப்போம்.

## சினிமா விமர்சனம்

விஜய் சேதுபதி பீட்சா கடையில் வேலை செய்பவர். அவர் காதலி ரம்யா நம்பீசனோடு சேர்ந்து வாழ்கிறார். இதில் ரம்யா கர்ப்பமாகிவிட கல்யாணம் செய்து கொள்கிறார். மென்மையான காதலுடன் நெருக்கமாக போகும் வாழ்க்கையில் திடீர் திருப்பம் இது விஜய் சேதுபதி பீட்சா டெலிவரி செய்ய போகும் பூஜாவின் வீட்டில் இருந்து ஆரம்பிக்கிறது.

படம் முடியும் வரை படத்தின் திரைக்கதையிலும், உருவாக்கத்திலும் ஒரு கணம் கூட சுவாரஸ்யம் குறையாமல் ரசிகர்களை படத்துடன் ஒன்ற வைத்து விடுகிறார்கள். மைக்கேலாக வரும் விஜய் சேதுபதி ஆரவாரம் இல்லாமல் வளர்ந்து வரும் பெரிய நடிகர் என்பதை இந்த படத்திலும் நிரூபித்திருக்கிறார்.

அந்த வீட்டில் இவர் மாட்டிக் கொண்ட அரைமணி நேரமும் தனி ஆளாக இருந்தே நடிப்பில் பட்டையை கிளப்புகிறார். அனுவாக வரும் ரம்யா நம்பீசன் முதலில் வரும் காதல் காட்சிகளில் இயல்பாக தோன்றி, காட்சியில் ஒன்ற செய்கிறார். படத்தில் வரும் சின்னச்சின்ன கதாபாத்தி ரங்கள் எல்லாமே சுவாரஸ்யமாக இருக்கின்றன. குறிப்பாக வீர சந்தானம், நரேன், ஜெயக்குமார் அனைவருமே கதாபாத்திர த்தை பிரதி பலிக் கிறார்கள். படத்தின் மிகப் பெரிய பலம் அதன் தொழில் நுட்ப கலைஞர்கள் தான். ஒளிப்பதிவா ளர் கோபி அமர்நாத். படத்தில் இவரும் ஒரு ஹீரோ என்றே சொல்ல வேண்டும். ஒரு வீட்டுக்குள் டோர்ச் லைட், மெழுகுவர்த்தியை வைத்தே ஒளிப்பதிவில் வித்தை காட்டியுள்ளார். சந்தோஷ் நாராயணன் இசை. எங்கு தேவையோ அங்கு மட்டும் அதை தந்து படத்திற்குள் ரசிகர்களைக் கொண்டு போகிறார். முதலில் அறிமுக மான 'அட்டை கத்தியை' அவரே மிஞ்சி இருக்கிறார். படம் கச்சிதமாக வந்ததற்கு இன்னொரு காரணம் எடிட்டர் லியோ ஜான்பால்.




படத்தின் முடிவில் வரும் மாண்டேஜ் ரசனையான ஐடியா. ஒளிப்பதிவு, இசை, எடிட்டிங், இயக்கம் அனைத்தும் ஒன்றோடு ஒன்று கலந்த ரசனையான அனுபவத்தை தருகிறது. எழுதி, இயக்கியிருப்பவர் கார்த்திக் சுப்பராஜ். ஏற்கனவே குறும்படங்களில் பெயரெடுத்தவர். இப்போது முதல் படத்திலேயே எந்த தடுமாற்றமும் இல்லாமல் தெளிவான திரைக்கதைக்கு என்ன தேவையோ அதை மட்டும் எடுத்து சுவாரஸ்யமாக சொல்லியிருக்கிறார்.

முன் பகுதி சிறிது நேரம் மெதுவாக நகர்ந்தாலும் பின் பகுதி யின் வேகம் அதை மறக்கச் செய்கிறது. இவ்வளவு நல்ல திரைக் கதையோடு ஒரு சினிமா வந்து எவ்வளவு நாளாகிறது?... என்று கேட்க வைக்கும் பீட்சாவுக்கு

## திறமைக்கு… தீனி போடுங்…

ராமன் தேடிய சீதை" படத்தில்… னவர் ரம்யா நம்பீசன். "பீட்சா" படத்… போது நடித்திருக்கிறார். இதைத் தொ… தமிழில் அதிகப்படியான படங்களி… நடிக்க ஆசைப்படும் அவர், ரொமான்… காமெடி, த்ரில்லர் என்று என் திறமை… தீனி போடக்கூடிய எந்த மாதிரி வேட… தந்தாலும் சிறப்பாக நடிப்பேன் என்று… கோலிவுட் டைரக்டர்களிடம் சான்ஸ்… கேட்டு வருகிறார்.

## முத்திப் போன ஆர்யா, நயன் நட்பு



பிரபுதேவாவிடமிருந்து முற்றிலுமாக விலகிவிட்ட நயன்தாராவுக்கு பலவிஷயங்களிலும் உதவிகரமாக செயல்பட்டு வருகிறார் ஆர்யா. அவருக்கு வீடு பார்த்து கொடுப்பது முதல், படம் வாங்கி கொடுப்பது, சம்பளம் பேசுவது என்று சகலமு மாகி வருகிறார். இதெல்லாம் வெளிப் படையாகவே செய்து வருகிறார். அவர்களுக்கிடையே யான நட்பு இப்போது இந்த அளவுக்கு முத்திப்போய் விட்டதாம்.

## சௌத்ரியும், விஜய்யும் சேர்ந்தால் சக்சஸ்தான்



விஜய்யின் ஆரம்பகால வெற்றிப் படங்களில் பாதியை தயாரித்தவர் சூப்பர் குட் பிலிம்ஸ் சௌத்ரி. சௌத்ரியும், விஜய்யும் சேர்ந்தால் சக்சஸ் என்று சொல்லும் அளவுக்கு வெற்றிக் கூட்டணி இது. பூவே உனக்காக, துள்ளாத மனமும் துள்ளும், 'லவ் டுடே', 'திருப் பாச்சி' என்று அனைத்தும் ஹிட் படங்கள். இந்த கூட்டணி அடுத்ததாக இணைய உள் ளது. இந்த படத்தை ஜெயம் ராஜாவிடம் உதவி இயக்குந ராக இருந்த நேசன் இயக்கு வதாக கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க்கத்தில்
தீர்மானம்

படத்திற்கு
அடுத்த
ளார்ப்பு
சுந்தர
க்கிய
ட் மூவிஸ்
நடிக்க ஒரு
தற்கு
ல்

# லத்தின் அமெரிக்க டான்சராக சரத்குமாரின் மகள் வரலட்சுமி



விரைவில் வெளியாகும் 'போடா போடி' படத்தில் சிம்புவுடனும் லத்தின் அமெரிக்கன் டான்சராக வரலட்சுமி சரத்குமார் நடித்துள்ளார். தற்போது சுந்தர் சி இயக்கத்தில் 'மதகஜ ராஜா' படத்தில் விஷாலுடனும் நடித்து வருகிறார் வரலட்சுமி. தன்னுடைய முதல் படமான 'போடா போடி' படத்தில் லத்தின் டான்சராக நடித்துள்ளார் வரலட்சுமி,.

தன்னுடைய
இயல்பான
நடிப்பால்
தற்போது
பாலிவுட்டில்
ன ரசிகர்களை
வைத்திருப்பவர்
ன். இவர் நடித்த
ஹானி போன்ற
ஹிட்டாகின.
லிவுட்டில் வித்யா
பதாக வெளியான
வரே மறுப்பு
க்கிறார்.

க்கு
ங்கள்!

ந்தில் அறிமுகமா
படத்தில் தற்
ந் தொடர்ந்து
ங்களில்
ராமான்ஸ்,
திறமைக்கு
ரி வேடம்
என்று,
ான்ஸ்



# உலக சினிமா




'பேராநோர்மல் எக்டிவிட்டி 4' ஹொலிவுட் படம் குறித்து அவசியம் தெரிந்து கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம்.

காரணம், முதல் பாகமான 'பேராநோர்மல் எக்டவிட்டி' மிக்கா, கெயிட்டி என்ற காதல் ஜோடி ஒரு வீட்டுக்கு குடி வருகிறார்கள். கெயிட்டிக்கு ஒரு பிரச்சனை. தனது 8 வயது முதலே யாரோ தன்னை எங்கு சென்றாலும் பின் தொடர்கிறார்கள். அமானுஷ்ய சம்பவங்கள் இரவில் நடக்கின்றன என நம்புகிறாள். அதைத் தன் காதலனான மிக்காவிடமும் தெரிவிக்கிறாள்.

'அப்படியா? சரி அது யார் என்று கண்டுபிடித்து விடுவோம்...' என்று சொல்லும் மிக்கா, இரவு பகல் பாராமல் தங்களை, குறிப்பாக கெயிட்டியை வீடியோவில் படம் பிடிக்க ஆரம்பிக்கிறான். ஆட்டோமேடிக் கமரா, கெயிட்டி உறங்கும்போதும் தன் பணியைச் செய்கிறது.

மறுநாள் முந்தைய தினம் கேமராவில் பதிவானதை இருவரும் போட்டுப் பார்ப்பார்கள். தினமும் இதுவே தொடர்கிறது. மெல்ல மெல்ல கேமராவில் தொடர்ச்சியாக ஒரு சத்தம், கெயிட்டியைச் சுற்றி கேட்பதை கண்டுபிடிக்கிறார்கள். அந்தச் சத்தம் வெவ்வேறு விதமாக ஒலிக்க ஆரம்பிக்கிறது.

பயந்து போய் சைக்கியாட்ரிக் ஒருவரை அடைத்து வருகிறார்கள். வீட்டில் வேறு எதுவோ இருப்பதை அறியம் அவர் பயந்து போய் ஓடி விடுகிறார். வேறு யாரையாவது அழைக்கலாம் என்றால், ஒருவரும் சிக்கவில்லை. கெயிட்டியின் பிரச்சினையும் அடுத்த கட்டத்துக்கு நகர்கிறது. வீட்டில் தொடர்ந்து அசம்பாவிதங்கள் நடக்கின்றன. மிக்காவால் எதையும் தடுக்க முடியவில்லை. இப்படி செய்பவர் யார், எவர், அவரது உள்நோக்கம் என்ன... என்பதையெல்லாம் சில்லிடும் பயத்துடன் 'பேராநார்மல் அக்டிவிட்டி' விவரித்தது.

ஒரேயொரு வீடியோ கமரா இரண்டே கதாப்பாத்திரங்கள் இவர்கள் தவிர மேலும் இரண்டு துணை கதாபாத்திரங்கள். அவர்களும் தலா இரண்டு காட்சிகளில் மட்டுமே தலை காட்டிவிட்டுப் போவார்கள். மற்றப்படி வேறு யாருமே படத்தில் கிடையாது.

இப்படி வெறும் 15 ஆயிரம் டொலரில் உருவான இந்த 'பேராநோர்மல் எக்டிவிட்டி', 60 மில்லியன் டொலரை 2007ம் ஆண்டு வசூலித்து சாதனை படைத்தது. தொடக்கத்தில் எடுக்கப்பட்ட க்ளைமாக்ஸ் வேறு, ஆனால், படத்தைப் பார்த்த இயக்குநர் ஸ்டீபன் ஸ்பீல்பெர்க், சில கரெக்ஷன்களை சொல்லி, இறுதிக் காட்சியை வேறு மாதிரி எடுக்கச் சொன்னார். அது சரியென்று இயக்குநர் Oren Peli க்கும் தோன்றியது. ஆனால், ஷூட்செய்ய பணமில்லை. உடனே தன்னிடம் இருந்த நான்காயிரம் டாலரை ஸ்பீல்பெர்க் கொடுத்தார்.

இப்படி எடுக்கப்பட்ட 'பேராநார்மல் எக்டிவிட்டி' அமெரிக்காவில் மொத்தம் 9 தியேட்டர்களில்தான் வெளியானது. அதுவும் கல்லூரி மாணவர்கள் மட்டுமே பார்ப்பதற்காகத்தான் ரிலீசானது. ஆனால், படம் பார்த்தவர்களின் பாராட்டு, படத்தின் வெற்றியை இமயத்துக்குக் கொண்டு சென்றது.

த்ரில்லர் - ஹொரர் படங்களில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்திய இந்தப் படத்தின் அடுத்தடுத்த பாகங்கள், சொல்லிக் கொள்ளும்படி அமையவில்லை. எந்த பேய்ப்படஃபார்முலாவை உடைத் தெறிந்து 'பேராநார்மல் ஆக்டிவிட்டி' உருவாக்கப்பட்டதோ' அதே ஃபார்முலா வளையத்துக்குள் இரண்டாவது மூன்றாவது பாகங்கள் சிக்கிக் கொண்டது வரலாற்று முரண்.

இந்த நான்காம் பாகம் அப்படியிருக்காது என சத்தியம் செய்திருக்கிறார்கள் இயக்குநர்களான ஹென்றி ஜோஸ்ட், ஏரியல் ஷூல்மென் இரட்டையர்கள். அது உண்மையா என்பது படம் பார்த்தால்தான் தெரியும்.

ஆனால், பேய்ப்படங்களின் வரலாற்றில் 'பேராநோர்மல் எக்டிவிட்டி'க்கு தனி அத்தியாயம் உண்டு என்பதில் மட்டும் மாற்றுக் கருத்தில்லை.

# வினய்க்கு ஜோடி அஞ்சலி



'கலகலப்பு' வில் கவர்ச்சி நாயகியாகவும் தன்னை நிரூபித்த அஞ்சலியின் மார்க்கெட், தற்போது உச்சத்தில் உள்ளது. தமிழ், தெலுங்கு என்று, வாய்ப்பு பெருகிக் கொண்டே இருக்கிறது. இப்போது தெலுங்கு படத்தில் மகேஷ்பாபுவுக்கு அண்ணியாக நடிக்கும் அஞ்சலி, 'வத்திக்குச்சி' படத்தில், டைரக்டர் ஏ.ஆர்.முருகதாசின் தம்பிக்கு, ஜோடியாகி யுள்ளார். இதைத் தொடர்ந்து, 'ஒன்பதுல குரு' படத்தில், வினய்க்கு ஜோடியாகி யுள்ளார்.

# ஷங்கருக்கு படமெடுக்க அனுமதி மறுத்த சீன அரசு



ஷங்கர் இயக்கிக் கொண்டிருக்கும் படம் 'ஐ'. சில காட்சிகளை சென்னையில் எடுத்துவிட்டு அவுட்டோர் ஷூட்டிங்கிற்கு சமீபத்தில் கிளம்பியது ஐ படக்குழு. ஐ படத்தின் பெரும் பகுதியை சீனாவில் எடுக்க முடிவெடுத்து, 'ஐ' படக்குழு சார்பில் சீனா அரசிடம் அனுமதி கேட்டிருக்கி றார்கள். ஆனால் ஷங்கர் கேட்டதில் சீனாவின் சில முக்கிய இடங்களில் படமெடுக்க அனுமதிக்க முடியாது என கூறிவிட்டதாம் சீன அரசு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாவ மன்னிப்பு!

ஒரு கிராமத்துச் சந்தையில் சாமியார் ஒருவர் தரையில் துண்டை விரித்து, அதில் அச்சடிக்கப்பட்ட இரண்டு விதமான சீட்டுக்களை விற்றுக் கொண்டிருந்தார்.

அடிக்கடி, ஏ பாவிகளே! இதோ பாவ மன்னிப்புச் சீட்டு. இதை வாங்கிச் சென்றால் உங்களுடைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு விடும். உடனே வாங்கிக் கொள்ளுங்கள்!" என்று கூவிக் கொண்டிருந்தார்.

ஒருவன் சாமியாரிடம் வந்து, பாவ மன்னிப்புச சீட்டு என்ன விலை?" என்று கேட்டான்.

"ஒரு சீட்டு ஒரு ரூபாய்!" என்றார் சாமியார். உடனே ஒரு ரூபாயைக் கொடுத்து ஒரு சீட்டைப் பெற்றுக் கொண்டான்.

பிறகு வேறொரு சீட்டைக் காட்டி, இது என்ன? அதன் விலை என்ன?" என்று கேட்டான் வந்த ஆசாமி,

இந்தச் சீட்டு இனி செய்யப்போகும் பாவங்களுக்கு மன்னிப்புச் சீட்டு. அதன் விலை இரண்டு ரூபாய்," என்றார் சாமியார்.

இரண்டு ரூபாய் கொடுத்து அதையும் வாங்கி மடியில் வைத்துக் கொண்டான். உடனே சாமியாரிடம் இருந்த ரூபாய்களை எல்லாம் தட்டிப் பறித்துக் கொண்டான் அவன்.

"அடப்பாவி சண்டாளா! இது என்ன அடாவடித்தனமான வேலை!" என்று கத்த ஆரம்பித்து விட்டார் சாமியார்.

"சாமியாரே! ஏன் கத்துகிறாய். இதோ பாவ மன்னிப்பு சீட்டு!" என்று கூறி இரண்டாவது சீட்டை அவர் முன்னே காட்டினான். சாமியாரான சீட்டு வியாபாரி தன்னையே நொந்து கொண்டதோடு, தன்னுடைய தவறை முதன் முறையாக











# புருஷோத்தமனும் அலெக்சாண்டரும்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பிளான் பண்ணிச் செய்தல்

முகாமைத்துவத்தில், திட்டமிடல் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. கம்பளையில் ஒரு பெரிய பாடசாலை 3500 வரையான பிள்ளைகள். பரிசளிப்பு விழா மிகப் பிரமாண்டமாக நடக்கும்.

ஒவ்வொரு விடயங்களும் மிகக் கச்சிதமாக ஒத்திகை பார்க்கப்படும். விருந்தினர்களாக நாட்டின் இரு பெரும் அமைச்சர்களாவது அழைக்கப்படுவர்.

தற்போதையது போன்று மாகாணம், மாகாண அமைச்சர்கள் இல்லாத காலமது. அமைச்சர்களின் நேரத்தைக் கருத்திற்கொண்டும் எதிர்காலத் தலைவர்கள் நேர முகாமைத்துவத்தில் கரிசனை காட்டவேண்டும் என்பதைக் கருத்திற்கொண்டும், ஒவ்வொரு சிறிய விடயங்களிலும் ஒவ்வொரு செக்கன்களும் கருத்திற்கொள்ளப்படும்.

Final day க்கு முன்பதாக வரவேற்பிலிருந்து பரிசுகள் / சான்றிதழ் வழங்குதல், உரைகள், கலைநிகழ்வு அனைத்தும் ஒத்திகை பார்க்கப்படும். யார் யார் என்னென்ன பணி, எப்பக்கத்தால் மேடை ஏறவேண்டும் எந்தப் பக்கத்தால் வெளியேறவேண்டும். சான்றிதழ்கள் பெற்றுக்கொள்பவர்கள் எங்கு இருப்பது, எவ்வாறு மேடைக்கு வருவது, அவர்களை வழி நடத்துவது அனைத்தும் அங்கம் அங்கமாக ஒத்திகை பார்க்கப்படும். ஒத்திகையின்போது பெயர்கள் வாசிக்கப்பட்டன. சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு ஒத்திகை அன்று அந்த அளவில் ஒத்திகை போதும் என்பதற்காக வழிநடத்தியவர் 'ENOUGH' என்றார். பெயர் வாசித்தவர் இனாப், இனாப்......... இங்கே தானே இதுவரை இனாப் நின்றார். இப்போ எங்கே போய்விட்டார் என்று 'இனாப்' பைக் கூவி அழைக்கத் தொடங்கினார்.

இவ்வளவு ஒத்திகை பார்த்து ஏற்பாடெல்லாம் நடந்து பரிசளிப்பு விழாவும் தொடங்கியது.

ஒத்திகையின்படியே அனைத்தும் கச்சிதமாக நடைபெற்றுக்கொண்டிருந்து அதிபருக்கு மனநிறைவென்ற மன நிறைவு. அந்த ஆண்டிற்கான சிறந்த மாணவன், பதக்கம் சூட்டப்படுவதற்காக அழைக்கப்பட்டான். அவனும் மிகக் கம்பீரமாகப் பலத்த கைதட்டல்களின் மத்தியில் மேடை ஏறினான்.


பரிசளிப்பவரும் தயாராக நின்றார். ஒத்திகையைப் போன்றே பிரதி அதிபர், தான் தயாராக வைத்திருந்த பதக்கத்தினை எடுப்பதற்காக "பொக்கற்' றுள் கையைவிட்டார்.

பதக்கம் அங்கு இருக்கவில்லை. டிரவுசர் பொக்கற்றுள் கைவிட்டார். கைலேஞ்சி அகப்பட்டது. வியர்த்த முகத்தைத் துடைத்துக்கொண்டார்.

அங்காலுப் பொக்கற் இங்காலுப் பொக்கற் - பின் பொக்கற்... முன் பொக்கற் அனைத்து இடங்களிலும் கை துழாவியும் பதக்கம் அகப்படவே இல்லை.

ஒத்திகையின்போது சரியாக இருந்தது. மேடை ஏறு முன்னரே 'பொக்கற்' றுள் பதக்கத்தை வைக்க ஞாபகம் ஊட்டியவர் அதிபர் தான். அதேபோன்று பரிசளிப்பு நாளன்றும் சேட் பொக்கற்றுள் ஒன்றுக்கு இரண்டு தடவை சரிபார்த்து 'செக்' பண்ணி அதிபர் பிரதி அதிபரைப் பணித்தும் இப்போ, பொறுத்த கட்டத்தில் பதக்கம் 'மிஸ்ஸிங்'

பரிசளிக்க வந்த விருந்தினர் தடுமாற - அதிபர் பதைபதைக்க பதக்கம் பெற வந்த மாணவன்



தலை வணங்கி பதக்கத்தை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்க, பதக்கம்....இன்னும் பிரதி அதிபரின் கைகளில் அகப்படவே இல்லை. அணிந்திருந்த கோட், டிரவுசர் அனைத்து 'பொக்கற்றும்' 'செக்' கியாயிற்று........ அப்போது தான் அதிபருக்கு ஒரு பொறிதட்டியது.

முதல் நாள் ஒத்திகையின் போது 'கோட்' போடாது வந்த பிரதி அதிபர் பரிசளிப்பு நாளில் கோட் அணிந்து இருந்தார். 'கோட்' போடுமுன் 'சேட்' பொக்கற்றுள் பதக்கம் தஞ்சம். இப்போ கோட் போட்டதால், பதக்கம் 'கோட்' பொக்கற்றில் இல்லை.

இதனை அதிபர் பிரதி அதிபரின் காதோடு காதாகக் கூறவே, அவரும், கோட்டின் உள்ளே சேட் பொக்கற்றுள் கைவிட, பதக்கம் சிரித்துக் கொண்டே, வெளியேவர 'பிளாஸ்' பல்புகள் மின்னின. கரகோஷம் வானைப் வானைப் பிழந்தது. திட்டமிட்ட நேரத்தில் ஒரு 100 விநாடிகள் வரை இதில் காணமற் போய்விட்டது.

அதுதான் சொல்வது - ஒத்திகை பார்க்கும்போதும் - உரிய ஆடை அணிகலனுடன் ஒத்திகை பார்க்கவேண்டும் என்று.

சின்னனிலை இந்தப் பரமசிவம் ஒரு நாடகம் நடித்தவர். 'ராஜா தேசிங்கு' நாடகம். நாடகத்துக்கு முதல் நாள் வெள்ளுடுப்பு - ஒத்திகை ........ அதாவது ராசா, ராணி உடுப்புகளெல்லாம் போட்டு ஒரு ஒத்திகை - 'மேக்கப்' இருக்காது. அரையில் வாள் இருக்கும். காவலர் கைகளில் மற்றும் கால்களில் கதியால் இருக்கும். வெள்ளுடுப்பு ஒத்திகையின்போது ஈட்டி இருக்கும். எல்லாம் அச்சா.......

'பைனல்' நாடகத்தின்போது ஆயிரக்கணக்கான - ச்சா நூற்றுக் கணக்கான ரசிகர் முன்னிலையில் வீராவேசத்தோடு வசனம் பேசிக்கொண்டிருக்க--

வாயுக்குள் ஒரு வண்டு பறந்து வந்து புகுந்தது போலிருந்தது. ச்சீ........ ச்சீ...... நிலமையை மறந்து துப்பி விட்டேன்........ பின்னர்தான் தெரிந்தது. ஒட்டிய மீசை கழன்று வாயுக்குள் சென்றது....அசடு வழிய அடுத்த 'வசனத்தைத்' தொடங்க - ஜனங்கள் தங்கள் பங்கிற்கு கைதட்டி விசில் அடித்து .......

மேடை ஏறுவதென்பது என்ன விளையாட்டே?

***

# பூசணிக்காய் வாங்கப் போன வணிகன்

ஒரு ஊரில் ஒரு செட்டியார் எண்ணைக் கடை நடத்திவந்தார். அவர் கடையில் எப்போதும் கூட்டம் கட்டுக் கடங்காமல் நிறைந்திருக்கும். அவர் கடையில் நிற்கும் கூட்டத்திற்கு நடுவில் எள்ளைப் போட்டால், எள் எண்ணையாகி விடும். அந்த அளவுக்கு கூட்டம் அலை மோதும். செட்டியாருக்கு வியாபார நேரத்தில் நிற்க நேரம் கிடைக்காது. அவர் தன் கடைக்கு மற்றவர்களால் எண்திருஷ்டி பட்டுவிடக் கூடாது என்பதற்காக ஒவ்வொரு அமாவாசைக்கும் பூசணிக்காய் வாங்கி கடைக்கு திருஷ்டி சுற்றி உடைப்பார். அவர் பூசணிக்காய் வாங்கக் கடைக்கு சென்றால், உடனே வாங்கமாட்டார். சுற்றி நிற்பவர்கள் பூசணிக்காய்க்கு என்ன விலை கொடுக்கிறார்கள் என்று பார்த்து கடைசியில் எல்லோரும் கொடுத்து வாங்கிய விலையை விட குறைவாக கேட்டு வாங்கி வருவார். இப்படி குறைவான விலைக்கு வாங்கி வந்த செட்டியாருக்கு ஒரு அமாவாசை சோதனையாக அமைந்தது.

கடையில் கூட்டம் அதிகமாக இருந்ததால் செட்டியார் பூசணிக்காய் வாங்கப்போன நேரத்தில் கடையில் ஒரு சில பூசணிக்காய்கள் மட்டும் இருந்த தால், கடைக்காரன், செட்டியார் வழக் கமாகக் கேட்கும் விலைக்குக் கொடுக்க மறுத்துவிட்டான். அவன் செட்டியாரைப் பார்த்து, "செட்டியாரே! நீங்கள் கேட்கும் விலைக்கு பூசணிக்காய் வாங்க வேண்டும் என்றால் நீங்கள் உடனே இங்கிருந்து சற்றுத் தூரத்தில் பூசணிக்காய்களை மொத்தமாக வாங்கி விற்கும் வியாபாரி



ஒருவர் இருக்கிறார் அவரிடம் சென்றால் நீங்கள் கேட்கும் விலைக்கு பூசணிக்காய் கிடைக்கும்" என்றான். உடனே செட்டியார் பூசணிக்காய் வாங்க மொத்த வியாபாரியை நோக்கி ஓடினான்.

மொத்த வியாபாரியிடம் பூசணிக்காய் வாங்கச் செட்டியார் சென்றுகொண்டிருக்கும் போது, அவர் மனதில் எப்படியும் மொத்த வியாபாரியிடம் மிகக் குறைந்த விலைக்கு பூசணிக்காய் வாங்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டார்.

பூசணிக்காய் மொத்த வியாபாரியிடம் வந்த செட்டியார் "பூசணிக்காய் என்ன விலை?" என்று கேட்டார். மொத்த வியா பாரியும் செட்டியாரைப் பார்த்து, "எத்தனை காய்கள் வேண்டும்?" என்று கேட்டார். செட்டியார் ஒரு ஒரு காய் மட்டும் போதும் என்று கூறவும், மொத்த வியாபாரி "செட்டியாரே! நான் மொத்த வியாபாரி, ஒரு காயெல்லாம் கொடுக்க முடியாது மொத்தமாக இருபது காய்கள் வாங்கி னால்தான் கொடுக்க முடியும்" என்று கூறினார். செட்டி யாரும் உடனே மொத்த வியா பாரியைப் பார்த்து "ஐயா! எனக்கு ஒரே ஒரு பூசணிக் காய் மட்டும் கொடுத் தால் போதும்" என்று கூறினார். உடனே மொத்த வியாபாரியும் செட் டியாரைப் பார்த்து, "உங்களுக்கு அவ சியம் ஒரே ஒரு காய் வேண்டுமானால் நீங்கள் இங்கிருந்து சற்று தூரத்தில் உள்ள பூசணித் தோட்டத்திற்குத்தான் செல்ல வேண்டும்" என்று கூறினார். மேலும் மொத்த வியாபாரி செட்டியாரிடம், "ஐயா! பூசணித் தோட்டத்தின் சொந்தக் காரர் மிகவும் நல்லவர், கேட்டவர்களுக்கு இல்லையெனாது வழங்கும் வள்ளல் தன்மை உடையவர், நீங்கள் உடனே சென்று அவரிடம் பூசணிக்காய் இனாமாக பெற்றுச் செல்லுங்கள்" என்று கூறினார்.

செட்டியாரும் உடனே, பூசணிக் காயை பூசணித் தோட்டச் சொந்தக் காரரிடம் இனாமாக வாங்க பூசணித் தோட்டத்துக்கு வேகமாக நடந்தார். பூசணித் தோட்டத்தை அடைந்த அவருக்கு அங்கே அதிர்ச்சி காத்திருந்தது. தோட்டத்தில் ஒரு காய் கூட இல்லாமல் மொத்தக் காய்களை யும் தோட்டச் சொந்தக்காரர் இரவோடு இரவாகப் பறித்து மொத்த வியாபாரிக ளுக்கு விற்றது, செட்டியார் தோட்டத் துக்குச் சென்ற போதுதான் தெரிந்தது. செட்டியாருக்கு ஒன்றும் புரியவில்லை. தோட்டச் சொந்தக்காரரும் செட்டியாரைப் பார்த்து, "ஐயா! என் தோட்டத்தில் மீண்டும் பூசணிக்காய்கள் காய்க்க மூன்று மாதங்கள் ஆகும், ஆகவே நீங்கள் உடனே உங்கள் ஊருக்குச் சென்று பூசணிக்காய்கள் விற்று தீர்வதற்குள் வாங்கிக் கொள் ளுங்கள்" என்று கூறினார். செட்டி யாரும் எப்படியாவது அமாவாசைக்கு பூசணிக்காய் உடைக்காமல் இருக்கக் கூடாது என்ற எண்ணத்தில், வேகமாக தன் ஊர் நோக்கி நடந்தார். ஊருக்குள் வந்து பூசணிக்காய் கடைக்காரனிடம் பூசணிக் காய் விலை கேட்டபோது, கடைக் காரன், செட்டியாரின் அவசர நிலை மையை புரிந்து கொண்டு, நான்கு காய்களின் விலையை ஒரு காய்க்குச் சொன்னான். செட்டியாரும் எதுவும் பதில் சொல்ல முடியாமல் சிறிது லாபத்துக்கு ஆசைப்பட்டு, வெகுதூரம் நடந்து கடைசியில் உள்ளூர் கடைக்காரன் சொன்ன விலையை கொடுத்து பூசணிக்காய் வாங்க வேண்டிய கட்டாயத்தை எண்ணி வருந்தி வேதனைப்பட்டார். இனாமாக பூசணிக்காய் கிடைக்கும் என்று ஆசைப்பட்டு பூசணித் தோட்டத்துக்குச் சென்று செட்டியாருக்கு, பூசணிக்காய்க்கு பதிலாக, வெகுதூரம் நடந்ததால் கால் வீக்கம் கண்டு கால் வலிதான் இனாமாகக் கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் உடலுறுதி மிக்கவள்!



பெண்களை காலம் காலமாக மலர் என்று மிக மெல்லியதாக வர்ணித்து வைத்திருந்து விட்டார்கள். அதனாலேயோ என்னவோ பெண்களுக்கு, ஆண்களுக்கு நிகராக பணிபுரியும் வாய்ப்பினை வழங்காமலேயே ஆணுலகம் பத்திரமாக பார்த்துக் கொண்டது. இதற்கு அடிப்படையில் உடம்பு ரீதியாக ஒரு காரணம் இருப்பதாகவும் உலகத்தினர் நம்பியும் வந்தனர். பெண்கள் உடல் ரீதியில் உறுதி இல்லாதவர்கள் என்பதுதான் அந்த நம்பிக்கை. பெண்களில் பலரும்கூட அப்படித்தான் பொய்யாக நம்பிக் கொண்டிருந்தனர்.

ஆனால் உண்மையில் பெண் ஆணைவிட உடலில் உறுதிகொண்டவள். ஒரு குழந்தையையே பெற்றெடுக்கும் உடல் வலிமையை பெற்றவள். அதற்கேற்ப அவளின் உடல் உறுப்புகள், இடுப்பு எலும்புகள் எல்லாம் அமையப் பெற்றிருக்கிறது என்பதே உண்மை.

இந்த உண்மையை உணர்ந்த பல பெண்கள் இன்று ஆணிற்கு நிகராகப் பல பணிகளை நிகழ்த்துகின்றனர். இன்னும் அவர்கள் உறுதிபெற உடற்பயிற்சி கைகொடுக்கும்.

சில பெண்கள் ஒடிந்து விழுவதுபோல கொடியிடையாக இருப்பார்கள். இவர்கள் தினமும் உடற்பயிற்சியினை மேற்கொண்டு, நல்ல பசியெடுத்து சத்தான உணவுகளை தொடர்ந்து சாப்பிட்டு வந்தால் உடம்பு உறுதியாவதுடன் ஒடிந்து விழும் நிலையிலிருந்து மீள்வார்கள். இவர்கள் எடையும் கூடி உடம்பும் உறுதி பெறும். உடற்பயிற்சிகள் இன்று நவீனமாக நடைமுறையில் உள்ளன. இதனைப் பயன்படுத்தி உறுதியான உடம்பினை மிக விரைவில் பெறலாம். இதில் உள்ள சிக்கல் என்னவெனில் இதனை நவீன உடற்பயிற்சி கூடங்களில் போய்தான் பெறவேண்டும். இல்லையெனில் வசதி வாய்ப்புகள் இருந்தால் வீட்டில் வாங்கிப் பயன்படுத்தலாம்.

உடற்பயிற்சிக்கு என்றே வடிவமைக்கப்பட்டிருக்கும் சைக்கிள் ஓட்டுவது, வேகமாக நடத்தல், மெதுவாக ஓடுதல் ரோலிங் மெஷின், ஸ்டெப்பர் போன்ற பயிற்சிகள்தான் ஏரோபிக்ஸ் பயிற்சிகளாகும். இதனைத் தொடர்ந்து பெண்கள் மேற்கொண்டால் உடம்பினை எளிதாக உறுதியாக்கிக்கொள்ளலாம்.

**வயிற்றில் சதை:**

பெண்களில் பலருக்கு முப்பது வயதைத் தொடுவதற்குள் ஏகப்பட்ட மடிப்புகள் விழுந்து, சதைகள் தொங்கி இளமையிலேயே முதுமையானவர்கள் போல வாழ்கிறார்கள். இதற்கு எல்லாம் காரணம் தொடர்ந்த உடற்பயிற்சி இன்மைதான். இத்தகைய பெண்கள் எல்லாம் ஏரோபிக்ஸ் பயிற்சி செய்து வந்தால் உறுதியான உடம்புடன் கட்டழகினையும் பெறலாம்.

மகளிர் சுடர்

இப்படி சதை தொங்கி, மடிப்பு விழ கொழுப்பு கூடுவதுதான் காரணம். இத்தகைய வேண்டாத கொழுப்புகளை எல்லாம் ஏரோபிக்ஸ் உடற்பயிற்சி கரைத்து விடும். இன்னும் சில பெண்கள் வயிற்றில் தொங்கும் வேண்டாத சதைகளையும், பருமனான உடம்பையும், பெருத்த வயிற்றையும் குறைக்க பெல்லிரோலர், வைபிரேட்டர் போன்ற கருவிகளில் முயற்சி செய்து, பணத்தை பியூட்டி பார்லர்களில் செலவு செய்த பின்னரும் வயிறு சதை, குண்டான உடம்பு, பலூன் வயிறு குறையவில்லையே என்று பிலாக்கணம் வைப்பார்கள்.

இத்தகைய பெண்மணிகள் எல்லாம் 'லாஇம்பாக்ட்' 'எராபிக்ஸ்' என்கிற உடற்பயிற்சியினை செய்து எளிதில் உடல்வளம் பெறலாம். பெண்கள் எடைப் பயிற்சி செய்யலாமா? செய்யக் கூடாதா? என்கின்ற கருத்து உண்டு. பெண்கள் எடை பயிற்சியினை தவிர்ப்பது நல்லது. பெண்களின் உள்ளுறுப்புகளில் சில ஆணின் உள்ளுறுப்புகளில் இருந்து மாறுபட்டிருக்கிறது. பால் சுரப்பிகள், கருப்பைகள், எல்லாம் ஆணிலிருந்து மாறுபட்டிருப்பதால் பெண்கள் எடைப் பயிற்சி செய்யாமல் இருப்பதே நல்லது.

பெண்கள் மேற்கொள்ளவேண்டிய, மேற்கொள்ளத்தகுந்த உடற்பயிற்சிகளை நான்கு வகைப்படுத்தலாம்.

1) ஏரோபிக்ஸ் வகை உடற்பயிற்சி.
2) அனோரோபிக் வகை உடற்பயிற்சி.
3) யோகாசன பயிற்சிகள்.
4) ஸ்கிப்பிங் பயிற்சி

இந்த நான்கு உடற்பயிற்சிகளையும் எந்த வயது பெண்கள் வேண்டுமானாலும் தொடர்ந்து செய்து உடம்பு உறுதியுடனும், ஆரோக்கியத்துடனும் இருக்கலாம். அனோரோபிக் வகை உடற்பயிற்சி என்பது விளையாட்டுத்தனமாகவே இருக்கும். இதனை உடற்பயிற்சி செய்கிறோம் என்கிற உணர்வில்லாமல் விளையாட்டாய் ஜாலியாய் மேற்கொள்ளலாம்.

## முட்டைக்கோஸ் பொரியல்



**தேவையானவை :**

முட்டைக்கோஸ் - 1/2 கிலோ
வெங்காயம் - பெரியது 1 / சிறியது 5,6
சிவப்பு மிளகாய் வத்தல் - 5,6
எண்ணெய் - 3 மேசைக்கரண்டி
பாசிப்பருப்பு - 2 மேசைக்கரண்டி
கடுகு - கொஞ்சம்
கறிவேப்பிலை - கொஞ்சம்
உப்பு - தேவையான அளவு
தேங்காய்த்துருவல் - கொஞ்சம்

**செய்முறை :**

1. முட்டைக்கோஸை பொடியாக நறுக்கிக் கொள்ளவும். பின் நறுக்கிய கோஸை பாத்திரத்தில் போட்டு தண்ணீரில் கழுவியபின் தண்ணீரை வடித்துவிடவும்.
2. பின் அடுப்பில் அந்தப் பாத்திரத்தை மூடி வைத்து கோஸை வேகவைக்க வேண்டும். அதனுடன் பாசிப்பருப்பையும் சேர்த்துக் கொள்ளவும். தண்ணீர் சேர்க்கத் தேவையில்லை. கோஸில் ஒட்டியிருக்கும் தண்ணீரே போதும். அவ்வப்போது கிளறி விட்டுக் கொள்ளவும்.
3. கோஸ் வேகும் நேரத்தில் வெங்காயத்தை நறுக்கிக் கொள்ளவும்.
4. பின் வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு, கறிவேப்பிலை, வெங்காயம், மிளகாய் வத்தல் போட்டுத் தாளிக்கவும்.
5. கோஸ் வெந்தவுடன் தாளித்த கலவையும், உப்பும், தேங்காய்த்துருவலும் சேர்த்து நன்றாகக் கிளறவேண்டும். சிறிது நேரம் மூடி வைத்து பின் பரிமாறினால் சுவையாக இருக்கும்.

**குறிப்பு :**

காரப்பிரியர்கள் கொஞ்சம் மிளகாய்ப் பொடியையும் உப்புடன் சேர்த்துச் சமைக்கலாம்.

## கால் வெடிப்பு குணமாக வேண்டுமா?

தரையைச் சுத்தம் செய்யப் பயன்படும் சில சவர்க்கார எண்ணெயில் உள்ள இராசயனப் பொருட்கள் கால்களில் பட்டால் ஒரு சிலருக்கு வெடிப்பு உண்டாகும். கடினமான செருப்பு அணிவதாலும் பாதவெடிப்புகள் வரும். சிலர் பாதங்களை சுத்தமாக வைத்து கொள்வது இல்லை. இதனாலும் பாதவெடிப்புகள் வரும். அதைப் போக்க சில எளிய வழிகள் இதோ: ஒரு நாள் விட்டு ஒரு நாள் எலுமிச்சை பழத் தோலால் பாதங்களை நன்றாகத் தேய்த்துக் கழுவ வேண்டும். இது வெடிப்பில் உள்ள அழுக்குகளை நீக்கி, பாதத்தைச் சுத்தமாக்கும் மேலும் கிருமிகளை ஒழிக்கும்.

கடுகு எண்ணெயை தினமும் கால், கைகளில் தேய்த்து கழுவி வந்தால், சொரசொரப்புத் தன்மை நீங்கி, மிருதுவாகும். முதல் நாள் பாத்திரம் தேய்க்கும் நாரில் தயிரை தொட்டு உள்ளங்காலில் தேய்க்க வேண்டும். மறுநாள் தண்ணீரில் கல் உப்பைப் போட்டு நாரில் தொட்டுத் தேயுங்கள். தொடர்ந்து இப்படி மாறி மாறி செய்து வர, பாதம் மெத்தென்று ஆகும். வெந்தயக் கீரையை அரைத்து கை, கால்களில் அப்பி பின் தேய்த்துக்கழுவி வந்தாலும், முரட்டுத் தன்மைபோய் கை, கால்கள் பளிச்சென்று மாறும். மருதாணித்தூளுடன் தேயிலைத்தூள், தேங்காய் எண்ணெய் கலந்து கை, கால்களில் இட்டுக் கொள்வது மிகவும் நல்லது. இது வெடிப்பு மற்றும் சொரசொரப்பை நீக்கி உடலை குளிர்ச்சியாக்கி, பஞ்சு போன்று மென்மையாக்கும்.

உருளைக் கிழங்கை காயவைத்து பவுடராக்கி பின் அதை தண்ணீரில் குழைத்து பூசி வந்தாலும், வெடிப்பினால் ஏற்பட்ட கருமைநீங்கி, பாதம் மிளிரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எலிகடித்தால் ஊசி போட வேண்டுமா?



வே. கமலநாதன் சாவகச்சேரி.

கேள்வி :- கடந்த வாரம் விரலில் எனக்கு எலி கடித்துவிட்டது. இதற்கு விசர்நாய்க் கடி ஊசி போடவேண்டுமா? எலிக்காய்ச்சல் வருமோ எனக்குப் பயமாக உள்ளது. எலிகடித்தால் வெண்குஷ்டம் போல் வரும் என்றும் சொல்கிறார்கள். பயமாக உள்ளது.

பதில் :- எலிக்கடி, அதுவும் வீட்டிலுள்ள சுண்டெலிகள் கடிப்பதால் விசர் நாய்க்கடிநோய் ஏற்பட வாய்ப்பில்லை. ஆனால் பூனை அளவான பெருச்சாலி கடித்தால் இந்நோய் ஏற்படலாம். மற்றும்படி நாய், பூனை, குரங்கு, மரநாய் ஆகியவற்றின் மூலமே விசர்நாய்க்கடி நோய் பரவ வாய்ப்புள்ளது. நீங்கள் கூறிய மற்றைய பிரச்சினையான எலிக்காய்ச்சல் என்பது மருந்துவரீதியாக LEPTOSPIROSIS என அழைக்கப்படும். இது எலிக்கடி மூலம் ஏற்படுவது அல்ல. மாறாக எலியின் சிறுநீரில் வெளிப்படும் Leptospira கிருமிகளாலேயே ஏற்படும். மழைகாலத்தில் தேங்கும் வெள்ளநீர், வயல்களில் தேங்கும் நீர் என்பவற்றில் வெறுங்காலுடன் அல்லது செருப்பு அணிந்தாலும் கால் நீரில் அமிழும் அளவுக்கு நீரில் நடந்து செல்ல நேரிட்டால், காலில் வெட்டுக்காயம் முதலியனவும் இருந்துவிட்டால் இந்த Leptospira கிருமி மனித உடலை அடைந்து காய்ச்சல், செங்கண்மாரி சிறுநீரக செயலிழப்பு, ஈரல் செயலிழப்பு முதலிய நோய்க் குறிகளை, ஏற்படுத்தி சரியாகக் கண்டறிந்து சிகிச்சையளிக்காவிடில் இறப்பையும் ஏற்படுத்தும். ஆனால் இது எலியின் கடியினால் ஏற்படாது. இதற்குரிய சிகிச்சை வழங்கினால் பூரண குணம் பெறலாம். ஆனால் இங்கு உங்களுக்கு இது ஏற்பட வாய்ப்பில்லை. வயல்கள் மற்றும் அழுக்கு நீரில் நிற்கும் விவசாயிகள் உயரமான காலணிகள் அணிவது இந்த நோயிலிருந்து தப்ப உதவும். மேலும் வருமுன் காப்போனாக Doxycycline என்ற மருந்தை 200மி.கி. என்ற அளவில் 4 வாரங்களுக்கு உட்கொள்வதும் உதவும். உதாரணமாக நம்மவர் பலர் தமிழ்நாடு செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். தமிழ்நாட்டின் கழிவு நீர், மழைநீர் வடிகாலமைப்பு நம்நாடு போல் கிடையாது. சிறுமழைக்குமே அங்கு நகரவீதிகளில் முழங்கால் அளவுகூட நீர் நிரம்பிவிடும். நீர்மட்டும் நிரம்பினால் பரவாயில்லை. அந்நீரில் மனித சிறுநீர், மலம், எலி முதலிய விலங்குகளின் சிறுநீர் என்பனவும் தேங்கிவிடும். இதனால் மேற்கூறிய LEPTOSPROSIS வியாதி ஏற்படலாம். அதைத் தவிர்க்க முன்கூறியதுபோல வருமுன் காப்போனான மருந்தை உள்ளெடுக்கலாம்.

எலிக்கடியால் வெண்தோஷம் வருமென்பது விஞ்ஞான பூர்வமாக தவறான தகவலாகும். வெண்குஷ்டம் என்பது எலிக்கடியால் வருவதல்ல. அது ஒருவரிலிருந்து இன்னொருவருக்கு பரவுவதும் அல்ல. அது ஓரளவுக்கு ஓமோன் பிரச்சனைகளால் வருவது என்பது நிரூப்பிக்கப்பட்டுள்ளது. எனவே உங்களுக்கு எலிக்கடியால் வெண்குஷ்டம் வராது, என்பதை உறுதியாக கூறமுடியும். புண்காயம் மாறுவதற்குரிய சிகிச்சையை மட்டும் டொக்டரிடம் பெற்றுக்கொள்ளுங்கள்.

டொக்டர். எஸ்.சுரேந்திரஜித்

**வாசகர்களே!**

**உங்கள் உடல் நலம் தொடர்பான கேள்விகளுக்கு டொக்டர் எஸ்.சுரேந்திரஜித் பதிலளிக்கின்றார். உங்கள் கேள்விகளை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.**

**உடல் நலம்**
**சுடர் ஒளி வாரமலர்,**
**இல.361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# சளித்தொல்லைக்கு கருந்துளசி!

கீழைத்தேய மருத்துவத்தில் துளசிக்கு தனி மகத்துவம் உண்டு. சளி, காய்ச்சல், அலர்ஜி போன்றவைகளை நீக்கும் ஆயுள்வேத நிவாரணி துளசி. இதனால்தான் பண்டைய காலங்களில் இருந்து இன்றைக்கும் வீடுகளில் துளசிமாடம் வைத்து வணங்கி வருகின்றனர்.

மழைக்காலம் வந்தாலே சளித்தொந்தரவுகளும், தண்ணீர் அலர்ஜியும், அதிகம் ஏற்படும். இதற்கு மருத்துவமனைகளுக்குச் சென்று மாத்திரை வாங்கி சாப்பிட்டாலும் நிவாரணம் கிடைப்பதில்லை. நோய் எதிர்ப்புச்சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு சளித்தொல்லையானது பெரும் சிக்கலை ஏற்படுத்திவிடும். சளித்தொல்லையை ஆரம்பத்தில் கவனிக்காவிட்டால் காசநோய், நிமோனியா போன்றவற்றின் பாதிப்பு உண்டாகிவிடும்.

பக்டீரியா, புஞ்சை கிருமிகளினால் உண்டாகும் ஒவ்வாமை, மற்றும் தொற்றினால் ஏற்படும் சளித் தொல்லை போன்றன மருந்துகளுக்கு கட்டுப்பட்டாலும், வைரஸ் கிருமிகளால் ஏற்படும் சளித்தொல்லை மருந்துகளுக்கு கட்டுப்படாமல், வேதனையை உண்டாக்குகிறது.

நுரையீரலில் வறட்சி ஏற்படாமல் இருப்பதற்காகவே சளியானது இயற்கையாக உடலில் சுரக்கிறது. இது அளவிற்கு மீறி பெருகும்போது அதனை வெளியேற்றி, மீண்டும் ஒவ்வாமையினால் சளி உண்டாகாமல் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ளவேண்டும். அடிக்கடி தோன்றும் சளித் தொல்லையை நீக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி, நுரையீரலுக்கு வலுவைத் தரும் அற்புத மூலிகை கருந்துளசி. கருந்துளசிச் செடிகளின் இலைகள் கபத்தை நீக்கி, நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும். சளியை கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று கருந்துளசி இலைகளை பசும்பாலில் போட்டு காய்ச்சி குடிக்க, பாலின் ஒவ்வாமையால் ஏற்படும் கபம் நீங்கும்.

துளசி இலைகளை நீரில் போட்டு, கொதிக்கவைத்து ஆவிபிடிக்க, சைனஸ் தொல்லையால் ஏற்பட்ட சளி நீங்கும். அடிக்கடி சளி பிடிக்காமல் இருக்க ஐந்து அல்லது பத்து கருந்துளசி இலைகளை, ஒரு லீட்டர் நீரில் ஊறவைத்து அந்த நீரை அருந்தி, பின் இலைகளை மென்று சாப்பிட வேண்டும். தினமும் அதிகாலையில், இரண்டு முதல் நான்கு கருந்துளசி இலைகளை வெறும் வயிற்றில் சாப்பிட்டுவர ஒவ்வாமை மற்றும் கிருமித் தொற்றினால் ஏற்படும் சளித்தொல்லையிலிருந்து காத்துக் கொள்ளலாம் என்கின்றனர் ஆயுள்வேத மருத்துவர்கள். மேலும் சளித் தொந்தரவினால் பாதிக்கப்பட்டவர்கள் மஞ்சள், மிளகு, சிற்றரத்தை, பூண்டு, மல்லி, சிறிய வெங்காயம் ஆகியன நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் இயற்கை உணவுகளை அன்றாட உணவில் அதிகம் சேர்க்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளனர்.



## உடல் நலம்




# வலிப்பு

மக்களிடையே போதிய விழிப்புணர்வு இல்லாத நோய்களில் வலிப்பு நோயும் ஒன்றாகும். அதனைக் குறித்த விவரங்களை இங்கு காண்போம்:

வலிப்பு என்றால் என்ன?

வலிப்பு அல்லது காக்கா வலிப்பு என அறியப்படும் நோய் மூளையைத் தாக்கும் ஒரு நோயாகும். மூளையிலிருந்து மைய நரம்புமண்டலம் மூலம் உடலின் பல உறுப்புகளுக்கு நரம்புகள் வழியே வரும் கட்டளைத் தொகுப்புகளில் (நரம்புகளில்) சிறிது நேரம் தடங்கல் ஏற்படுவதையே வலிப்பு எனப் பொதுவழக்கில் அழைக்கிறார்கள்.

வலிப்பு நோய்க்கான மூல காரணம் என்ன?

மைய நரம்பு மண்டலத்திற்கு இழைக்கப்படும் சேதங்களால், பிறப்பின்போது தலைப்பகுதியில் ஏற்படும் காயங்கள், சிராய்ப்புகளால், சிலருக்குப் பிறப்பின்போதே இருக்கும் நரம்புமண்டலக் குறைப்பாட்டினால், விபத்தினால் தலையில் ஏற்படும் காயங்களினால், மூளையில் ஏற்படும் கட்டிகளால், அல்கஹோல், போதை மருந்து உட்கொள்வதால் ஏற்படும் நரம்புமண்டலம் சிதிலத்தால், மூளைக்காய்ச்சலால் வலிப்பு வர வாய்ப்புள்ளது.

எத்தனை வகை வலிப்புகள் உள்ளன?

மேலோட்டமாக இவற்றை இருவகைப்படுத்தலாம். முதலாவது, பகுதி (**Partial**) வலிப்பு இரண்டாவது பொது (General) வலிப்பு.

பகுதி வலிப்பில் மூளையின் ஒரு பகுதி மட்டும் பாதிக்கப்படும். அப்பகுதியினால் இயக்கப்படும் உறுப்புகள் வலிப்புக்கு உள்ளாகும். கை, கால், வாய் இவற்றைக் கட்டுப்படுத்தும் மூளையின் பகுதியில் வலிப்பு ஏற்பட்டால் அந்த உறுப்புகள் மட்டும் பாதிக்கப்படும்.

பொதுவலிப்பு மூளையின் பெரும்பான்மையான பகுதிகள் பாதிக்கப்படுவதால் உண்டாவதாகும். இதிலும் இருவகைகள் உள்ளன. பெடிட்மால் (Petit Mal), கிராண்ட்மால் (Grand Mal) என இவ்விரு வகைகளும் அழைக்கப்படுகின்றன.

பெடிட்மால் மிகச் சிறிய அளவில் தோன்றி மறையும் ஒரு வலிப்பாகும். சிலசமயம் இது கண்டு கொள்ளப்படாமலேயே வந்து போகலாம். இது ஒரு நொடியிலிருந்து பத்து முதல் இருபது நொடிகள் வரை நீடிக்கலாம். திடீரென விழிகள் செருகிக் கொள்ளுதல், காரணம் ஏதுமில்லாமல் ஓர் அறையினுள் அங்குமிங்கும் அலைதல் போன்றவை இந்நோயின் குறியீடுகளாம்.

கிராண்ட்மால் தாக்கியவர் முதலில் கண் முன் ஒரு பிரகாசமான காட்சி தோன்றுவது போல உணர்வார். கை கால்கள் உதறிக் கொள்ளும். பின், சுய நினைவின்றி மயங்கி விழுவார். மலம், சிறுநீர் போன்றவை அவரது கட்டுப்பாட்டில் இல்லாமல் பிரிய நேரலாம்.

வலிப்பு நோய் தாக்கியவரைப் பாரக்கும்போது என்ன செய்ய வேண்டும்?

1.வலிப்பு கண்டவர் அருகில் கூரான பொருட்கள் ஏதுமில்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேசையின் கூரான முனைகள், சுவர் விளிம்புகள் இவற்றினருகில் அவர் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும்.

2.அமைதியாக அவரை ஓரிடத்தில் அமர வைக்க முயலலாம் ஆனால் கட்டாயப்படுத்துதல் கூடாது.

3.தரையில் விழ நேரிட்டால் அவரை ஒருக்களித்து இருக்குமாறு செய்ய வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம், வலிப்பால் வெளிப்படும் உமிழ்நீர் எச்சில், மூச்சுக் குழலுக்குள் புகுந்து மூச்சுத் திணறலோ மரணமோ ஏற்படுவதைத் தடுக்கலாம்.

4.தலையில் அணைவாக மிருதுவான பொருட்களை வைக்க வேண்டும். இது, தலை வேகமாக தரையோடு முட்டிக் கொள்வதைத் தடுக்கும்.

5.வலிப்பு எவ்வளவு நேரம் நீடிக்கிறது எனச் சரியாகக் கணக்கிட வேண்டும். பொதுவாக 5 நிமிடங்களுக்குள் எல்லா வலிப்புகளும் அடங்கி விடும். அவ்வாறு அடங்காவிட்டாலோ, மீண்டும் மீண்டும் வலிப்பு வந்தாலோ மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல வேண்டும்.

வலிப்பு இருப்பதாக அறியப்பட்டவர்கள் என்னென்ன செய்யக்கூடாது?

வலிப்பு நோய் இருப்பதாக அறியப்பட்டவர் சாதாரணமாகப் பிறரைப் போலவே வாழ்க்கை நடத்தலாம். இருப்பினும் வாகனங்கள் ஓட்டுதல், நீச்சல் அடித்தல், மரம் ஏறுதல், உயரமான இடங்களுக்குத் துணையின்றிச் செல்லல், கனரக வாகனங்கள், கேட்டர்பில்லர், போக்லைன் போன்ற மலை உடைக்கும் மண் அள்ளும் கருவிகளை இயக்குதல், போன்ற பணிகளில் ஈடுபடக்கூடாது.

வலிப்பு வந்தவரின் கைகளில் இரும்பை அல்லது சாவிக் கொத்தைத் திணித்தால் வலிப்புப் போய் விடும் என்று ஒரு நம்பிக்கை மக்களிடையே நிலவுகிறது. இது தவறான நம்பிக்கையாகும். வலிப்பு வந்தவரின் கைகளில் இரும்பைக் கொடுப்பதால் ஒரு பலனும் இல்லை. அதனைக் கொண்டு அவர் தன்னைத் தாக்கிக் கொள்ள நேரிடலாம். அதனால் சாவிக்கொத்து, கம்பி, கத்தி போன்ற இரும்பாலான பொருட்களை வலிப்பு வந்தவரின் கையில் கொடுப்பது கூடாது.

வலிப்பும் மற்ற நோய்களைப் போன்ற ஒரு நோயே. சரியான சிகிச்சை அளிப்பதன் மூலம் அதனைக் குணப்படுத்தி விடவும் முடியும். எனவே இத்தகைய நோய் உள்ளவர்களைக் கண்டு அச்சம் கொள்ளவும் தேவையில்லை. மாறாக, முடிந்தவரையிலும் வலிப்பு நோயுள்ளவர்களைக் கண்காணிப்பதும் வலிப்பு ஏற்பட்டு விட்ட ஒருவருக்கு நம்மாலான தகுந்த உதவிகளைச் செய்வதும் மனிதாபிமானமுள்ள ஒவ்வொருவரது கடமையாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌன மனவெளிகள்

நா.யோகேந்திரநாதன்

45

"கந்தவனம் நில்!" என்ற விதானையாரின் அதிகாரக் குரல் ஏற்படுத்திய அதிர்ச்சியில் ஆலமரத்தின் இலைகள் கூட அசையாமல் நின்றுவிட்டன போலத் தோன்றியது. அங்கு நின்ற அனைவரின் அசைவுகளுமே சில்லிட்டுப் போய் விட்ட நிலையில் அங்கு நிலவிய மௌனத்தை விதானையாரின் குரல் கலைத்தது. "பதினாறு நாள் விளக்கமறியலுக்கு அனுப்பி பிறகு இரண்டு வருசமோ மூண்டு வருசமோ இந்தப் பொடியளை அவங்கள் அனுப்ப விடாமல் ஒரு நாளிலை நீங்களே மீட்டு வந்தனியள்? இப்ப மட்டும் துள்ளிக்கொண்டு போறியள்"

எவரும் எதுவுமே பேசவில்லை!

"நீங்கள் போய் காசி வீட்டை அடிச்சு நொருக்கிப்போட்டு வர. இந்தப் பொடியள் ஏவி விட்டுத்தான் செய்தது எண்டு பொலிசை நம்பி இவங்களைப் பிறகும் கொண்டு போனால் ஆர் பொறுப்பு?"

கனகரத்தினத்திற்கும் அப்போதுதான் காசி இப்படி ஒரு நிலைமையை உருவாக்கி விடுவான் என உணர முடிந்தது.

தங்கராசா மெல்ல முணுமுணுத்தான். "காசியை நெடுக உப்பிடியே விடுறதே?"

"அதுக்கு எத்தினை வழி இருக்குது, இண்டைக்கு துவக்கம் காசியோடை ஒரு தொடர்பும் வையாதேயுங்கோ! வேலி அடைக்கக்கூடி ஆள் கிடைக்காமல் விட்டால் அவனுக்குப் புத்தி வரும்?"

கந்தவனத்துக்கு அந்த முடிவு திருப்தியளிக்காத போதும் விதானையாரின் சொல்லை மீற முடியாத நிலையில் அனைவரும் சம்மதித்தனர்.

நீதிபதி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி கட்டளையிட்டு விட்ட காரணத்தால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டயஸ் தானே நேரடியாக இறங்கி விசாரணையை ஆரம்பித்தார். அடுத்த நாள் காலையில் பொலிஸ் ஜீப் விதானையார் வீட்டு வாசலில் வந்து நின்றது. அதிலிருந்து இறங்கி இன்ஸ்பெக்டர் டயஸைக் கைகுலுக்கி வரவேற்றார் விதானையார். அவரால் நன்றாகத் தமிழ் பேச முடியுமாதலால் மொழிபெயர்ப்பாளர்களின் அவசியம் இருக்கவில்லை.

இன்ஸ்பெக்டர் தான் வந்த விஷயத்தை விளக்கவே விதானை சென்றபோது இளையவன் சீவி முடித்துவிட்டு வந்து கொண்டிருந்தான்.

"டேய்.... இளையவன் அந்தச் சிவத்தப்புள்ளிச் சாவலை வெட்டிக் குடு. மற்றது தனிப்பனைக் கள்ளாய் ஒரு நாலு போத்தல் விட்டு வைச்சிட்டுப்போ" என்று விட்டு பதிலை எதிர்பாராமலே ஜீப்பில் ஏறிக்கொண்டார்.

இளையவன் முட்டியை வேலியில் தூக்கிவிட்டு விறாந்தைக்கு அருகில் வந்து, "ஆச்சி!" எனக் கூப்பிட்டான்.

"பிள்ளை! இளையவன் கூப்பிடுறான் போலக் கிடக்குது, என்னண்டு கேள்?" என்றே சீதேவிப்பாட்டியின் குரல் உள்ளே கேட்டது. சொர்ணம் சிறிது நேரத்தில் வெளியே வந்தாள்.

"பிள்ளை! ஐயா... சிவத்தப்புள்ளிச்சாவலை வெட்டிக் கொடுக்கட்டாம்?" என்றான் இளையவன்.

"ஓகோ.. இண்டைக்கு இன்ஸ்பெக்டருக்கு பாட்டிபோலை" எனச் சொர்ணம் மெல்லிய சிரிப்புடன் சொல்லிவிட்டு "ம். கோழியளை விடியவே திறந்து விட்டாச்சு. பாப்பம்" என்றாள். இளையவன் சுற்றிக்கொண்டு பின்னால் வர சொர்ணம் சமையலறைக்குள் போய் ஒரு பிடி அரிசியை அள்ளிக்கொண்டு அங்கு வந்தாள்.

கோழிகள் தென்னம்பிள்ளைகளுக்குள் நின்று மேய்ந்துகொண்டிருந்தன. சொர்ணம் "ப.. பா...... பா" என்ற படி அரிசியைக் கொஞ்சம் கொஞ்சமாக நிலத்தில் போட்டாள். கோழிகள் ஓடி வந்து தின்ன ஆரம்பித்தன.

சொர்ணம் குனிந்து அதைப்பிடிக்க முயன்ற போது அது தப்பியோடிப் பறந்து சற்றுத்தூரத்தில் போய் நின்று கொக்கரித்தது.

"என்ன செய்யிறது.... இனிக் கிட்ட வராது!" என்றாள் சொர்ணம் ஆற்றாமையுடன்.

சுற்றும் முற்றும் பார்த்த இளையவன் வேலிக்கரையில் கிடந்த ஒரு மண்வெட்டிப் பிடியைக் கையில் எடுத்தான். அவன் அதைக் கோழியை நோக்கி எறிந்த போது அது சுழன்று கொண்டு போய் நேராகவே சேவலின் தலையைத் தாக்கியது. சேவல் அந்த இடத்திலேயே சத்தமில்லாமல் சுருண்டு விழுந்தது.

"ஐயோ! பாவம்" என்றாள் சொர்ணம்.

"பாவம் பார்த்தால் இறைச்சி தின்னலாமே" என்று விட்டு ஒரு சிறு கயிற்றுத் துண்டு கொண்டு வரும்படி கூறினான் இளையவன்.

"அதாலைதான் நான் மச்சமாமிசம் சாப்பிடுறேல்லை!" என்று விட்டு சொர்ணம் போய் ஒரு கயிற்றை எடுத்து வந்துகொடுத்தார்.


"சட்டி ஒன்றைக்கொண்டு வாருங்கோ" என்று விட்டு கோழியை வேலியில் கட்டித்தூக்கி தோலை உரிக்க ஆரம்பித்தான். சட்டியைக் கொண்டுவந்து வைத்துவிட்டு சொர்ணம் கேட்டாள்.

"நீ இறைச்சி தின்னுவாய் என்ன?"

"ஒண்டும் கழிவில்லை" எனச் சிரித்தவாறே சொன்னான் இளையவன்.

"ஒண்டில் நான் மச்சம் சாப்பிடப் பழகவேணும் இல்லாட்டில் மச்சம் தின்னுறதை விடவேணும்"

இளையவன் அதிர்ந்து போனான். ஒருவித மிரட்சியுடன் அவளின் முகத்தைப் பார்த்து அனுங்கும் குரலில் "ஏன்?" எனக் கேட்டான்.



"அது அப்பிடித்தான்" என்றாள் அவள் உறுதியாக. இளையவனைப் பொறுத்தவரை அந்த வார்த்தைகள் ஒரு இனம்புரியாத மகிழ்ச்சியை ஏற்படுத்தியபோதும் உள்ளுக்குள் ஒரு பயத்தை உண்டாக்கவும் தவறவில்லை. எனினும் அவன் எதுவும் பதிலளிக்கவில்லை.

கோழியிலிருந்து ஒரு காலைப் பிரித்து எடுத்து சட்டியில் போடப்போனபோது அவள் அதைக் கையில் வாங்கிக்கொண்டாள். இறைச்சியின் மென்மையான தசையும் அவனின் முரட்டு விரல்களும் அவள் கையில் பட்டபோது அவளின் தேகம் ஒருமுறை சில்லிட்டது.

"இறைச்சி பூப்போல இருக்குது.. உங்கடை கையை மாதிரி" எனச் சொல்ல நினைத்தவன் வலிந்து அதை அடக்கிக் கொண்டான். ஆனால் அவளுடன் கழிக்கும் பொழுதுகளில் ஒரு இன்பம் இருப்பதை உணரத் தவறவில்லை. ஏதோ ஒரு உணர்ச்சியில் உந்தித் தள்ளப் பட்டவனாக "பிள்ளை! மனதாலை வாழுறது எண்டதைப்பற்றி என்ன நினைக்கிறியள்" எனக் கேட்டு விட்ட இளையவன் தன்னையறியாமலே தான் ஏதோ தவறு செய்து விட்டதாக எண்ணித் தடுமாறினான்.

அவன் வெட்டிக்கொடுத்த இறைச்சியை இரு கைகளாலும் வாங்கிய சொர்ணம் அவனின் முகத்தை நேராகவே பார்த்துச் சொன்னாள் "நான் எப்பவோ மனசாலை வாழ ஆரம்பிச்சிட்டன்".

இளையவனுக்கு உள்ளூர தேகமெல்லாம் நடுங்குவது போலிருந்தது. அவள் அவன் கொடுத்த கடைசித் துண்டை வாங்கிச் சட்டியில் போட்டபோது "அப்ப... நீ" எனக் கேட்டாள்.

அவன் ஒரு பெருமூச்சுடன் "இன்னும் துணிவு வரேல்லை" என்றுவிட்டு கழிவுகளை வெட்டிப் புதைக்க மண்வெட்டியை எடுக்கப்போனான்.

"துணிவு கட்டாயம் வரும்" என்று சொல்லி விட்டு கலகலவென அவன் சிரித்தவாறு சொன்னது. அவனின் காதில் விழுந்தது.

விதானையார் வீட்டிலிருந்து புறப்பட்ட பொலிஸ் ஜீப் முதலில் ஆலடிச் சந்தியில் போய் நின்றது. அவர்கள் இருவரும் இன்னொரு பொலிஸ்காரனும் கீழே இறங்கிக் கொண்டனர். விதானையார் இன்ஸ்பெக்டருக்கு கண்ணாடித்துண்டுகள் கிடந்த இடம். கடதாசிப் பை கிடந்த இடம் என்பவற்றைக் காட்டியதுடன் ஜெயசிங்கம் அவற்றைப் படமெடுத்த பிரதிகளையும் அவரிடம் காட்டினார். இன்ஸ்பெக்டர் அவற்றில் தனக்கும் ஒரு பிரதி தரும்படி கேட்டுக்கொண்டார்.

சனிக்கிழமை இரவுதான் கனகரத்தினமும் சிவஞானமும் பிணையில் விடுவிக்கப்பட்ட செய்தியை காசிப்பிள்ளை கேள்விப்பட்டார். தங்களைவிட வலுவான சக்தி தங்களுக்கு எதிராக வேலை செய்கிறது என்பதை ஊகித்துக்கொண்ட அவர் ஞாயிறு காலையிலேயே சார்ஜன்ட் சின்னத்தம்பியிடம் போய் விபரமறிய புறப்படுவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தார். அப்போது தான் இன்பெக்ஸ்டரும் விதானையாரும் அங்கு வந்திறங்கினார்.

காசிப்பிள்ளை அவர்களைக் கண்டதும் சற்றுக் குழப்பமடைந்த போதிலும் வெளியே காட்டிக்கொள்ளாமல், "வாருங்கோ. வாருங்கோ இருங்கோ" என ஆர்பாட்டமாக வரவேற்றார்.

விதானையார், "நீங்கள் முந்தநாள் போட்ட என்ரி பற்றி விசாரிக்க இன்ஸ்பெக்டர் வந்திருக்கிறார்?" என்றார்.

"ஓமோம். தாராளமாய் விசாரியுங்கோ... அவங்கள் என்னைக் கொல்லவல்லே வந்திட்டாங்கள்!"

இன்ஸ்பெக்டர் கதையை நிறுத்தும்படி சைகை செய்துவிட்டு "நாங்க கேக்கிற கேள்விக்கு மட்டும் ஆன்சர் போதும்" என்றார். பின்பு அவர் காசிப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்பட்ட நேரம், சம்பவம் நடந்த இடம், நேரம், சம்பவம் நடந்த விதம், அதில சம்பந்தப்பட்டவர்கள், காட்சிகள் முதலிய விபரங்களைக் கேட்கக்கூட வந்த பொலிஸ்காரன் எழுதிக்கொண்டான். பின்பு அவன் இன்ஸ்பெக்டரின் கட்டளைப்படி காரையும், உடைத்த, பகுதிகளையும் படமெடுத்துக்கொண்டான். விதானையார் ஆலடி வெட்டை இளைஞர்களைக் கொண்டு தனது காரை அடித்து நொருக்கப் போவதாகக் கூறியதையும் அவர் சொல்லத் தவறவில்லை விசாரணையை முடித்து கையெழுத்தை வாங்கிக்கொண்டு எழுந்த போது காசி, "ஐயா! ரீ என எழுந்தார்."

விதானையார் இடைமறித்து "ஏன் மற்றது இல்லையே?" எனக் கேட்டார்.

"அது.. இது..!" என இழுத்த காசி "இப்ப. .இப்ப... பத்து நிமிசத்திலை எடுப்பிக்கிறன்" என்றார்.

"இருந்ததை சார்ஜன்ட் சின்னத்தம்பிக்கு கொண்டுபோய்க் கொடுத்திட்டியள் போலை?" என நக்கலாகக் கூறி விதானையார் இன்ஸ்பெக்டரைப் பார்த்து வாங்கோ போவம்!" என்றார்.

காசிப்பிள்ளை பேயறைந்தது போல் நின்றார்.

அவர்கள் கேற்றைத் திறந்துகொண்டு வெளியே வந்தபோது எதிர் வீட்டு பாலகிஸ்ணன் வீதியில் வந்து கொண்டிருந்தான். அந்த ஊரில் உள்ள பல வீடுகளுக்கு வாடிக்கையாக அவனே பால் கொடுப்பவன். அவனை விதானையார் அருகில் அழைத்தார்.

"நீ போன வெள்ளிக்கிழமை என்ன நேரம் காசி வீட்டுக்குப் பால் குடுத்தனி?" என விதானையார் கேட்டார்.

"வழக்கமாய் ஐஞ்சரைக்கும் ஆறுக்குமிடையிலை குடுப்பன்"

"நீ அங்கை போகேக்கை கேற் பூட்டியிருந்ததோ?"

"ஓ.. நான் கூப்பிட்டுத்தான் திறந்தவை" என்றான் பாலகிருஸ்ணன்.

"அப்ப கார் நிண்டதே?"

"ஓ. வழக்கமாய் இரவிலை மூடுற துணியாலை மூடி போட் டிக்கோவிலை நிண்டது" இன்பெக்ஸ்டர் ஒரு மெல்லிய சிரிப்புடன் விதானையாரைப் பார்த்துவிட்டு பாலகிருஸ்ணன் சொன்னவற்றை எழுதி அவனிடம் கையெழுத்து வாங்கும்படி பொலிஸ்காரனுக்குக் கட்டளையிட்டார்

ஜீப் விதானையார் வீட்டை நோக்கிப் புறப்பட்டது.

ஜீப் போய்க் கொண்டிருக்கும்போது இன்ஸ்பெக்டர் சொன்னார். "நான் மஜிஸ்ரேட்டுக்கு குடுக்கிற றிப்போட்டிலை காசிக்கு முதல் 14 நாள் றிமாண்ட் சின்னத்தம்பிதான் பாவம்"

"ஏன் அவருக்கென்ன?"

"வேலை பறக்கும்!" என்றார் இன்ஸ்பெக்டர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதநிலப்பரப்பில் நாகவழிபாடு

கிளிநொச்சி மாவட்டம் எனக் கூறும் போது எவர் மனதிலும் தோற்றம் பெறுவது கட்டிடங்களால் நிறைந்து கிடக்கும் கிளிநொச்சி நகரமும் இரணைமடு நீரால் நீர் பாய்ச்சப்படும் குடியேற்றங்களும் தான்.

ஆனால் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சேர் பொன். இராமநாதன் அவர்களின் முயற்சியால் பிரித்தானிய ஆட்சியாளர்களால் இரணைமடுக்குளம் உருவாக்கப்படுவதற்கு பல நூறு ஆண்டுகள் முன்பே இங்கு ஒரு பெரும் மருதநிலப்பரப்பைக் கொண்ட விவசாயக் கிராமங்களும், குளங்களும் விரிந்து கிடந்துள்ளன. இங்கு நிலவிய பாரம்பரிய விவசாய முறைகள் மூலம் எங்கும் செழுமைபரந்து கிடந்தது.


இன்றைய கண்டிவீதியின் கிழக்காக கண்டாவளை, கல்வெட்டிகூடல், புளியம்பொக்கணை, பழைய வட்டக்கச்சி, முரசுமோட்டை, பழங்காமம், கல்மடு, அம்பகாமம், புளுடிச்சிநாதகுளம், ஒலுமடு, கரிப்பட்டமுறிப்பு உட்படப் பல விவசாயக் கிராமங்கள் அமைந்திருந்தன. இக்கிராமங்களுடாகவே மன்னர்கள் காலத்தில் பாவனையிலிருந்த கண்டிவீதி அமைந்திருக்கிறது. இவ்வாறே மேற்குப் பகுதியில் பூநகரியின் கிராமங்கள், முட்கொம்பன், நீவில், பொறிக்கடவை, உருத்திரபுரம், முறிப்பு, ஊற்றுப்புலம், அக்கராயன், வன்னேரி, பழைய முருகண்டி, பல்லவராயின் கட்டு போன்ற ஆதிக்கிராமங்கள் அமைந் திருந்தன. இக்கிராமங்களில் அகழ்ந் தெடுக்கப்பட்ட சுடுமண், சிற்பங்கள், பழைய நாணயங்கள், மண்பாண்ட ஓடுகள் என்பன இவற்றின் தொன்மையை நிரூபித்துள்ளன.

இங்கு கண்டெடுக்கப்பட்ட தொல் பொருட்கள் இங்கு நாகரிகமுள்ள ஒரு ஒழுங்குமுறையான கலாசாரத்தைக் கொண்ட ஒரு சமூக அமைப்பு நிலவி வந்ததை வெளிப்படுத்தியுள்ளன. இவ்வடிப்படையில் இங்கு விவசாய பூமிக்குரிய வழிபாட்டு முறைகள் நிலவி வந்ததை அறிய முடிகிறது. இவற்றில் நாகவழிபாடு, அம்மன் வழிபாடு, ஐயனார் வழிபாடு என்பன முக்கியமானவையாகும். இதில் அம்மன் வழிபாட்டுக்கும், நாகவழிபாட் டுக்குமிடையே நெருங்கிய தொடர்பு இருப்பதையும் அவதானிக்கமுடிகிறது.

நாகர்கோவில், புளியம்பொக்கணை, பரந்தன், பாம்புக்கமம், புதூர் என்பன பிரதான நாகவழிபாட்டுத் தலங்களாக விளங்குகின்றன. இவ்வாறே இயக்கச்சியை அண்மித்த நிலையாய் பொறிக்கடவை, வன்னிவிளாங்குளம், வற்றாப்பளை என்பன பிரதான அம்மன் வழிபாட்டு மையங்களாக விளங்குகின்றன.

புளியம்பொக்கணை, புதூர் என்பன தொடர்பாக ஒரு கர்ணபரம்பரைக் கதை பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நிலவி வருகிறது. இயக்கச்சி, முகாவிலில் வசித்து வந்த ஒரு பெண் மிகுந்த பக்தி சிரத்தையுடன் நாகதம்பிரானை வழிபட்டு வந்தாளாம். அவளுக்கு இரு நாகங்கள் பிள்ளைகளாகப் பிறந்தபோது அவள் அவற்றை அன்புடன் வளர்த்து வந்தாளாம். ஒரு நாள் அவள் முற்றம் கூட்டிக் கொண்டு இருக்கும்போது பாம்புகள் விளையாடிக்கொண்டே விளக்குமாற்றுக்கு அருகே வர அவள் "சீ சனியன்கள்" என எறிந்து விளக் குமாற்றால் அடித்து விட்டாளாம். அதனால் கோபம் கொண்ட பாம்புகள் வீட்டைவிட்டு வெளியேறி கொம்படி வெளி கடந்து புளியம் பொக்கணையை அடைந்து ஒரு ஆலமரத்தில் ஏறி விட்டனவாம். தாய் தனது தவறுக்கு வருந்தி எவ்வளவோ கெஞ்சியும் பாம்புகள் வீட்டுக்கு வர மறுத்துவிட் டனவாம். அதனால் அந்தத் தாய் ஒவ்வொரு வெள்ளியும் விளக்கு வைத்து அவ்விடத்தில் வணங்கி வந்ததுடன் பால் வைப்பாளாம். அது மட்டுமன்றி ஒவ்வொரு பங்குனி உத்தரத்திலும் பொங்கல் வைத்து மடைபரவி வழிபட்டு வருகிறாளாம். அந்த இரண்டில் ஒரு பாம்பு இறங்கிப் போய் புதூரில் குடி கொள்ளவே அங்கும் பொங்கி வழிபடும் வழக்கம் ஆரம்பிக்கப்பட்டதாம்.

இயக்கச்சி முகாவிலில் இருந்து வெளியேறிய பாம்பு கொம்படி ஊடாகப் புளியம் பொக்கணை சென்ற பாதை இன்று வரை மழை, பெருவெள்ளம் என்பவற்றுக்கும் அழியாமல் இருப்பதாக அப்பகுதி மக்கள் கூறுவதுடன் அது பாம்பரைத்த வாய்க்கால் என்ற பேரில் நிலவுவதாகவும் தெரிவிக்கின்றனர். இது ஒரு கர்ணபரம்பரைக் கதையாக இருந்த போதிலும் இன்றும் அங்கு தமிழ் மக்களுக்கேயுரிய பொங்கல், மடைபரவல், பால்வைத்தல், சாமியாடல், தீ மிதித்தல் போன்ற சிறு தெய்வ வழிபாட்டு முறைகள் பின்பற்றப்பட்டு வருகின்றன.



புளியம்பொக்கணை, புதூர் ஆலய நாகதம்பிரான் ஆலயங்களுக்கான சில தனித்துவமான சடங்கு முறைகள் உண்டு. மடைப்பண்டம் மடைபரவி மடைவெட்டுவது வரை சில ஒழுங்குமுறையான சடங்குகள் உண்டு.

மடைப்பண்டம் எடுத்தல் என்பது இதில் ஒரு ஆரம்ப முக்கிய நிகழ்ச்சியாகும்.

பங்குனி உத்தரத்திற்கு ஒரு வாரம் முன்பே பொங்கலுக்குரிய புதுப்பானை சட்டி என்பன ஒரு நல்ல நேரத்தில் கொள்முதல் செய்யப்படும். இப்பொருட்கள் யாவும் மாட்டுவண்டிகளில் ஏற்றப்பட்டு குற்றம் குறையற்ற ஒரு உச்சிவேளையில் அவை மீசாலை அம்மன் ஆலயத்திலிருந்து புறப்படும். இவ்வண்டிகள் கூடாரம் கட்டப்பட்டு அலங்கரிக்கப்பட்டிருக்கும்.

வண்டிகளை இழுக்கும் மாடுகளுக்கு சலங்கைகள் கட்டப்பட்டு, மாலைகள் கொம்புகளுக்கு சூடப்பட்டு நெற்றிக்கு சந்தனம், குங்குமம் வைக்கப்பட்டு அலங்காரம் செய்யப்பட்டிருக்கும். சலங்கை ஒலியெழுப்பி வண்டித் தொடர் செல்வது கண்கொள்ளாக் காட்சியாயிருக்கும். வழியெங்கும் பக்தர்கள் நின்று கும்பம் வைத்து, தேங்காய் உடைத்து வழிபட்டு தங்களுக்குரிய பங்குக்கும் நெல்லு, இளநீர் போன்ற பொருட்களை வண்டிகளில் சேர்ப்பர்.

வண்டி தொடர் தொம்பி நடந்து தொம்பி அம்மன் கோவிலை அடையும். பங்குனியில் கொம்படி வெளியில் நீர் இருப்பதில்லை. அம்மன் கோவிலில் வழி வெட்டுச் சடங்கு நடத்தி பின்பு மடைப் பண்டம் புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தையடையும்.

பொங்கலன்று காலை தொடக்கமே மீசாலை, மட்டுவில், வரணி, கொடிகாமம் போன்ற தென்மராட்சி பகுதியிலிருந்தும், பளை, மாசார், இயக்கச்சி, முகாவில், காரையம்பதி, கோவில் வல்லி, பண்ணை, வண்ணாரிகுளம், உடுத்துறை ஆகிய பச்சிலைப் பள்ளிப்பகுதிகளிலிருந்தும் வன்னிப் பெருநிலப்பரப்பின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோவில் வளாகத்தில் கூட ஆரம்பித்துவிடுவார்கள். கோவில் வீதியெங்கும் காப்பு முதலிய அலங்காரப் பொருட்களின் கடைகள், பாத்திரக் கடைகள், கச்சான் என எங்கும் கலகலப்பான வர்த்தகம் கொடிகட்டிப் பறக்கும். அடியார்கள் தங்களின் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுவார்கள்.

மாலையாகியதும் பொங்கல் விழா ஆரம்பமாகும். பூசாரியால் பிரதான பொங்கல் பானை அடுப்பில் இருந்து இறங்கிய பின்பே ஏனையோர் தங்கள் பொங்கலை ஆரம்பிப்பார்.

மாவிலையால் தோரணம் கழுத்தில் கட்டப்பட்டு திருநீறு சந்தனம் என்பன பூசப்பட்ட பொங்கல் பானைக்குள் நீர்விட்டு பூசாரியார் பறைமேளம் முழங்க அடுப்பில் ஏற்றுவார். அதை வழுக்கேற்றல் என கூறுவதுண்டு. அத்துடன் பொங்கல் ஆரம்பிக்கும் பெண்கள் அரிசி கழுவல், தேங்காய் துருவல் வடை சுடல் போன்ற பணிகளைச் செய்வர். நீருடன் பசுப்பால் விட்டு கொதிக்க வைக்கப்படும். பானையில் பால் கொதித்துப் பொங்கி வரும்போது பூசாரியார் பானையை மூன்று முறை சுத்தி வந்து வணங்கி விட்டு ஒவ்வொரு பிடியாக மூன்று பிடி அரிசியைப் பானையில் போடுவர். பின் அரிசி போடப்படும். அத்துடன் தேவையான முந்திரிவற்றல் போன்ற பொருட்களும் சேர்க்கப்படும். பொங்கல், வடை என்பன தயாரானதும் நாகதம்பிரானின் முன்னிலையில் மடை பரவப்படும். அதாவது வாழை இலையில் பொங்கல் படைத்து, பழவகைகள், வடை என்பனவும் அதனுடன் படைக்கப்படும். இந் நடவடிக்கைகள் ஒரு வெள்ளைத் துணியால் பக்தர்களுக்கு மறைக்கப்படும். பூசாரியார் கற்பூரம் கொழுத்தி தீபம் காட்டி மடையை நாகதம்பிரானுக்கு ஒப்படைப்பார். இவை ஒரு புறம் நடந்துமுடிய ஆலய முன்றலில் நேர்த்திக் கடன் கழிக்கும் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

பக்தர்கள் நேர்த்திக் கடன்களுக் காக நேர்ந்து விட்ட கோழிகளைப் பலியிடுவர். இப்போ சில வருடங் களாக அவ்வழக்கம் கைவிடப்பட்டு நேர்த்திக்காக ஒப்படைக்கப்படும் கோழிகள் ஆலயத்தைச் சேரும்.

பல பக்தர்கள் சுட்டெரிக்கும் நெரிப்புத்தணற் பரப்பின் மீது தீ மிதித்து நேர்த்தியை நிறைவேற் றுவார்கள். இன்னும் சிலர் ஆட்டக் காவடி, பறவைக்காவடி, பால் செம்பு எடுத்தல் போன்ற நேர்த்திகளையும் செய்வர்.

பொங்கல் நாளிலும் ஒவ்வொரு வெள்ளியிலும் பூசாரியால் ஒரு கிண் ணத்தில் பால்கொண்டு சென்று ஆலமரப் பொந்தில் வைப்பதாகவும், அதைப் பாம்பு வந்து குடித்துச் செல் வதாகவும் கூறப்படுகிறது ஒரு முக்கிய தகவலாகும்.

அந்நிகழ்வின் பின் பொங்கல் விழா வழிபாடு நிறைவடையும் இங்கு கவனிக்க வேண்டிய ஒரு சிறப்பம்சம் இப் பொங் கலுடன் பல திருமணங்களும் நிறை வேறுவதுண்டு. தென்மராட்சி, பச்சி லைப்பள்ளி, வடமராட்சி போன்ற இடங்களிலிருந்து பொங்கலுக்காக வந்து தங்கள் உறவினர்களை வீட்டில் தங்கவைப்பார்கள். இச்சந்தர்ப்பத்தில் தங்கள் பிள்ளைகளுக்கிடையே திருமணப் பேச்சினை ஆரம்பிப்பதுண்டு. அது மட்டுமன்றி அங்கு வந்து தங்கிச் செல்லும் உறவுகளுக்குப் போகும்போது நெல்லு, தேன், மரைவற்றல் என்பன வற்றை அன்பளிப்பாகக் கொடுத்து அனுப்புவதுண்டு.

புதூர் ஆலயத்திலும் பொங்கல் விழாவின் போது புளியம் பொக் கணையில் இடம்பெறுவது போன்ற சடங்குகளே பேணப்படுகின்றன. ஆனால் மடைப்பண்டம் கொண்டு செல்வது பற்றி சில வித்தியாசமான கதை உண்டு.

இவ்வாலயத்திற்கும் மடைப்பண்டம் மீசாலை அம்மன் ஆலயத்திலிருந்தே எடுத்து வரப்படுவதாகக் கூறப்படுகிறது. ஒரு சில அம்மடைப்பண்டம் புளியம் பொக்கணை, பின்பு கொக்காவில் வழியாகப் பழைய முறிகண்டி போய் வன்னி விளாங்குளம் ஊடாக புதூரை அடைவதாகக் கூறுகின்றனர். இன்னும் சிலர் மடைப்பண்டம் பூநகரி ஞானி மடத்துக்கு வள்ளங்களில் கொண்டு வரப்பட்டு பின் வண்டிகள் மூலம் முட்கொம்பன், வன்னேரி, துணுக்காய் வழியாகப் புதூருக்கும் கொண்டு செல்லப்படுவதாகக் கூறுகின்றனர். சில நெருக்கடிகள் காலத்தில் ஒவ்வொரு கட்டத்திலும் ஒவ்வொரு பாதைகள் பாவிக்கப்பட்டிருக்கலாம். இப்போது ஏ9 வீதியூடாகவே புதூருக்கு மடைப்பண்டம் எடுத்துச் செல்லப்படுகிறது.

இன்று இவ்விரு ஆலயங்களிலும் மண்டபங்கள் அமைக்கப்பட்டு வேத மந்திரங்கள் ஓதப்பட்டு நியம முறை யிலான பூஜைகள் இடம்பெற்று வருகின்றன. அதே வேளையில் பாரம்பரிய சடங்கு கள் எவ்வித குறைபாடுமின்றி சிறு தெய்வ வழிபாட்டின் தனித்துவம் குன்றாமல் பேணப்பட்டு வருவது ஒரு சிறப்பம்சமாகும்.

மருத நிலப்பரப்பின் இன்னுமொரு நாகவழிபாடு இடம்பெறும் முக்கிய இடம் பரந்தன் பாம்புக்கிடமாகும். இங்கு மடைப்பண்டம் கொண்டு வரப்படும் முறை பேணப்படுவதில்லை. ஏனைய பொங்கல் பூசை மரபுகளை நாக வழிபாட்டுக்கு உரிய முறையில் பின்பற் றப்படுகின்றன.

ஏனைய ஆலயங்களில் இல்லாத ஒரு சிறப்பு அம்சம் இதற்கு உண்டு. இங்கு ஒரு நிரந்தர வெளியரங்கு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இவ் வாலயத்தில் விழா நாட்களில் அங்கு பாரம்பரிய நாட்டுக்கூத்து, இசை நாடகங்கள் என்பன மேடையேற்றப் படுவதுண்டு.

சிறு தெய்வ வழிபாடு என்பது தமிழ் மக்களின் தொன்மை வாய்ந்த ஒரு தனித்துவமான வணக்க முறை யாகும். மருத நில மக்கள் வழிபாடு, ஐயனார் வழிபாடு என்பவற் றைப் போலவே நாகவழிபாட்டையும் பாரம்பரிய சடங்கு முறைகள் பிசகாமல் பேணி வருகின்றனர். இது ஒரு தெய்வ வழிபாட்டு முறை என்பது மட்டுமன்றி எமது கலாசார அடையாளங்களில் ஒன்று என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

***

**நா.யோகேந்திரநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஒன்றுபட்டு செயல்படுவீர்களா??

**இரா.புத்திரசிகாமணி**

உதவி செய்யாவிட்டாலும் பாதகம் இல்லை. உபத்திரவமாவது செய்யாமல் இருங்கள் என்று மலையக மக்கள் வெளிப்படையாகவே கேட்க ஆரம்பித்துவிட்டனர்.

இப்பொழுது அன்றாட தினசரிகளில் குறிப்பாக மலையக மக்கள் மீது அக்கறையுள்ள தமிழ் பத்திரிகைகளில் அலசி ஆராயப்படும் ஒரு விடயம் தான் மலையகத்தில் உருவாக்கப்பட வேண்டிய தொழிற்சங்க சம்மேளனம்.

இவ்விடயம் தொடர்பாக கடந்த வாரமும் இப்பத்தியில் சுட்டிக்காட்டி இருந்தோம். எனினும் மீண்டும் அலச வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

உறுதியான தொழிற்சங்க சம்மேளனம் ஒன்றை உருவாக்க விடாமல் தடுப்பதற்கும் தவறான பிரசாரங்களை மேற்கொள்ளவும் சில கைத்தடிகள் கூச்சலிட ஆரம்பித்துவிட்டன.

இவர்களுடைய ஓலமும் ஒப்பாரியும் என்னவென்றால் மனோகணேசன் புதிய தொழிற்சங்கம் ஒன்றை சம்மேளனம் என்ற பெயரில் ஆரம்பிக்க முயல்கின்றார் என்றும், அந்த சம்மேளனத்திற்கு மனோகணேசனே தலைவராகப் போகின்றார் என்றும் விசமத்தனமாக பிரசாரம் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

இவர்களின் கூற்று மலையக தொழிலாளர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது.

இப்பொழுதே இரண்டு மலையக தொழிற்சங்க சம்மேளனங்கள் இயங்குவதாகவும் கூறுகின்றனர்.

ஒன்று தொழிலாளர்களின் சம்பள உயர்வு தொடர்பாக தோட்டத் துரைமார் சம்மேளனத்திற்கும் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளவர்களின் சம்மேளனம். இரண்டாவது கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திடாத சங்கங்களின் சம்மேளனம் என்று கூறுகின்றனர்.

ஏற்கனவே இந்த இரண்டு மலையக தொழிற்சங்க சம்மேளனங்கள் இருக்கும் போது மேலும் மூன்றாவதாக ஒரு சம்மேளனம் அவசியம்தானா என்றும் கேட்கின்றனர்.

இதைத்தான்மலையகதொழிலாளர்கள் நம்ப மறுக்கின்றனர்.

இந்த இரு பிரிவினரும் தனித்தனியாக தமது தொழிற் சங்க சம்மேளனங்களைப் பதிவு செய்துள்ளனரா? அப்படியானால் அந்தத் தொழிற்சங்க கூட்டு சம்மேளனங்களின் தலைவர் செயலாளர்கள் யார்? அப்படி எந்த ஒரு சம்மேளனமும் இன்றுவரை பதிவு செய்யப்படவும் இல்லை. உறுதியான கட்டமைப்பும் இல்லை. இப்படியான ஒரு நிலையில் ஏற்கனவே இரண்டு தொழிற்சங்க சம்மேளனங்கள் இயங்குவதாகக் கூறுவதை மலையகத் தொழிலாளர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கு இடையிலேயே குத்து வெட்டுகளும், முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அதே போன்று கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களின் மத்தியிலும் அரசியல் கொள்கை முரண்பாடுகளும் கருத்து வேற்றுமைகளும் காணப்படுகின்றன. இதை எவரும் மறுக்கமுடியாது. மறைக்கவும் முடியாது.

இதுவரை எற்படுத்தப்பட்ட கூட்டமைப்புகளும், கூட்டணிகளும் தற்காலிகமானதும், சமயாசமய கூட்டணிகளாகவும், சந்தர்ப்பவாத கூட்டணிகளாகவுமே காணப்படுகின்றன. இந்த இரு பிரிவுகளுக்கும் இடையில் உறுதியான கொள்கையும், நோக்கமும் இல்லை. தத்தமது சுய இலாபங்களுக்காக உருவாக்கப்பட்ட கூட்டணிகளாகவே காணப்படுகின்றன. மலையக தொழிற்சங்கங்களுக்கிடையில் உறுதியரன நோக்கமும் உருப்படியான வேலைத் திட்டமும் கிடையாது.

**கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ள தொழிற்சங்கங்களுக்கு இடையிலேயே குத்து வெட்டுகளும், முரண்பாடுகளும் காணப்படுகின்றன. அதேபோன்று கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களின் மத்தியிலும் அரசியல் கொள்கை முரண்பாடுகளும் கருத்து வேற்றுமைகளும் காணப்படுகின்றன. இதை எவரும் மறுக்கமுடியாது. மறைக்கவும் முடியாது.**

உதாரணமாக வருடாவருடம் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முற்பணக் கொடுப்பனவை எடுத்துக் கொள்வோம். ஒவ்வொரு தொழிற்சங்கங்களும் தமது வாய்க்கு வந்தபடி ஒரு தொகையை குறிப்பிட்டு பண்டிகை முற்பணமாக கேட்கின்றனர். பொதுவான இந்த கோரிக்கையில் கூட இந்த தொழிற்சங்கங்கள் ஒரே குரலில் செயற்படத் தவறிவிட்டன.

தொழிற்சங்கங்களின் இந்த இயலாமையும், கையாலாகாதத் தனமும் தோட்ட நிர்வாகங்களுக்கு சாதகமாக அமைந்துவிடுகின்றன. இதனால் எந்த ஒரு தொழிற் சங்கத்தின் கோரிக்கைகளையும் செவிமடுக்காமல் தாம் நினைத்த ஒரு தொகையை பண்டிகை முற்பணமாகக் கொடுத்துவிட்டு தமது கடமை முடிந்ததாக இருந்துவிடுகின்றனர் தோட்டத்துரைமார். பண்டிகை முற்பணம் என்பது ஒன்றும் தோட்டத் தொழிலாளர்களுக்கு யாசகமாகவோ, இனாமாகவோ அல்லது அன்பளிப்பாகவோ வழங்கப்படுவதில்லை. எவ்வளவு பெரிய தொகையை வழங்கினாலும் தொழிலாளர் அதனை தவணை அடிப்படையில் திருப்பிச் செலுத்தி விடுகின்றனர். இதனைப் பெறுவதற்குப் பெரிய போராட்டம் நடத்த வேண்டிய அவசியம் இல்லை. இந்த தொழிற்சங்கங்கள் அனைத்தும் ஒரே குரலில் அழுத்தம் கொடுத்திருந்தால் குறிப்பிட்ட ஒரு தொகையை பண்டிகை முற்பணமாகப் பெற்றுக் கொடுத்து தொழிலாளர்களை ஓரளவாவது திருப்திப்படுத்தி இருக்கமுடியும். இவர்கள் அதைச் செய்ய விரும்பவில்லை. செய்யவும் முடியாது. கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்ட பெரிய தொழிற்சங்கமோ, அல்லது கைச்சாத்திடாத தொழிற்சங்கங்களோ ஒன்றிணைந்து இதனைக் கேட்கவும் இல்லை.

இது ஒரு சாதாரண விடயம். இதைப் போன்றே தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மற்றும் அடிப்படை உரிமைகள். இந்த மலையகத் தொழிற்சங்கங்கள் தமது தலைமைத்துவம், சுயஇலாபம் தொடர்பாக மட்டும் தான் சிந்திக்கின்றனரேயன்றி, தொழிலாளர்களின் சக்தியை உணர்வதில்லை. இவர்களுடைய ஆட்டம் பாட்டங்களுக்கு எல்லாம் ஆணிவேராகவும் அத்திவாரமாகவும் இருப்பவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் தான் என்பதை இந்த மாங்காய் தலையர்களுக்கு அடிக்கடி நினைவூட்ட வேண்டிய அவலம் ஏற்பட்டுள்ளது.

இப்பொழுதும் கூட மலையகத்தில் இரண்டு சம்மேளனங்கள் இருப்பதாக திரும்பத்திரும்ப கூறுகின்றனர். இது அவர்களுடைய அறியாமையா? அல்லது அசண்டையா? என்பதும் கேள்விக்குறிதான்.

இந்த இரு பிரிவினரும் தமக்கென சிறு கூட்டங்களைச் சேர்த்து வைத்துக் கொண்டு வேதாந்தம் பேசுகின்றனர். இந்த இரு பிரிவினருமே தமது கூட்டாளிகளையும் சேர்த்துக் கொண்டு ஒரே அணியாக இணைந்தால் என்ன? என்பது தான் இன்று எழுந்துள்ள கேள்வி.

ஏன் இவர்கள் ஒன்றுசேர விரும்புவதில்லை. இவர்கள் தம்மைப்பற்றி மட்டும் சிந்திப்பதை விட்டுவிட்டு தம்மை தலைவர்களாக்கிய மக்களைப் பற்றியும் சிந்திக்க வேண்டும்.

இங்கே இன்னும் ஒருவிடயத்தையும் நாம் அவதானிக்க வேண்டும். அதாவது இந்த இரண்டு பிரிவினரும் ஒன்றுசேர நினைத்தாலும் இவை இரண்டிலுமே சேராமல் தனித்து நிற்கும் சிலர் இடையில் இருந்து தூபம் போட்டு இவர்களை சேரவிடாமல் பிரித்து வைத்தே குளிர் காய வேண்டும் என கங்கணம் கட்டிக் கொண்டு அறிக்கை மேல் அறிக்கை விடுகின்றனர்.

இரண்டு சம்மேளனங்களையும் பலப்படுத்த வேண்டும் என்று வாயளவில் வேசம் போடுபவர்கள், இந்த இரண்டு சம்மேளனங்களும் இணைந்து ஒரு பலம்மிக்க சம்மேளனத்தை உருவாக்க வேண்டும் என்று அழுத்தம் கொடுக்க முடியாது?

பண்டிகை முற்பணத்தைத் தொடர்ந்து தோட்டத் தொழிலாளர்களை அச்சுறுத்துவது சம்பள உயர்வும், ஜனாதிபதியின் வரவு செலவுத் திட்டமும் தமது தலைவர்கள்தான் நம்மைப்பற்றி சிந்திப்பதில்லை. ஜனாதிபதியாவது வரவு செலவுத்திட்டத்தின் மூலம் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஏதாவது நிவாரணம் வழங்குவாரா? என்று ஏங்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படியான ஒரு சூழலில் கூட்டு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளவர்களில் ஒருவரான இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர்சங்கத்தின் பொதுச் செயலாளர் கே.வேலாயுதம் தோட்டத் தொழிலாளர்களின் மாதச் சம்பளம் பத்தாயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட வேண்டும் என சம்பள உயர்வு கோரிக்கைக்கு பிள்ளையார் சுழி போட்டுள்ளார்.

வேலாயுதத்தின் கோரிக்கை நியாயமானதுதான். அது வரவேற்கத்தக்கது.

இன்னும் சில நாட்கள் பொறுத்திருந்து பார்ப்போம். "என்னடா இது இந்த வேலாயுதம் இப்படி ஒரு கோரிக்கையை முன் வைத்து விட்டாரே" நம்மைப்பற்றி தொழிலாளர்கள் மட்டமாக நினைப்பார்களே அதற்கு இடம் கொடுக்கக் கூடாது. நமது பங்கிற்கு நாமும் ஏதாவது ஒன்றைக் கேட்க வேண்டும் என்று போட்டி போட்டுக் கொண்டு பத்திரிகைகளுக்கு தமது வாய்க்கு வந்தபடி அறிக்கைகளை விட ஆரம்பித்து விடுவார்கள்.



எவ்வளவு பெரிய தொகையையும் கேட்கலாம். அது தொழிலாளர்களுக்கு கிடைக்கின்றதோ இல்லையோ நமது பெயரில் ஒரு அறிக்கை வந்து விட்டால் போதும் என்பது தான் மலையகத் தலைவர்களின் பேராசை.

இந்த அறிக்கைகளைப் பார்த்து பெருமூச்சுவிட்டு ஏங்குவது தான் தொழிலாளர்களின் தலைவிதி இந்த நிலைமை மாற வேண்டும். தொழிலாளர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் மகா சக்தியாக மலையகத் தொழிலாளர்களின் நலன் கருதி பலம் மிக்க ஒரே ஒரு தொழிற்சங்க சம்மேளனம் உருவாக்கப்பட வேண்டும். அந்த சம்மேளனத்தின் மூலம் ஒரே இரவில் சம்பள உயர்வு கோரிக்கையை முன் வைக்க வேண்டும். அனைத்து தொழிற்சங்கங்களும் ஓரணியில் நின்று அழுத்தம் கொடுக்கும் போது தோட்ட துரைமார் மட்டுமல்ல, தோட்டக் கம்பனிகளும் அரசாங்கமும் கூட அஞ்ச ஆரம்பித்துவிடும்.

நாட்டின் பொருளாதாரம் இன்று தோட்டத் தொழிலாளர்களின் கைகளிலேயே தங்கி உள்ளது. தேயிலையும், இறப்பரும் நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்கள் பட்ஜெட் தயாரிக்கவும் தொழிலாளர்களின் தயவு அவசியம்.

இந்த பெரும் சக்தியை உணர்ந்து செயல்பட முன்வராத தொழிற்சங்கத் தலைமைகள் உதவி செய்யாவிட்டாலும் உபத்திரமாவது செய்யாமல் இருந்து ஏதாவது ஒரு வழியில் விடிவு காண முனைபவர்களுக்கு இடம் கொடுத்து ஒதுங்கிவிட வேண்டும். இல்லையேல் ஒன்றுபட்டு செயல்பட முன்வரவேண்டும். அது தான் தோட்டத் தொழிலாளர்களுக்கு நீங்கள் செய்யும் புண்ணியமாகும்.

***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்நல்லிணக்கத்திற்கான ஓர் முட்டுக்கட்டை!



2009 வைகாசியில் சிறிலங்கா ஆயுதப்படைகளினால் எல்.ரீ.ரீ. நசுக்கப்பட்டதுடன், சிறிலங்காவில் இன உறவுகள் விடயத்தில் நாட்டு மக்களின் மனப்போக்கு முரண்பாடுகளுக்கான தீர்வில் இருந்து மீள் நல்லிணக்கமெனும் ஓர் நீண்ட கருத்தார்ந்த விவாதத்திற்குரிய விடயமாக மாற்றமடைந்துவிட்டது.

ஆயுத மோதல்கள் முடிவடைந்து மூன்று வருடங்களுக்கு மேலாகிவிட்ட நிலையிலும் கூட இனங்களுக்கிடையிலான மீள் நல்லிணக்கம் மாறாமல் அதே நிலையில் இன்னமும் ஓர் தொலைதூரக் கனவாகவே காணப்படுகின்றது.

இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் இன்று வரையில் நிகழாது இருப்பதற்கு அடிப்படையான காரணம் யாதெனில் சிறிலங்கா அரசாங்கம் அல்லது பொதுவில் தெற்கில் உள்ளவர்களும், அத்துடன் தமிழ்ச் சமூகமும் நல்லிணக்கம் குறித்து அடிப்படையிலேயே இரண்டு வெவ்வேறு வித்தியாசமான கருத்துகளையோ அல்லது கண்ணோட்டங்களையோ கொண்டிப்பதேயாகும்.

அரசாங்கம், வீதிகளைத் திருப்தியமைப்பதும் அத்துடன் வாகனங்கள் செல்லப் பாலங்களைக் கட்டுவதுமே சமூகங்களை ஒருமிக்கச்செய்யும் என்ற திடமான நம்பிக்கையினை அடிப்படையாகக் கொண்டிருப்பதாகவே காணப்படுகின்றது. அத்துடன் அரசாங்கம் நல்லிணக்கத்திற்கான திட்டங்களில் ஒன்றாக கைதுசெய்யப்பட்ட அல்லது சரணடைந்த விடுதலைப்புலிப் போராளிகளுக்கு புனர்வாழ்வளிப்பதையும் ஓர் சாட்சியமாகப் பயன்படுத்துகின்றது.

ஆனால், தமிழர்கள் நல்லிணக்கத்திற்கான ஓர் பயனுள்ள கருவியாக அபிவிருத்தியினை ஏற்றுக்கொள்ள மறுப்பதுடன் மறுபுறத்தில் அதனை ஓர் சமூக நீதியினூடாக பார்ப்பதையே மேம்பட்ட அளவில் விரும்புகின்றனர்.

அவர்களுடைய அரசியல் பிரச்சினைகளுக்கு ஓர் நியாயபூர்வமான நீதி கிடைப்பதே அவர்களுக்கான தீர்வாகும். ஆனபடியால் மத்திய அரசிடமிருந்து உள்ளூராட்சி அமைப்புக்கு அரசியல் அதிகாரங்களை வழங்குவதை அடிப்படையாகக்கொண்ட ஓர் அரசியல் தீர்வே தமிழ் மக்களின் அடிமனங்களில் நல்லிணக்கம் உறுதியுடன் உருவாகுவதற்கான ஓர் அடிப்படையாகும்.

அரசாங்கம் வெற்றிகரமாக முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு ஓர் அரசியல் திட்டமொன்றினைக் கண்டுகொள்ளும் பொறுப்பை, முன்மொழியப்பட்டுள்ள நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலையில் சுமத்திவிட்டது. தமிழர்கள் இதனை அரசின் காலந்தாழ்த்தும் ஓர் உத்தியாகவே பார்க்கின்றனர்.

நல்லெண்ணத்தை உருவாக்குவதற்குப் பதிலாக அபிவிருத்தித் திட்டங்களுக்கு அரசு அதிக முக்கியத்துவமும், விளக்கமும் அளிப்பது பிராந்தியத்தில் வாழும் தமிழர்கள் மனங்களில் அச்சத்தினையும், ஐயுறவு மனப்பான்மையினையும் உருவாக்கியுள்ளது.

முன்னாள் விடுதலைப்புலிப் போராளிகளுக்கான புனர்வாழ்வளிப்பும் எந்த ஒரு பெரிய அளவிலும் தாக்கத்தை ஏற்படுத்தத் தவறிவிட்டது. எனவே, மீள்நல்லிணக்கம் என்பது மூன்று ஆண்டுகள் கழிந்துவிட்ட பின்னரும் கூட உளவியல் ரீதியாக இனச் சமூகங்களிடையே ஒருவருக்கொருவர் விட்டுவிலகி வாழும் ஓர் நல்லிணக்கத்திற்கான சவாலாகவே தொடர்ந்து வருகின்றது.

இம்மேடை அரங்கில் எதிரான ஒரு பகுதியாக மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல்கள் குறித்து பொது அறிவிப்பு அதிகாரபூர்வமாக மேற்கொள்ளப்பட்டது. திட்டமிட்டிருந்த காலத்திற்கு ஒரு வருடத்திற்கு முன்பதாகவே கிழக்கு மாகாணசபை கலைக்கப்பட்டது. கிழக்குத் தேர்தலில் ஆளும் தரப்புக் கூட்டமைப்பு அதிகமான ஆசனங்களைக் கைப்பற்றியது. ஆயினும் முழு நிறைவான ஓர் பெரும்பான்மை வெற்றியை ஈட்டிக்கொள்ள முடியவில்லை. ஆட்சியை அமைப்பதற்கு மற்றுமொரு கட்சியின் ஆதரவு அரசுக்குத் தேவைப்பட்டது. இறுதியில் ஏழு ஆசனங்களைக் வென்றெடுத்த சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடன் கிழக்கு மாகாண சபையின் ஆட்சியை ஆளும் தரப்பு நிறுவியது.

சபையின் முதலமைச்சராக முஸ்லிமும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மிகுந்த நம்பிக்கைக் குரியவருமான நஜீப் ஏ மஜித் நியமிக்கப்பட்டார். அரசியலமைப்பின் 13 வது திருத்தத்தின்படி முதலமைச்சர் உட்பட ஐந்து அமைச்சர்களைக் கொண்ட ஓர் மந்திரி சபையும் நியமிக்கப்பட்டுவிட்டது. மந்திரி சபையானது நான்கு முஸ்லிம்களையும் அத்துடன் ஒரு சிங்களவரையும் உள்ளடக்கியதாகவுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் மூன்றிலொரு பகுதிக்கும் சற்று அதிகமான சனத்தொகையினைக் கொண்ட தமிழ்ச் சமூகத்தினரில் ஒருவராவது மாகாணசபை ஆட்சி அமைப்பில் பிரதி நிதித்துவப்படுத்தப்படவில்லை என்பதே மக்கள் மனதில் இன்று தோன்றும் எண்ணமாக உள்ளது. இதனை ஒருவகையில் அவர்களின்

**கிழக்கு மாகாணத்தில் மூன்றிலொரு பகுதிக்கும் சற்று அதிகமான சனத் தொகையினைக் கொண்ட தமிழ்ச் சமூகத்தினரில் ஒருவராவது மாகாணசபை ஆட்சி அமைப்பின் பிரதி நிதித்துவப்படுத்தப்படவில்லை என்பதே மக்கள் மனதில் இன்று தோன்றும் எண்ண மாக உள்ளது. இதனை ஒருவகையில் அவர்களின் ஆதங்கம் என்றோ அல்லது மனக்குறை என்றோ கொள்ளலாம்.**

ஆதங்கம் என்றோ அல்லது மனக்குறை என்றோ கொள்ளலாம்.

மாகாணசபை ஆட்சி அமைப்பிலிருந்து முழுமையாகச் தமிழர்களைச் சேர்த்துக்கொள்ளாமல் விலக்கியமைக்கு அங்கே இரண்டு காரணங்கள் இருக்கலாம்.

அக்காரணங்களில் ஒன்றாக, ஆளுந்தரப்புக் கூட்டணியின் இலச்சினையின் கீழ் போட்டியிட்ட முஸ்லிம் கட்சிகளுக்கு இடமளிப்பதற்காகவும் அத்துடன் அரசு கிழக்கில் ஆட்சியை அமைப்பதற்கு முஸ்லிம் காங்கிரசின் தயவில் தங்கியிருந்தமையும் இருக்கலாம்.

இரண்டாவது காரணமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு வழக்கத்தைவிட அதிகமாக வாக்களித்த தமிழ் மக்களுக்கு ஒரு பாடம் புகட்டவும் அரசு விரும்பியிருக்கக் கூடும்.


மாகாண ஆட்சி அமைப்பில் ஆகக்குறைந்தது ஒரு தமிழருக்காவது இடமளிக்க விரும்பியிருந்தால் அதனைச் செய்திருக்க முடியும். எது எப்படியிருப்பினும், தமிழர்கள் அரசிற்கு வாக்களிக்கவில்லையெனக் கருதுவது தவறாகும்.

முன்னாள் முதலமைச்சரான சந்திரகாந்தன் பெற்ற வாக்குகள் தமிழ்மக்களிடமிருந்து கிடைக்கப்பெற்றவையேயாகும். கிழக்கு மாகாண மந்திரிகள்சபையில் தமிழர் ஒருவருக்கு இடமளிக்காதது. ஐயத்திற்கிடமின்றி நம்பியவரை ஏமாற்றும் ஓர் செயலாகும். அத்துடன் எதிர்காலத் தேர்தல்களின்போது இது ஆளுந்தரப்பிற்கான தமிழர்களின் ஆதரவை மென்மேலும் படிப்படியாக சரிவடையச் செய்யக்கூடும்.

கிழக்கு மாகாணத் தமிழர்கள் மனிதகுல வேறுபாடுகளை மையமாகக் கொண்ட அரசியலினால், ஏனைய சமூகங்களின் பரந்த மனப்பான்மையில் இருந்தும் அந்நியப்படுத்தப்படுவதாக உணர்வதற்கு எல்லா நியாயபூர்வமான காரணங்களையும் கொண்டுள்ளனர்.

சிவநேசதுரை சந்திரகாந்தனின் கிழக்கின் விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் ஆலோசகர் நியமனம் தமிழ் மக்களுக்கு எதுவித உத்தரவாதத்தையும் அளிப்பதாயில்லை. ஏனெனில் அரசாங்கம் அவரது ஆலோசனைகளைச் செவிமடுத்தோ அல்லது செவிமடுக்காமலோ விட்டுவிடலாம். எது எப்படியிருப்பினும், முன்னாள் முதலமைச்சருக்கு நிச்சயமாகத் தனிப்பட்ட வகையில் நன்மைகளையும் சலுகைகளையும் வழங்கும் என்பது உறுதி. மேலும் அதற்கு உரமூட்டுவது போல அரசாங்கத்திற்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவிப்பவர்களும், சந்திரகாந்தன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் உள்வாங்கப்படுவாரெனவும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக அவருக்கு ஒருசில தொகை நிதி ஒதுக்கீடு செய்யப்படுமெனவும் கதையொன்றினை மக்கள் மனதில் ஊன்றி வைக்கின்றனர்.

தமிழினம் மீள்நல்லிணக்கம் குறித்து உற்சாகமின்றி இருப்பதற்கும், அவர்களுடைய மனக்குறைகளை வெளியிடுவதில் திடமான நம்பிக்கை கொள்ளாமல் இருப்பதற்கும், அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளில் அது உள்ளார்ந்த நேர்மையுடன் செயற்படாமையே காணமாகும்.



கிழக்கு மாகாண ஆட்சி அமைப்பில் தமிழர்களை விலக்கியமை மக்கள் மனதில் உள்ள இக்கருத்தினை மேலும் வலுவுடையதாக்கி, அத்துடன் நாட்டில் பொதுவிலும், குறிப்பாக கிழக்கிலுள்ள சமூகங்களை முற்றிலும் எதிரெதிரான கருத்துக்களையுடைய இரண்டு குழுக்களாகப் பிரிவினைப்படுத்தும். கிழக்கு மாகாண சபைத் தேர்தலும் மற்றும் மந்திரி சபை ஆக்கத்தின் கூற்றுகளும் இனங்களுக்கிடையிலான மீள்நல்லிணக்கம் சிறிலங்காவில் ஏற்பட என்பது ஓர் தொலைதூரக் கனவாக நீண்ட காலமெடுக்கும்.

*சண்டேரைம்ஸில்*
*எஸ்.ஐ.கீதபொன்கலன் எழுதியது.*

**தமிழில் ஜெகநாதன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதிய ஜனதாவுடன் விஜய்காந் கூட்டு?

லோக்சபா தேர்தலில் பி.ஜே.பியுடன் அணி சேர்ந்தால் தே.மு.தி.க 40 இல் 30 வரையான ஆசனங்களை பி.ஜே.பி இடம் பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளலாம். பி.ஜே.பியை அ.தி.மு.க எடுத்தெறிவதால் அக்கட்சி வேறுவழியின்றி தே.மு.தி.க விடம் சரணடைய வேண்டி யேற்படலாம். ஆனால் பா.ம.க வும் பி.ஜே.பி அணியில் சேர முன்வந்தால் அவர்களுடன் ஒரே அணியில் இருக்க தேமுதிகவினால் இயலாது.

பாரதிய ஜனதா கட்சி மதவாதக் கட்சி என்று கருதி அக்கட்சியுடன் கூட்டணி வைப்பதை, பல தமிழ்நாட்டுக் கட்சிகள், எதுவும் கிடைக்காதபோது கடைசித் தெரிவாகவே கருதி வந்தன. முதன் முதலில் முக்கிய கட்சிகளில் ஒன்று பி.ஜே பியுடன் கூட்டணி வைத்தது 1998 இல் தான். அக்கூட்டணியில் பா.ம.கவும் வைகோவின் ம.தி.மு.கவும் கூட இணைந்து கொண்டன. நடிகரும் இன்றைய தமிழக சட்டப்பேரவை எதிர்கட்சித் தலைவருமான விஜய்காந் தீவிர அரசியலில் குதித்தபோது பி.ஜே.பி தனது சோபையை ஓரளவு இழந்து, காங்கிரஸ் கட்சி மீண்டும் முன்னிலைக்கு வந்து விட்டிருந்தது. இதனால் பி.ஜே.பி மதவாதக்கட்சி, அதனால் அந்தக் கட்சியுடன் சேர மாட்டோம் என்ற ஏனைய கட்சிகளின் அந்தப் பழைய பல்லவியை விஜய்காந் பாடத்தொடங்கினார். அ.தி.மு.க, தி.மு.க முதலான கட்சிகளுடன் கூட்டு கிடையாது. ஆண்டவனுடனும் மக்களுடனும் மட்டுமே கூட்டணி என்று கூறி வந்த அவர் கடந்த வருடம் சட்டசபை இடைத் தேர்தலில் தான் முதல் முறையாக கூட்டணியில் இறங்கினார். தற்போது அ.தி.மு.கவுடனான அந்தக் கூட்டணி முறிவடைந்த நிலையில் 2014 லோக்சபா தேர்தலுக்கான வியூகத்தை வகுக்க வேண்டிய அவசியம் தற்போது எழுந்துள்ளது. மேலும் 2014 நடக்கவேண்டிய லோக்சபா தேர்தல் முன்கூட்டியே வரலாம் என எதிர்கட்சிகள் எதிர்பார்த்துவரும் நிலையில் மாநில அளவில் அல்லது தேசியளவில் ஒரு கட்சியுடன் கூட்டணி வைக்கவேண்டிய தேவையை சகல மாநிலக் கட்சிகளுமே உணர்ந்து வருகின்றன. இதற்கு விஜய்காந்தும் விதிவிலக்கல்ல. தேசிய கட்சிகள் என்று பார்த்தால் காங்கிரசும் பி.ஜே.பி கண்ணில் தெரியும் கட்சிகளாகும். இந்த வகையில் ஏற்கனவே 1998-2004 வரை ஆண்ட கட்சி என்ற பெயரை பி.ஜே.பி ஈட்டி வைத்திருந்தது. இந்த அகால வேளையில் விஜய்காந் விஷயத்தில். பி.ஜே.பிக்கு பெரிதும் உதவக்கூடும்.

மற்றைய முக்கிய தேசியக் கட்சியான காங்கிரசின் மத்திய அரசு தள்ளாடி வரும் நிலையில் அக்கட்சியுடன் கூட்டு வைக்க விஜய்காந் தயங்குவது புரிந்து கொள்ளத்தக்கதே. காங்கிரசுடன் சட்டப் பேரவை தேர்தலில் கூட்டணி அமைக்க அவர் தயாராக இருந்தபோதும் ஆளும் தி.மு.கவுடனான கூட்டணிக்கு அவர் நிர்ப்பந்திக்கப்பட்டார். மற்றும்படி அவருக்கு காங்கிரசுடன் நல்லுறவே நிலவி வந்தது. ஆனால் கடந்த ஒரு வருடத்தில் காங்கிரஸ் கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிப் போய் விட்டதால் பி.ஜே.பி மதவாதக்கட்சி என்ற கோஷத்தை கிடப்பில் போட விஜய்காந் தயாராகி வருவதாக தெரிகிறது. பழைய கூட்டாளியான அ.தி.மு. கவுடன் கடும் மோதலில் இறங்கியுள்ள தே.மு.தி.கவுக்கு அ.தி.மு.கவுடன் அணி சேர்வதால் வரும் தேர்தலில் பெரிய லாபமில்லை.

மிக நிச்சயமாக காங்கிரஸ் கட்சி தோற்று ஆட்சியிழக்கும் என்பதில் உறுதியான நம்பிக்கை உள்ளது. விஜய்காந்தின் நிலைப்பாடும் அதுவே. மேலும் பாட்டாளி மக்கள் கட்சி, தி.மு.க. அ.தி.மு.க இரண்டையும் திட்டித் தீர்த்து வருவதால் அந்தக்கட்சி பி.ஜே.பியுடன் அணிசேரக் கூடும் என கருதப்படுகிறது. விஜய்காந் இன்று அ.தி.மு.க வுடன் முட்டி மோதினாலும் அவரது பரமவைரி பாட்டாளி மக்கள் கட்சியே என்பது நினைவுகூரத் தக்கது. எனவே, ப.ம.க முந்திக் கொண்டு பி.ஜே.பி அணியில் சேர்வதற்கிடையில் தாம் அவ்வணியில் சங்கமமாகிவிட விஜய்காந் திட்டமிடுகிறார் என்ற பலமான ஊகங்கள் அடிபடுகின்றன. காங்கிரஸ் தி.மு.க இரண்டுமே விஜய்காந்துக்கு கூட்டணி சேர சமிக்ஞைகளை அனுப்பி வந்த போதும் அவ்விரு கட்சிகளையும் தூரமாகவே வைத்து வருகிறார். பி.ஜே.பி யுடன் இணைந்தால் முஸ்லிம் வாக்குகளை இழக்க நேரிடும் என்ற தயக்கம் இருந்தபோதும் விஜய்காந் பி.ஜே.பியுடன் சேர வெகுகாலம் முன்பாகவே அ.தி.முகாவும் தி.மு.காவும் பி.ஜே.யுடன் என்போதோ ஒரு காலத்தில் கூட்டணி அமைத்து இருக்கும் வரலாறு இருப்பதால் விஜய்காந் மதவாத கட்சியுடன் இணைந்துள்ளார் எனக் கூச்சலிட தி.மு.காவுக்கோ அ.தி.முகவுக்கோ முடியாது. காங்கிரஸ் மட்டுமே இவ்வாறு பேசத் தகுதியுடைய ஒரே கட்சி. ஆனால், அக்கட்சி மீது ஊழல் குற்றச்சாட்டு நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் அந்த முனையில் காங்கிரசை விஜய்காந் இலகுவாக சமாளித்துவிடமுடியும்.

இது தவிர, தி.மு.க, அ.தி.மு, காங்கிரஸ் போன்ற எந்தவொரு கட்சியுடன் சேர்ந்தாலும் அந்தக் கட்சிக்கு மொத்தம் 40 ஆசனங்களில் அதிகத்தை கொடுக்க நேரிடும். இக் கட்சிகளுக்கு ஏற்கனவே 17, 10,8 என எம்.பிக்கள் இருப்பதால் இந்த நிலை ஏற்படலாம். விஜய்காந் கட்சி கடந்த லோக்சபா தேர்தலில் 40 இல் தனித்துப் போட்டியிட்டு எந்தத் தொகுதியிலும் வெல்லமுடியவில்லை. பி.ஜே.பியும் கூட ஒரு தொகுதியையும் வெல்ல முடியாவிடினும் அடுத்து வந்த 2011 சட்டசபைத் தேர்தலில் தே.மு.தி.க 29 இடங்களை வென்று எதிர்கட்சித் தலைவர் பதவியையும் பெற்ற நிலையில், பி.ஜே.பி இன் எம்.எல்.ஏக்கள் எண்ணிக்கை லோக்சபாவில் போலவே இராஜ்யசபாவிலும் பூச்சியமாகவே தொடரலாயிற்று.

**அபிஜித்**

எனவே, லோக்சபா தேர்தலில் பி.ஜே.பியுடன் அணி சேர்ந்தால் தே.மு.தி.க 40 இல் 30 வரையான ஆசனங்களை பி.ஜே.பி இடம் பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளலாம். பி.ஜே.பியை அ.தி.மு.க எடுத்தெறிவதால் அக்கட்சி வேறுவழியின்றி தே.மு.தி.கவிடம் சரணடைய வேண்டியேற்படலாம். ஆனால், பா.ம.கவும் பி.ஜே.பி அணியில் சேர முன்வந்தால் அவர்களுடன் ஒரே அணியில் இருக்க தே.மு.தி.கவினால் இயலாது.

எனவே, முந்திக்கொண்டு இப்போதே பி.ஜே.பியுடன் கூட்டணியை முடிவுசெய்யவேண்டியுள்ளது. ஆனால், காங்கிரஸ் அரசு தப்பித்தவறி சமாத்தியமாக தனது ஆட்சியை 2014 வரை கொண்டுசெல்லுமானால் இப்போதே பி.ஜே.பியுடன் கூட்டணி முடிவுக்கு வருவது புத்திசாலித்தனமாக இராது என்றும் விஜய்காந் கருதுகிறாராம். இவ்வகையில் காங்கிரசுக்கு மாற்றான கட்சி என்ற பெயர் பி.ஜே.பி க்கு மிகவும் சாதகமான ஒரு அம்சமாகும். இப்போதைக்கு அ.தி.முகாவோ, தி.மு.காவோ பி.ஜே.பியுடன் சேர்வதை விரும்பாவிடினும் ம.தி.முகா, பா.ம.க, தே.மு.தி.க என உதிரிக்கட்சிகள் பலவும் பி.ஜே.பியுடன் இணையத் தயார் நிலையில் இருப்பது பி.ஜே.பிக்கு உற்சாகம் தரும் விடயமே. ஏனெனில், காங்கிரஸ் தள்ளாடினாலும் தேசிய அளவில் காங்கிரசுக்கு சவாலான பலமான கூட்டணியை அமைத்துக்காட்ட பி.ஜே.பியினால் இன்னும் முடியவில்லை. கட்சிக்குள்ளேயே இன்னும் குடும்பிப்பிடி சண்டை முடிந்தபாடில்லை. இந்தச் சோர்வு நிலை தமிழ்நாட்டிலாவது ஒரு சில கட்சிகளாவது பி.ஜே.பிக்கு கூட்டணி சேரும் சமிக்ஞைகளை காட்டுவது அக்கட்சியின் பலத்தை அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை.

இதைக்காட்டி ஒரிசா, ஆந்திரா, மேற்கு வங்கம், ஹரியானா ஆகிய மாநிலங்களில் தனது கூட்டணிக்குள் பலமான மாநிலக் கட்சிகளை ஈர்க்கும் வாய்ப்புகளும் பி.ஜே.பிக்கும் கிடைக்கும். ஏனெனில் ஒரிசாவில் பி.ஜே.டி (BJD), ஆந்திராவில் தெலுங்கு தேசம், தமிழகத்தில் அ.தி.மு.க, மேற்கு வங்கத்தில் மம்தா பானர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸ் போன்ற சக்திவாய்ந்த மாநிலக்கட்சிகள் பி.ஜே.பியுடன் கூட்டணி வைத்திருந்த போதும் இப்போது காங்கிரஸ் முன்பை விட பலம்பெற்றிருப்பதால் பி.ஜே.பியுடன் கூட்டணி வைப்பதற்கு எக்கச்சக்கமான, ஏடாகூடமான நிபந்தனைகளை முன்வைத்து பி.ஜே.பியை திணறடித்து திக்குமுக்காட வைத்து வருகின்றன. இவற்றில் அ.தி.மு.க தலைவி நிபந்தனைகூட இல்லை; கூட்டணியோ கிடையாது என பி.ஜே.பிக்கு முகத்தில் அடித்தாற்போன்ற நடவடிக்கைகளை வெளிப்படுத்தி வருகின்றார். எனவே விஜய்காந்துடன் கூட்டணி சேர்ந்தால் அ.தி.மு.க தலைவியின் அகந்தைக்கும் நல்ல பாடமாக அமையும்.

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பித்தன் பதில்கள்

# பெண்களை மின்சாரத்துடன் ஒப்பிடுகிறார்களே!

ப.உதயகுமார், நீர்கொழும்பு.
கே:- திருமணம் செய்துகொள்ளத் தயங்கும் எனது நண்பன் ஒருவன் குறித்து என்ன நினைக்கிறீர்?
ப:- சிறைவாசம் குறித்து எண்ணித் தயங்குவதில் தப்பில்லை. ஆனால் அறப்படித்த பல்லி கூழ்ப்பானைக்குள் வீழ்ந்த கதையாக கடைசியில் கல்யாணம் கட்டித் தொலைக்கிறார்களே?



மா.செல்வமலர், சாவகச்சேரி.
கே:- காதல் கை கூடாததால் கவலைப் படும்தோழியொருத்திக்கு ஒரு அறிவுரை கூறுவீரா?
ப:- கிட்டாதாயின் வெட்டென மற என்பது அனுபவ வாக்கு.



த. விஜயன், மன்னார்.
கே:- அந்தக் காலத்துச் சினிமாப் பாடல்களோடு இந்தக்காலத்துப் பாடல்களை ஒப்பிடுங்கள் பார்க்கலாம்.
ப:- அந்தக் காலத்தவை இன்று கேட்டாலும் தித்திக்கிறது. இந்தக் காலத்தவை காற்றோடு போய்விடும்.



மு.திருச்செல்வம், மட்டக்களப்பு.
கே:- எப்போதுமே மனைவிக்குப் பயந்து நடக்கும் என்போன்றோருக்கு எப்போது விடுதலை கிட்டும் பித்தரே?
ப:-வியாதியை மருந்து குணமாக்கும். விதிக்கு மருந்துண்டோ? இறுதிவரை சம்சாரசாகரத்தில் உளல வேண்டியதுதான்.



த. கணபதிப்பிள்ளை, பரந்தன்.
கே:- உலகிலேயே பரிதாபத்துக்குரியவர்கள் யார் பித்தரே?
ப:-போயும் போயும் இதிலும் சந்தேகமா? சம்சாரிகள்தான்.

எ. எழிலரசன், திருகோணமலை.
கே:- தற்காலத்தில் பெண்களை மின்சாரத்துடன் ஒப்பிடுகிறார்களே? இது குறித்து உமது கருத்தென்ன?
ப:-மின்சாரத்தைத் தொடாதவரை அதனால் ஆபத்து வராது.

வே. கனகேஸ்வரி, மன்னார்.
கே:- ஔவையார் பாணியில் கேட்கிறேன் எல்லை இல்லாதது எது?
ப:-அதே பாணியில் கூறுகிறேன். ஆசை ஆசைக்கு அளவில்லை.

தி. கமலநாதன், கிளிநொச்சி.
கே:- அண்மையில் திருமணம் செய்து கொண்ட எனக்கும் என் மனைவிக்கும் நீங்கள் கூற விரும்புவதென்ன?
ப:-உமக்கு என் ஆழ்ந்த அனுதாபங்கள் உமது மனைவியின் வெற்றிக்குப் பாராட்டுக்கள்.



ஐ. மனோகரி, பருத்தித்துறை.
கே:- உங்களது குட்டிக்கதை வாசித்து பல காலமாச்சு.. ஒரு குட்டிக்கதை எடுத்துவிடுமேன் பித்ரே?
ப:-தீவிர முருகபக்தரான அவர் நல்லூர் முருகன் சந்நிதியில் மனமுருகித் தொழுது நின்றார். திடீரென்று அவர்முன் அண்மையில் ஒருநாள் காட்சி கொடுத்த முருகப்பெருமான் 'பக்தனே, விரும்பும் வரமொன்று கேள்; தந்தருள்வோம்' என்றார். "முருகா, எனக்கு 10 கோடி ரூபா கிட்ட வரமருளவாய்" என்றார் தயங்கியபடியே. போயும் போயும் எல்லோருமே சுயநலவாதிகளாக இருக்கிறீர்களே? பொது நலன் பயக்கும் வகையிலான வரம் கேட்கக் கூடாதா என்றார் முருகப்பெருமான். ஒருகணம் யோசித்துவிட்டு "அப்பனே, ஒரு முழுநாளுக்கு 24 மணிநேரமும் மின்சாரம் தொடர்ச்சியாகக் கிட்ட வரம் அருள்வாய்" என்றார் பக்தர். அது ஒரு போதும் சாத்தியமில்லை. நீ கேட்ட 10 கோடி பணம் உனக்குத் தருகிறேன். ஆளை விடுசாமி" என்று கூறி 10 கோடி ரூபாயைப் பக்தரின் கைகளில் திணித்துவிட்டு மறைந்தார் முருகப்பெருமான்.



## சொற்சிலம்பம் போட்டி இல: 545

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | | | | |
| 11 | | 12 | | ■ | 13 | | |
| ■ | 14 | | ■ | 15 | | ■ | |
| 16 | ■ | 17 | 18 | | ■ | 19 | |
| 20 | 21 | | | ■ | 22 | | |
| 23 | | | ■ | 24 | | | |

அனுப்புபவர் பெயர் :..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### மேலிருந்து கீழ்

01. பதினோராவது திதி
02. சிரத்தையெடுத்து அவதானித்தல்
03. போன்று
04. செருக்கு
05. பிரிபடமுடியாத என்னைப் பிரிக்கும்போது வருவது
06. பொல்லாங்குப் போக்கு
08. ஒரு நாட்டிய வகை
12. சிவிகை
15. நின்
16. சகாயம்
18. பிரி
19. சிரிப்பூட்டும்
21. நினைவில் இருந்து அகற்று
22. மரம்

### இடமிருந்து வலம்

01. தனியுரிமையைக் குறிக்கும் சொல்
05. பின்னடித்தல்
07. பாதுகாப்புத் தருபவர்
08. இளம் விலங்கு
09. ஒற்றை
10. வணக்கம்
11. கட்டு
13. கோல்
14. அற்பமான தாவர வர்க்கம்
15. மரவேலைக்கான ஆயுதம்
17. இராமன் மகன்
19. ரக
20. தங்களுக்கு
22. இந்துக்களில் சுடுகாட்டில் பெரும்பாலும் நடப்பது இந்தக் கிரியைதான்
23. எரிதரு
24. ஆண்டு

## சொற்சிலம்பம் போட்டி இல. 545

சொற்சிலம்பம் 545 போட்டிக்கான விடைகளை அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2012 ஆம் ஆண்டு நவம்பர் 14 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் நவம்பர் 21 ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.

முதலாவது பரிசாக ரூபா 250உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்பவேண்டிய முகவரி:
சுடர் ஒளி யாழ்.அலுவலகம்,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 542 விடைகள்

**மேலிருந்து கீழ்**

01. சுவாசம். 02.தகுதி. 03. திகதி. 04.ரதி. 05.பதுமை. 08.அடம்பன். 10.பட்டணம். 11.கல. 12.நம். 13. கண்ணன். 14. களி. 16.குறைதல். 17.தபதி. 18.கொசுறு. 20.மான்

**இடமிருந்து வலம்**

01. சுதந்திரம், 06. வாகு, 07. கதி, 08. அது, 09. சதிபதி, 11. கடமை, 12. நலம், 13. கடகம், 15. பகு, 17.தண்ணளி, 18. கொன்றை, 19. பணம், 20.மாசு, 21. தின், 22. ஊன்றுதல்

## போட்டி இல. 542 இல் பரிசு பெற்றோர்

1ஆம் பரிசு — செல்வராசா மிதுனன், இல.6-8/ஏசி, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா.

2ஆம் பரிசு — மு.முத்துராஜா, திக்கிரி லேன், தும்பளை, பருத்தித்துறை.

3ஆம் பரிசு — செல்வி யூலியானா செபஸ்ரியாம்பிள்ளை, வர்ணம்வாசம், இல-66(32), கோவில் வீதி, யாழப்பாணம்.

## பாராட்டுப் பெறுவோர்

**(1) இ.ரேணுகா,**
இல.85/4, கார்மல் வீதி.
குருநகர். யாழ்ப்பாணம்.

**(2) இ.வீரசிங்கம்,**
இல.9/2, இராசதுரை வீதி.
வைரவ புளியங்குளம், வவுனியா .

**(3) தம்பையா யோகராசா,**
சரசாலை தெற்கு,
சாவகச்சேரி.

**(4) பிரசாந் சுகிர்தன்சர்மா,**
இல-68, கோவில் வீதி.
கொழும்பு - 15.

**(5) வே. கார்த்திகேசு,**
விபுலானந்தர் வீதி.
வாழைச்சேனை.

**(6) அ.இ.பாக்கியராஜா,**
இல-88/1 பசல்ஸ்.
ஒழுங்கை. கொழும்பு - 6.

**(7) கனகசபை – நாகேந்திரன்,**
இல-11-3/1 நெல்சன் இடம்.
வெள்ளவத்தை.
கொழும்பு - 06.

**(8) கே.இராஜகோபால்,**
அடைக்கலம் தோட்டம்.
கந்தசுவாமி கோயிலடி. வட்டுக்கோட்டை.

**(9) ப.சிவசூரியர்,**
ஆசிரியர்,
சங்கானை.

**(10) வஸந்தா பாலேந்திரா,**
இல.21. நெல்சன் இடம்.
வெள்ளவத்தை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விளையாட்டு

## டென்மார்க் ஓபன் சாம்பியன் பட்டத்தை வென்றார் சாய்னா



டென்மார்க் ஓபன் பட்மின்டன் தொடரின் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற இந்திய நட்சத்திர வீராங்கனை சாய்னா நெஹ்வால் சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

டென்மார்க்கில் உள்ள ஒடென்ஸ் நகரில் டென்மார்க் ஓபன் சூப்பர் சீரிஸ் பிறீமியர் பேட்மின்டன் தொடர் நடைபெற்றது.

இதன் மகளிர் ஒற்றையர் பிரிவு இறுதிச்சுற்றில் இந்தியாவின் சாய்னா நெஹ்வால், ஜேர்மனியின் ஜூலியானா செங்கை எதிர் கொண்டார்.

இதன் முதல் செட் முதலே அதிரடியாக விளையாடிய சாய்னா 21-17, 21-8 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று, இத்தொடரில் முதன்முறையாக சாம்பியன் பட்டம் வென்றார்.

சமீபத்தில் முடிந்த லண்டன் ஒலிம்பிக்கில் வெண்கலம் வென்ற இவர், நீண்ட ஓய்வுக்கு பின்பு பங்கேற்ற முதல் தொடர் ஆகும்.

இவர் இந்த ஆண்டு வென்ற 4வது பட்டமாகும். முன்னதாக இந்த ஆண்டு நடந்த இந்தோனேஷிய ஓபன், சுவிஸ் ஓபன், தாய்லாந்து ஓபன் தொடர்களில் பட்டம் வென்றிருந்தார்.

மொத்தமாக இது இவர் வென்ற 11வது பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

## காலிறுதி வாய்ப்பை தக்க வைத்துள்ள சென்ஜோன்ஸ் கல்லூரி

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால், 15 வயதுப் பிரிவு பாடசாலை அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி அணியின் ஏ அணி காலிறுதி வாய்ப்பை தக்க வைத்துள்ளது.

சென்ஜோன்ஸ் கல்லூரி ஏ பிரிவு அணி தனது முதலாவது போட்டியில் மட்டக்களப்பு இந்துக் கல்லூரியை எதிர்த்து அக்கல்லூரியின் மைதானத்தில் மோதியது அப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டக்களப்பு இந்து கல்லூரி அணி 25 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 57 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய சென்ஜோன்ஸ் கல்லூரி ஏ அணி 10 ஓவர்களில் 3 விக்கெட்களை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

ஏ அணியானது இரண்டாவது போட்டியில் கின்தோட்ட மகா வித்தியாலய அணியுடன் அக்கல்லூரி மைதானத்தில் மோதியது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி ஏ அணியானது 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்களை இழந்து 169 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் கி.சாந்துஜன் 36 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கின்தோட்ட மகாவித்தியாலய அணி 34 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 79 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக் கொண்டது.

## பிக்பாஷ் தொடரில் ஒப்பந்தம் செய்யப்பட்ட சாமுவேல்ஸ்



இலங்கையில் நடைபெற்று முடிந்த T20 உலகக் கிண்ணத் தொடரில் மேற்கிந்தியத் தீவுகள் அணி கிண்ணத்தை வென்றது. இதன் இறுதிச்சுற்றில் அசத்திய சாமுவேல்ஸ், 56 பந்தில் 78 ஓட்டங்கள் எடுத்து, ஒரு விக்கெட்டும் கைப்பற்றி ஆட்டநாயகனாக ஜொலித்தார்.

இதையடுத்து, இவர் அவுஸ்திரேலியாவில் நடைபெற உள்ள பிக்-பாஷ் தொடரில் மெல்போர்ன் ரெனிகேட்ஸ் அணியில் ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

இந்த அணியில் ஏற்கனவே இலங்கையின் ஓய்வு பெற்ற சுழல் ஜாம்பவான் முரளிதரனும் உள்ளார்.

## எவர்டன் அணி ட்ரோ

குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ், எவர்டன் அணிகள் மோதிய இங்கிலீஷ் பிரிமியர் லீக் கால்பந்து போட்டி ட்ரோ' ஆனது.

இங்கிலாந்தில் உள்ள புல்ஹாமில் நடந்த இத்தொடரில், குயின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ், எவர்டன் அணிகள் மோதின. 2வது நிமிடத்தில் குயின்ஸ் பார்க் அணியின் டேவிட் முதல் கோல் அடித்தார். இதற்கு 33வது நிமிடத்தில் எவர்டன் அணியின் சீசர் ஒரு கோல் அடித்து பதிலடி கொடுத்தார். முதல் பாதியில் இரு அணிகளும் சமநிலையில் இருந்தன. இரண்டாம் பாதியில் இரு அணிகளும் கோல் எதுவும் அடிக்கவில்லை.

முடிவில், போட்டி 1-1 என்ற கோல் கணக்கில் ட்ரோ' ஆனது.

## கிறெம்ளின் கிண்ணத்தை கைப்பற்றினார் வோஸ்னியாக்கி



கிரெம்ளின் கிண்ண டென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதிச்சுற்றில் வெற்றி பெற்று வோஸ்னியாக்கி கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

ரஷ்ய தலைநகர் மொஸ்கோவில் கிரெம்ளின் கிண்ண டென்னிஸ் போட்டிகள் நடைபெற்று வருகிறது.

இத்தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவின் இறுதி ஆட்டத்தில், உலகின் 11ம் நிலை வீராங்கனையான டென்மார்க்கின் கரோலின் வோஸ்னியாக்கி, 9ம் நிலை வீராங்கனையான அவுஸ்திரேலியாவின் சமந்தா ஸ்டோசருடன் மோதினார்.

இப்போட்டியில் வோஸ்னியாக்கி 6-2 என்ற கணக்கில் முதல் செட்டைக் கைப்பற்றினார். சுதாரித்துக் கொண்ட ஸ்டோசர் இரண்டாவது செட்டை 6-4 என்ற கணக்கில் கைப்பற்றினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற மூன்றாவது மற்றும் கடைசி செட்டை 7-5 எனப் போராடி வென்ற வோஸ்னியாக்கி 6-2, 4-6, 7-5 என்ற கணக்கில் வெற்றிபெற்று, கிரெம்ளின் கிண்ணத்தை கைப்பற்றினார்.

இது வோஸ்னியாக்கி இவ்வருடத்தில் வெல்லும் இரண்டாவது பட்டமாகும். மொத்தமாக இவர் வெல்லும் 20வது பட்டம் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைப்பேசிகளில் தட்டச்சு செய்வதற்கு அதிநவீன கையுறைகள் கண்டுபிடிப்பு



கைப்பேசிகள் கண்டுபிடிக்கப்பட்ட காலம் முதல் சில காலத்திற்கு குறுஞ்செய்திகளை தட்டச்சு செய்வதற்கு என கைப்பேசிகளுடன் இணைக்கப்பட்ட இலத்திரனியல் Keyboard-கள் காணப்பட்டன.


பின்னர் தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக தொடுதிரைகளின் மூலம் தட்டச்சு செய்தல் சாத்தியமாக்கப்பட்டது.

இவற்றின் வரிசையில் தற்போது ஆங்கில எழுத்துக்கள் பொறிக்கப்பட்ட அதிவிசேட தொழில்நுட்பத்தினைக் கொண்ட கையுறைகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வயர்லெஸ் தொழல்நுட்பத்தினால் செயற்படக்கூடியதாகக் காணப்படும் இக்கையுறைகளின் விரல் பகுதியில் காணப்படும் எழுத்துக்களை பெருவிரல் கொண்டு அழுத்தினால் போதும் குறிப்பிட்ட எழுத்து கைப்பேசியில் பதிவுசெய்யப்பட்டுவிடும்.

ஏனைய முறைகளில் பிரயாணங்களின் போது கைப்பேசிகளில் தட்டச்சு செய்வது மிகவும் கடினமான காரியமாக திகழ்வதனால் இக்கையுறைகள் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உலகமெங்கும் வெளியிடப்பட்டது விண்டோஸ் 8




மைக்ரோசொப்ட் நிறுவனத்தினால் உருவாக்கப்பட்ட விண்டோஸ் 8 இயங்குதளம் உலகமெங்கும் இப்போது வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கிடையில் இந்த இயங்குதளத்தினை விண்டோஸின் முன்னய பதிப்புக்களிலிருந்து 15 அமெரிக்க டொலர்களைச் செலுத்தி நேரடியாகவே மேம்படுத்தல்(upgrade) செய்ய முடியும்.

32-bit மற்றும் 64-bit பதிப்புக்களாக வெளிவரும் விண்டோஸ் 8 இயங்குதளத்தை நிறுவுவதற்கு கணனியனாது குறைந்தபட்சம் பின்வரும் அடிப்படை அம்சங்களை கொண்டிருக்க வேண்டியது அவசியமாகும்.

1. Processor Speed- குறைந்தது 1 GHz ஆக இருக்க வேண்டும்.
2. RAM - 32dbit பதிப்பிற்கு 1GB ஆகவும், 64-bit பதிப்பிற்கு 2GB ஆகவும் காணப்படுதல் வேண்டும்.
3. Hard Disk - 32bit பதிப்பிற்கு 16GB ஆகவும், 64bit பதிப்பிற்கு 20GB ஆகவும் இருத்தல் அவசியமாகும்.
4. WDDM driver உடன் கூடிய Microsoft DirectX 9 கிராபிக்ஸ் சாதனத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.




# Skype-ன் புதிய பதிப்பு வெளியீடு

இணைய பாவனையாளர்கள் மத்தியில் பிரபல்யமடைந்து வரும் Skypeஆனது மைக்ரோசொப்டின் Windows மற்றும் அப்பிளின் Mac ஆகியவற்றிற்கு என தனது புதிய பதிப்பை அறிமுகம் செய்துள்ளது.

முன்னைய பதிப்பில் Skype-இல் இருந்து பேஸ்புக் கணக்கிற்குள் நுழைந்து நண்பர்களுடன் சட்டில் ஈடுபடும் வசதி தரப்பட்டிருந்தது.

ஆனால் புதிய அம்சங்களுடன் வெளியிடப்பட்டுள்ள இப்புதிய பதிப்பின் மூலம் மைக்ரோசொப்ட் கணக்குகளில் உள்நுழையும் வசதியும், அவ்வாறே நண்பர்களின் Windows Live Messenge கணக்கிற்கு குறுஞ்செய்திகளை அனுப்பக்கூடிய வசதியினையும் இணைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மேலதிகமாக ஆறு மொழிகளையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ள இப்பதிப்பினை விண்டோஸ் 8 இயங்குதளத்திலும் பயன்படுத்த முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# Samsung தயாரிப்பில் உருவாகும் 9260 Galaxy Premier கைப்பேசிகள்




கைப்பேசி உலகில் தற்போது தொடர்ச்சியாக தனது புதிய உற்பத்திகளை அறிமுகப்படுத்திவரும் Samsung நிறுவனம் தற்போது I9260 Galaxy Premier கைப்பேசிகளை தயாரித்துவருகின்றது.

கூகுளின் அன்ரோயிட் 4.1 ஜெல்லிபீன் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் இக்கைப்பேசிகள் 1280 x720 Pixels Resolutionயை கொண்டதும் 4.65 அங்குல அளவுடையதுமான முற்றிலும் தொடுதிரை வசதியினைக் கொண்டிருக்கின்றன.

இவற்றுடன் 1.5GHz வேகத்தில் செயலாற்றவல்ல புரோசசரினையும், பிரதான நினைவகமாக 1GB RAM இனையும் உள்ளடக்கியுள்ள இக்கைப்பேசிகளில் 8 மெகாபிக்சல்கள் கொண்ட அதிநவீன கமெராவும் பொருத்தப்பட்டுள்ளது. இவற்றின் துணை நினைவகமானது 16GB காணப்படுகின்றபோதிலும் microSD card மூலம் அவற்றின் அளவை அதிகரித்துக்கொள்ள முடியும்.

இலங்கையில் உள்ள முன்னணி வளவாளர்களின் பங்களிப்பில் உருவான வழிகாட்டி இதோ! வெளிவந்துவிட்டது.




உங்கள் பிரதிகளுக்கு அருகிலுள்ள சுடர்ஒளி, உதயன் முகவர்களை நாடுங்கள்

தொடர்புகளுக்கு - 071 6850005, 011 5738855

வடமாகானத்தொடர்புகளுக்கு - 071 6182182, 021 5677222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கைக்கு வரப்போகும் பேரழிவு!

இலங்கையில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்படக் கூடும் என்றும் இது பேரழிவை ஏற்படுத்தும் என்றும், இலங்கையின் பேரிடர மேலாண்மைகுழு வல்லுநர்கள் எச்சரித்துள்ளனர். கொழும்பில் இலங்கையின் பேரிடர் கால நடவடிக்கைகளுக்கான குழுவின் ஆலோசனைக் கூட்டம் அன்மையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில், இலங்கையின் தென்மேற்குக் கரை புவித்தட்டில் பிளவு ஏற்பட்டிருப்பட்டதாக நிலநடுக்கத் தடுப்பு நடவடிக்கைக் குழுவின் தலைவர் சகபந்து கூறியுள்ளார்.

குறிப்பாக இந்தோனேசியா- ஆஸ்திரேலியா புவித்தட்டில் இப்பிளவு ஏற்பட்டிருக்கிறது. இதனால் இலங்கையில் மிகப் பெரிய நிலநடுக்கம் ஏற்பட வாய்ப்பிருகிறது என்றார் அவர். கடந்த 1615ஆம் ஆண்டு இலங்கையில் ஏற்பட்ட மிகப் பெரிய நிலநடுக்கம் மிகப் பெரும் உயிரிழப்பை ஏற்படுத்தியிருந்தது. அதைப் போன்ற ஒரு நிலநடுக்கம் வரக்கூடும் என்கின்றனர் புவியியல் வல்லுநர்கள்!

# 5ஆயிரம் மைல்கள் தூரம் விமானத்தில் பயணம் செய்த பாம்பு !




18 அங்குல நீளமுடைய பாம்பு ஒன்று சுமார் 5ஆயிரம் மைல்கள் தூரம் விமானத்தில் பயணம் செய்த சம்பவம் மெக்சிகோவில் இடம்பெற்றுள்ளது. விமானத்தில் பயணிகளின் இருக்கைக்கு கீழ் இருந்த நிலையில் மெக்சிகோவின் கன்குன் விமான நிலையத்திலிருந்து ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரம் வரை இப்பாம்பு விமானத்தில் பயணித்துள்ளது. விமான பணியாளர் ஒருவரே இவ்வாறு பாம்பு இருப்பதை கண்டறிந்து தகவலை வழங்கியுள்ளார். உடனடியாக மேற்படி பாம்பை ஸ்கொட்லாந்தின் வன உயிர் பாதுகாப்பு தொண்டு நிறுவனத்தினர் மீட்டெடுத்துச் சென்றுள்ளனர. திருட்டுத்தனமாக விமானத்தில் பயணம் செய்ததால் இந்த பாம்பிற்கு 'திருட்டுப்பயல்' என அதிகாரிகள் பெயரிட்டுள்ளனர்.

# புரூஸ்லீயின் வீட்டை விற்க தீர்மானம்

புரூஸ் லீயின் வீடு ஹொங்கொங்கில் உள்ளது. இது 5000 சதுர அடி கொண்டது. 2 மாடிகளைக் கொண்ழிட கட்டடம் இது. ஹொங்கொங்கின் கோவ்லான் டாங் பகுதியில் இது உள்ளது. அவர் கடைசியாக வசித்த அந்த வீடு தற்போது யூ பொங்லின் என்பவர் வசம் உள்ளது. இதை இன்னொருவர் வாடகைக்கு எடுத்து 'லவ் ஹோட்டல்' என்ற பெயரில் ஹோட்டலொன்றை நடத்தி வருகிறார்.

இந்த வீட்டை அரசிடம் ஒப்படைத்து நினைவிடமாக மாற்ற யூ முயன்றார். ஆனால் யூ போட்ட பல்வேறு நிபந்தனைகளை ஹொங்கொங் நிர்வாகம் ஏற்கவில்லை. இதையடுத்து நினைவிடமாக்கும் முயற்சி தோல்வியடைந்துள்ளது. இதைத் தொடர்ந்து தற்போது வீட்டை விற்று விட முடிவு செய்துள்ளாராம் யூ. இதுகுறித்து யூ கூறுகையில், "இந்தக் கட்டிடத்தை அருங்காட்சியகமாக்கும் திட்டத்துக்கு அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை. விடுதி நடத்துபவர்கள் 2 ஆண்டுகளாக வாடகைத் தரவில்லை. இதனால், வீட்டை 23 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு விற்றுவிட முடிவு செய்துள்ளேன்" என்றார்.



LG Life's Good

புதிய LG ' ஒப்டிமஸ் L ' வரிசை ஸ்மார்ட்போன்

ஸ்மார்ட்போனுக்கு இன்றே மாறுங்கள்

குறைந்த விலையில் உயர் தொழில்நுட்பத்துடனான ஸ்மார்ட்போன்

optimus L3

android

கொரியாவின் தொழில்நுட்பம்

ஈடிணையற்ற இதன் சிறப்பியல்புகள்

- 1500mAh நீடித்துழைக்கும் பற்றரி
- உயர் தொழில்நுட்பத்திலான அழகிய வடிவமைப்பு
- 800 MHz ப்ரொஸஸர்
- மைக்ரோ மெமரி காட் இன்றி களஞ்சியப்படுத்தும் வசதி (1GB வரையான உள்ளக மெமரி)
- 3MP கெமரா
- 3.2" திரை



ரூ. 24,990/-

ரூ. 21,990/-

TRC APPROVED

இலவசம் 8 அழகிய வர்ண கவர்கள்

கிளிநொச்சி: 0212285411 • யாழ்ப்பாணம்: 0773279992

அங்கீகரிக்கப்பட்ட விநியோகத்தர்கள் விபரங்களுக்கு: 0772654598

Abans

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 17, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ... ஸ்தாபனத்தினால், 2012 ஒக்ரோபர் 31 ஆம் திகதி வெளியிடப்பட்டது.